569

ஆனி JUNE 1944 6 அணா

# காவேரி




READ The Cauveri -
IDEAL MAGAZINE FOR THE HOME






தலைசிறந்த

# கிட்டப்பா

## புகையிலை

— சிவபுரிப் புகையிலையினால் —

— தயாரிக்கப்பட்டது —

**இயற்கையான சுவை, மணம், குணம்**

**ஒருங்கே பொருந்தியது**

# ← கிட்டப்பா →

## சீவலும் பெயர்போனது!

**ரஸிகர்களின் இணைபிரியா நண்பர்கள்**

**கிட்டப்பா மார்க் சீவல் & புகையிலை**

தயாரிப்பவர்கள்:-

## A. D. சுல்தான் & Co.

## கும்பகோணம்.





# இந்தியக் கைத்தொழிலை நீங்கள் ஆதரியுங்கள்




குழந்தைகள் இருக்கும் வீட்டிற்கு நீங்கள் வெறுங்கையுடன் போக மாட்டீர்கள். கைக்கு எளிதாய் உங்கள் பணப்பைக்கும் எளிதாய் **வி. எஸ். & ஸன்ஸ்** பெப்பர்மெண்ட் ஒரு டின் வாங்கிக் கொண்டு போங்கள். **வி. எஸ். & ஸன்ஸ்** பெப்பர்மெண்டையே குழந்தைகள் விரும்பித் தின்னும். அக்குழந்தைகளின் மென்மொழிகளில் இப்பெப்பர்மெண்டின் இனிமையை நீங்களே கண்டு ஆனந்தப்படுவீர்கள். உயர்ந்த முறையில் கை தேர்ந்த வேலைக்காரர்களால் சுகாதார முறைப்படி தயாரிக்கப்பட்டவை.

**ஒரு தடவை வாங்கிப்பாருங்கள்.**

தென் இந்தியா கன்பெக்ஷனரி தொழிற்சாலை

புரோப்ரைடர்கள்:— **வி. எஸ். & ஸன்ஸ்**

**கும்பகோணம்.**

## The Southern India Confectionery Factory

Proprietors:- V. S. & Sons,

**KUMBAKONAM.**

# இண்டோ கம்மர்ஷியல் பாங்க் லிமிடெட்

ரிஜிஸ்டர்டு ஆபீஸ்: மாயவரம் ★ ஸென்ட்ரல் ஆபீஸ்: மதராஸ்

| | | |
|---|---|---|
| வாக்களிக்கப்பட்ட மூலதனம் | ரூ. | 25,00,000 |
| வெளியிடப்பட்ட மூலதனம் | ரூ. | 21,25,000 |
| செலுத்தப்பட்ட மூலதனம் | ரூ. | 18,75,000 |
| காப்பு (ரிசர்வ்) திரவியம் | ரூ. | 2,50000 |
| மொத்த வரவு சிலவுகள் | ரூ. | 2,25,00,000மேல் |

பிராஞ்சுகள்:

| | | | |
|---|---|---|---|
| அமதலவால்ஸா | கும்பகோணம் | மாயவரம் | திருநெல்வேலி |
| அனகாபள்ளி | மதருஸ் | பாலக்காடு | திருச்சினுப்பள்ளி |
| சிதம்பரம் | மாம்பலம் | புதுக்கோட்டை | வேலூர் |
| காஞ்சீவரம் | மைலாப்பூர் | சீயாழி | விஜயபுரம் (திருவாரூர்) |
| ஈரோடு | திருவல்லிக்கேணி | தாட்பள்ளிக்கூடம் | விருதுநகர் |
| காரைக்குடி | மதுரை | தஞ்சாவூர் | விஜயநகரம் |
| | சாலூர் | பார்வதிபுரம் | |

நிர்வாக போர்டார்:

ஸ்ரீ டி. ஆர். வெங்கட்ராம சாஸ்திரி, C. I. E. (சேர்மென்)
, வி. வெங்கட்ராம அய்யர், M.A.,B.L.,
,, ஆர். எஸ். எ. சங்கர அய்யர்

ஸ்ரீ ஆர். விஸ்வநாத அய்யர், B.A.,B.L.,
,, கே. சிவஸ்வாமி அய்யர்
,, எஸ். என். என். சங்கரலிங்க அய்யர்,
மானேஜிங் டைரக்டர்.



## ஜவுளி தினுசுகள்

:: தேவைக்கு!

நம்பிக்கைக்கு உகந்ததாய்த் தற்கால மோஸ்தரில்
உடைக்குத் தக்க போட்டி விலையில்

## புதுச் சரக்குக்கள் கிடைக்குமிடம்

# M. N. நாகேந்திரம் ஸன்ஸ்

ஜரிகை பட்டு ஜவுளி வியாபாரம்.
(மலைவாசல் உள்மண்டபம்)

தெப்பக்குளம் போஸ்ட், திருச்சினுப்பள்ளி.

N. B.-உயர்ந்த பனாரிஸ் தினுசுகள் 6, 8 கெஜம் சேலைகளும் ஏராளமாய் இருக்கின்றன.

# ★ பொருளடக்கம் ★

தாரண மலர் 3 | ஆனி இதழ் 11


இரண்டாம் போர் முனை ... ... 4
கதம்பம் ... ... 5
மந்திரி ஸபை நினைவுகள் ... தி. சே. சௌ. ராஜன் 8
முக்கோணமா, முக்கோணலா? ... க. சந்தானம் 13
நிழல் ... ரா. ஸ்ரீ தேசிகன் 17
தியாகம் ... சு. சுப்புலக்ஷ்மி 21
ரோகிணி ... ரா. வீழிநாதன் 25
கோவில் மணிகள் ... ஆர். கே. விசுவநாதன் 30
ஸ்திரீ சுபாவம் ... கமலா பத்மநாபன் 33
பூவின் பேராவல் ... வி. ஜி. ஸ்ரீநிவாஸன் 37
காதம்பரீ சுயம்வரம் ... கே. சுந்தரம்மாள் 39
இதென்ன உலகம்...! ... கிருத்திவாஸ் 47
"தாம்பத்திய தண்ட விதாயகம்" ... எம். எஸ். கமலா 53


குறிப்பு:-காவேரியில் வெளியாகும் கட்டுரைகளிலுள்ள பெயர்கள் கற்பனைப் பெயர்கள். அவைகளில் அடங்கிய அபிப்பிராயங்கள் அவற்றை எழுதியவர்களுடையனவே. அவைகளுக்குப் பத்திரிகாசிரியர் பொறுப்பாளியல்லர்.




# காவேரி

| | | |
|---|---|---|
| தாரண<br>மலர் 3 | "சென்றிடுவீர் எட்டுத்திக்கும்—கலைச்<br>செல்வங்கள் யாவும் கொணர்ந்திங்கு சேர்ப்பீர்"—பாரதியார் | ஆனி<br>இதழ் 11 |


## இரண்டாம் போர் முனை

வெகு நாட்களாக எதிர்பார்த்த இரண்டாம் போர்முனை பிரான்ஸில் ஆரம்பமாகிவிட்டது. சுமார் 60 மைல் நீளமுள்ள சமுத்திரக்கரையை நார்மண்டியில் நேசதேசப் படைகள் ஆக்கிரமித்துக்கொண்டு ஜர்மானியர்களைத் தங்கள் கடற்படைப் பலத்தினால் விரட்டி வருகின்றன. இத்தகைய வெற்றி சிலநாட்களுக்கு முன்பு அசாத்தியம் என நேசதேசத்தினருக்கே தோன்றியிருக்கும். இன்று அது சாத்தியமாகி ஜர்மானியருக்கே வியப்பையும் ஏக்கத்தையும் உண்டு பண்ணிவிட்டது.

ஜர்மானியர்கள் இதன் காரணமாக முறியடிக்கப்பட்டுவிட்டார்கள் என்றோ, இரண்டாம் போர்முனை வெற்றிகரமாக முடிந்துவிட்டது என்றோ முடிவு கூறுவது முட்டாள்தனம். உண்மையான சண்டை இனிமேல்தான். சமுத்திரக் கரையிலிருந்து உட்பிரதேசங்களுக்குச் செல்லச்செல்ல நேசதேசத்தாருக்குக் கப்பற்படை பயனளிக்காது.

நேசதேசப் படைகள் முதலில் பிரான்ஸில் இறங்குகையில் எதிரி விமானத்தாக்குதலே இல்லை. ஆனால் இன்று அவை முழுப்பலத்துடன் நேசதேசப்படைகளைத் தாக்க ஆரம்பித்துவிட்டன. இப்போரின் முடிவை இப்பொழுது கூறமுடியாது. ஜனாதிபதி ரூஸ்வெல்ட் கூறுகிறபடி இரண்டு மூன்று வாரங்கள் கழிந்தால்தான் அதன் போக்கை நாம் நன்கு அறியமுடியும். இப்பொழுதுதான் ஜர்மானியர் தங்கள் முழுப்பலத்துடனும் எதிர்த்தாக்குதல் ஆரம்பித்திருக்கிறார்கள். இனி முன்னேறுவதுதான் கடினம். இரு சேனைகளும் இனி கைகலக்க வேண்டிய தருணம் வந்துவிட்டது. ஆனால் நேசதேசப்படைகள் பிரான்ஸில் வேரூன்றிச் சண்டை செய்ய வசதி தேடிக்கொண்டுவிட்டன என்பது மட்டும் நிச்சயம். இது போற்றத்தக்க செய்கை. இதுவே இரண்டாம் போர்முனைக்கு முக்கிய முதல் அம்சம் என்பதில் சந்தேகமில்லை.

ஆனால், நேசதேசப்படைகள் வசதியுடன் இறங்கக்கூடிய யாதொரு துறைமுகத்தையும் கைப்பற்றவில்லை என்பது குறிப்பிடத்தக்கது. அவைகளில் சில பிடிபட்டால்தான் நேசதேசப் படைகள் பயமின்றிச் சண்டைசெய்ய முடியும். அதுவரை இறங்கியிருக்கும் படைகளுக்கு வேண்டிய உணவு, தளவாடங்கள், இன்னும் இதர தேவைகளைச் சப்ளை செய்வது கடினமாகத்தானிருக்கும்.

ஐரோப்பியக்கோட்டை பிள்க்கப்பட்டது என்றும் தற்பொழுது சொல்ல இடமில்லை. எல்லாம் கொஞ்சம் போனால்தான் தெரியும்.

நெடுநாளாக எதிர்பார்த்திருந்த இரண்டாம் போர்முனை ஆரம்பமானது உலக மக்களிடையே ஓர் உணர்ச்சியை உண்டுபண்ணியிருக்கிறது. நேசதேசப்படைகள் வெற்றி பெறும் என்று உலகமக்கள் அனைவரும் எதிர்பார்க்கிறார்கள். ஹிட்லரின் போக்கை அறிந்தவர்கள் இது எளிதான காரியமல்ல என்பதை மட்டும் எடுத்துக் காட்டுகிறார்கள். ஆனால் அவர் பலவீனமாயிருப்பது மட்டும் கொஞ்சம் கொஞ்சமாக வெளியாகிறது. இதை எவ்வளவு சீக்கிரத்தில் நமது நேசதேசப்படைகள் வெளிப்படுத்தும் என்பதுதான் பிரச்னை. அடுத்த மாதத்திற்குள் விஷயம் ஒருவாறு தெளிவடைந்துவிடும்.

18 JUN 1944
MADRAS

## காளையும் கலியாணமும்!

உத்தியோகத்தினின்றும் விலகி உபகாரச் சம்பளம் பெற்று, சுகமாக வாழும் பெரியமனிதர்களுக்குத் திடீரென்று பலவகைப் பைத்தியங்கள் பிடித்துவிடுவது வழக்கம்! ஒருவர் திடீரென்று ராமாயணம் வாசிக்கத்தொடங்குவார். இன்னொருவர் பலவித பூச்சிகள் சம்பந்தமான ஆராய்ச்சியில் இறங்குவார். மற்றொருவர் பொது மேடைகளில் பிரசங்கம் செய்யக் குதித்துவருவார். ஓர் ஆசாமி கர்ப்பத்தடை முறைகளைப்பற்றிச் சர்ச்சை செய்வார். இப்படியாக ஓய்வு நேரங்களை ஒழிப்பார்கள். நமது மாஜி வைசிராய், காளைகளின் அன்பர் லின்லித்கோ பிரபுவும் சும்மாவிருக்கவில்லை! கலியாணப்பித்துப் பிடித்து விவாக முறைகளை ஆராய்வதில் கவனம் செலுத்திவருகிறார்.

பிரிட்டனில் பிறப்புவிகிதம் குறைந்துவிட்டதாம். அதற்காகப்பால்ய விவாகத்தைப்பற்றிய ஆராய்ச்சியில் இறங்கி அதுவே பிறப்பு விகிதம் குறைவதைத் தடுக்க வழியெனச் சாதிக்கிறார். ஆண்களும் பெண்களும் வெகு பால்யத்தில் கூடுவதே பிரஜோற்பத்திக்குச் சிறந்த சாதனம் என்று வாதிக்கின்றார்.

சனாதனிகளுக்குச் சரியான தலைவர் அகப்பட்டுவிட்டார்! உடனே பல சபைகள் மாஜி வைசிராய் துரையைக் கவுரவ சனாதனத் தலைவராகக் கொண்டாடலாம். சாரதா சட்டத்தை மாற்ற மறுபடி கிளர்ச்சிசெய்யச் சரியான சந்தர்ப்பம்!

பைத்தியத்தைச் சுற்றிப் பத்துப்பேர், பணக்காரனைச் சுற்றிப் பத்துப்பேரென்றால் சுட்ட குழாயைச்சுற்றியும் பலர் ஏன் கூடக்கூடாது? மாஜி வைசிராயின் ஆராய்ச்சிக்குப் பக்கபலமாகப் பல டாக்டர்களும் கிளம்பியுள்ளார்கள்?

எல்லாம் சரி. பிரஜோற்பத்தியை அதிகப்படுத்துவானேன்? பஞ்சமும், பிணியும் தாண்டவமாடுகையில் எதற்குச் சிரமம்? ஜனத்தொகை அதிகமாக இருந்தால்தான் நாட்டின் பலமும் அதிகரிக்குமென்பது மேல் நாட்டாருடைய கொள்கை. யுத்த தேவ


## லக்ஷ்மி இன்ஷூரன்ஸ் கம்பெனி, லிமிடெட்

[ஹெட் ஆபீஸ்: லாகூர்]

### நம்பிக்கையூட்டும் புள்ளி விவரங்கள்

எங்கள் வியாபாரத்தை விரிவுபடுத்தும் திட்டசம்பந்தமான விசாரணைகள் வரவேற்கப்படும்.

★

விவரங்களுக்கு எழுதவும்:-

பிராஞ் மானேஜர்

4/105, அரமனைக்காரத்தெரு,

ஜி. டி. மதராஸ்.

1943-ல் புதிய பாலிஸிகள் 2 கோடி 20 லக்ஷத்திற்குமேல்

முன் வருஷத்தைவிட கிட்டத்தட்ட (1 கோடி ரூபாய் அதிகம்)

அமுலிலுள்ள பாலிஸிகள் $10\frac{1}{4}$ கோடிக்குமேல்

மொத்த ஆஸ்தி $2\frac{1}{2}$ ,,

ஆயுள் நிதி $2\frac{1}{3}$ ,,

இந்தியாவெங்கும் கிளை ஆபீஸ்கள்

சென்னைக் கிளை ஆபீஸின் விலாஸ மாற்றத்தைக் கவனியுங்கள்

*C. R. சேஷன், M.A.,*

பிராஞ்ச் மானேஜர், மதராஸ்

# காலம் மாறிவிட்டது

**1754**



தாமஸ் மட்ஜ் என்பவரால் கண்டு பிடிக்கப்பட்ட ஆங்கர் எஸ்கேப்மெண்ட் 19-ம் நூற்ருண்டின் ஆரம்பத்தில கடிகாரங்களில் அமைக்கப்பட்டன.



*Thomas Mudge*

**1944**

இன்று கடிகாரங்களில் உபயோகிக்கப்படும் எஸ்கேப்மெண்ட் 200 வருஷங்களுக்கு முன் கண்டுபிடிக்கப்பட்டது. சரியாக மணியைக் குறிக்கும் தன்மை இவ்வாராய்ச்சியைப் பொறுத்தது. இது போன்ற அநேக நூதன ஆராய்ச்சி அம்சங்கள் அடங்கியவை வெஸ்ட் எண்டு கடிகாரங்கள்



**ஸெகண்டஸ் ஸ்கொயர்**

ரோல்டு கோல்டு 10 வருஷ ரகம் ... ரூ. 53



**ஸெகண்டஸ் ஆக்டகன்**

ரோல்டு கோல்டு 10 வருஷ ரகம் ... ரூ. 53

> காலதாமதமாக வருவதால், விளம்பரப்படுத்தப்பட்ட எல்லா ரகஙகளையும் சப்ளை செய்ய சாத்தியமல்ல. ஆயினும் ஸ்டாக்கிற்கு ஏற்றவாறு ஆர்டர்கள் பூர்த்தி செய்யப்படும்.

## வெஸ்ட் எண்டு வாட்ச் கோ.

பம்பாய் — கல்கத்தா.

## WEST END WATCH Co

*Bombay & Calcutta*

தைக்குப்பலியிடச் சிறந்த நிவேதனப்பொருள். ஒரு சிறிய ஜப்பான் தேசம் வெகு துணிச்சலாக யுத்தத்தில் இறங்கியதன் காரணம் அதன் அதிக பிரஜோற்பத்தியே. ருஷ்யா இவ்வளவு நாள் ஜர்மனியுடன் போராட முடிந்ததற்குக் காரணம் அதன் ஜனத்தொகையும், அதன் அரசாங்கம் எடுத்துக்கொண்ட விசேஷ முயற்சியுமாகும். ஜர்மனிதேசத்திலோ பிரஜோற்பத்தி அதிகமாக அபூர்வ முறைகள் கையாளப்படுகின்றன. அதற்கேற்பச் சட்டங்களும் ஏற்படுத்தப்படுகின்றன.

பால்யவிவாகத்தால்மட்டும் பிரஜோற்பத்தி பெருகிவிடுமா? உற்சாகம் வேண்டாமா? சோற்றுக் கவலையைத் தீர்க்கவேண்டாமா? அதுவிஷயமாகவும் மாஜி வைசிராய் நல்ல யோசனைகள் கூறியுள்ளார். "பொருளாதார நிலைமையை மாற்றி அமைக்கவேண்டும். மணவாழ்க்கையைக் கவலையின்றி ஆனந்தமாகக் கழிக்க வசதிகள் செய்யவேண்டும்."

சீமையைப்பற்றியவரை இவ்விதக் கவலை. இந்தியாவைப்பற்றி? பஞ்சத்தால் மக்கள் புழுக்கள்போல் மடிகின்றனர். இந்திய மக்களின் பொருளாதார நிலைமை சீர்பட, அவர்களின் வாழ்க்கையை இன்பமாகச்செய்ய யாது செய்யப்படுகின்றது? அந்த மாஜி வைசிராய் துரைதான் என்ன செய்தார்? அடிமை நாடுகளை ஆண்டவன்தான் காப்பாற்றவேண்டும்!

---

[THE CRY OF DISTRESS by K. Santhanam ஹிந்துஸ்தான் டைம்ஸ், புது டெல்கி, பிரசுரித்தது. விலை ரூ. 2]

1943ல் நாட்டில் ஏற்பட்ட பஞ்சப் பிரதேசங்களைச் சுற்றி நேர்முகமாகப் பார்த்து எழுதப்பட்ட புத்தகமிது. மிகப் பொருத்தமான கார்டூன்களுடன் மிக உருக்கமாக எழுதப்பட்டுள்ளது. இப்பஞ்சத்தை ஒழிப்பதற்கு என்ன முறையைக் கையாளவேண்டுமென்று தெளிவாக எடுத்துக் காட்டியிருக்கிறார் க. சந்தானம். பஞ்சத்தின் ஓலம் இப்புஸ்தகத்தின் பக்கங்களில் நாம் கேட்கிறோம். மிகப் பரிதாபகரமான நிலை. உண்மையை அறிய விரும்புவோர் இதை அவசியம் படிக்கவேண்டும். உணவு தானியங்களின் கொள்கைக் கமிட்டியாரின் சிபார்சுகளும் இப்புத்தகத்தில் பிணைக்கப்பட்டிருக்கின்றன. அநேக படங்கள் அடங்கியுள்ள இந்நூலை அனைவரும் வாசிக்கவேண்டும்.

## ஆசியாவின் எதிர்காலம்

[எ. ஜி. வெங்கடாச்சாரி எழுதியது. ஆசிய ஜோதிப் பிரசுரம் மைலாப்பூர், சென்னை, பிரசுரித்தது. விலை ரூ. 1—4—0]

ஆசியாவின் வருங்கால நிலையைப்பற்றி ஆசிரியர் சமீபகால சரித்திரத்தை ஆராய்ந்து முடிவு கூறுகிறார். தமிழ் மக்கள் இத்தகைய புத்தகங்களைப்படித்துவிஷயமறியவேண்டியது அவசியம். 108 பக்கங்கள்தான் ஒரு மணியில் படித்துவிடலாம், மிகவும் எளிய நடையில் எழுதப்பட்டுள்ளது.

கோடை வெய்யிலின்
கொடுமையை
தகர்த்தெறியுங்கள்




ஜப்கோ
லைம்கிளிஸ்

மூளையை
குளிர்ச்சி செய்கிறது
கேசத்திற்கு
வனப்பையும் அளிக்கிறது
வெய்யிலின்
கொடுமையை குறைக்கிறது

# மந்திரிசபை நினைவுகள்

தி. செ. சௌ. ராஜன்

"சென்னை ஹைகோர்ட் ஜட்ஜ் நியமனம் செய்வது யார்" என்பதைப்பற்றிக் கவனிக்கவேண்டிய அவசியம் ஏற்பட்டது. காங்கிரஸ் மந்திரிசபை அதிகாரம் வகித்த பின்பு, முதல் வருஷத்திலேயே இரண்டு நீதிபதிகளுக்கு மேலாக நியமிக்கப்பட்டுவிட்டார்கள். பிரதம மந்திரியின் சிபார்சின் பேரில் கவர்னரும், வைசிராயும் கலந்து செய்திருக்கலாமென மந்திரிகளில் சிலர் எண்ணினார்கள். அதைப்பற்றி எங்களுக்குள் விவாதம் நடந்தது. கடைசியில் பிரதம மந்திரிக்குங்கூட கவர்னர் யாரைச் சிபார்சு செய்திருக்கிறார் என்பது தெரியாதென்பது வெளியாயிற்று. நியாய ஸ்தலங்களின் நிர்வாகம், ஒழுங்கு, வேலை இவைகளுக்கெல்லாம் மந்திரி சபைக்குச் சட்டரீதியாகப் பொறுப்பு உண்டு. ஆனால் மாகாண உயர் நீதி மன்றத்திற்கு யார் பொறுக்கியெடுக்கலாமென ஆலோசனைகூட கிடையாத முறையில் 1935ஆம் வருடச்சட்டம் இயற்றப்பட்டிருக்கிறது. நிர்வாக முறையில் நீதிபதிகளை அவர்களுடைய யோக்கியதைக்குத் தகுந்தவாறு பொறுக்கவேண்டும். சட்டங்களை இயற்றுவது சட்டசபைகளின் வேலை. அந்தச் சட்டங்களைச் சட்டசபையின் நோக்கத்தின்படி அறிந்து நீதி வழங்கவேண்டுவது நீதிபதிகளின் வேலை. சட்டசபையார் இயற்றும் சட்டங்களுக்கு விரோதமான உணர்ச்சி உடையவர்களை நீதிபதிகளாகக் கவர்னரோ அல்லது அவர் சிபார்சின்பேரில் வைஸ்ராயோ ஏற்படுத்திவிட்டால் ஆட்சிமுறை நடத்துவது கஷ்டமாகிவிடும். மந்திரி சபையைக் கலந்து ஆலோசியாது பிரதம நீதிபதி ஒருவருடைய சிபார்சின் பேரில் கவர்னர் மூலம் வைசிராய் நியமிப்பது பொதுஜன அபிப்பிராயத்திற்கு விரோதமான செயல் என்பது எங்களது முடிவு. இதைப்பற்றி ஸ்ரீராஜாஜி வெகு சிரமப்பட்டுத் தக்க ஆதாரங்களுடன் வாதாடினார்கள். நாங்கள் எல்லோரும் ஒரே மனதுடன் ஒரு முடிவிற்கு வந்தோம். ஹைகோர்ட் நீதிபதிகளை நியமிக்கும் விஷயத்தில் மந்திரி சபையைக் கலந்து ஆலோசித்த பிறகே கவர்னர் சிபார்சு செய்யவேண்டும். எங்களது சிபார்சைத் தக்க காரணங்களைக் காட்டி நிராகரித்து மற்றவர்களை நியமிக்க வைசிராய்க்குச் சட்டபூர்வமான அதிகாரமிருப்பினும் அது பெயரளவில்தான் நடைபெறவேண்டும்.

இது விஷயம்பற்றிச் சீமையிலிருக்கும் இந்தியா மந்திரிக்கு எங்களது முடிவைத் தெரிவிக்கவேண்டும் என்று தீர்மானித்தோம். கவர்னரும் அவ்விதம் செய்ய உடன்பட்டார். மூன்று மாதங்களுக்குப் பிறகு இந்தியா மந்திரியால் எங்கள் கோரிக்கை நிராகரிக்கப்பட்டதெனக் கவர்னர் தெரிவித்தார். இதன் நிமித்தம் மந்திரி வேலையை ராஜிநாமா செய்து சட்டசபைகளைக் கலைத்துவிட்டுப் பொதுமக்கள் அபிப்பிராயத்தை ஒரு புதுத்தேர்தல் மூலம் அறிவதா என்கிற பிரச்னை கிளம்பிற்று. ராஜாஜி ராஜிநாமா செய்யவேண்டுமென வற்புறுத்தினார்.

மனித சமூகத்திற்கு இன்றியமையாத ஜீவாதாரமாகவுள்ள சில உரிமைகள் உண்டு. அவற்றைச் சட்டமியற்று முன்பாகவே "மனித உரிமைகள்" என்ற நியாயத்தால் சட்ட மாறுபாடுகளின் எல்லைக்குள் அகப்படாமலே சித்தாந்தம் செய்வது ஜனநாயக ஆட்சிமுறையின் அடிப்படையான கொள்கை. ஆனால் இந்தியாவிற்கு வழங்கப்பட்ட 1935 ஆம் வருஷச் சீர்திருத்தம் இம்மனித உரிமைகளை உருப்படுத்தவில்லை. தாங்களாகப் பெரிய மனதுடன் இந்தியர்களுக்கு ஒரு பகுதி அதிகாரத்தை உயிரை முறிக்கும் வரையறைகளுடன் வழங்கினார்களே தவிர ஒரு தேசியக் கிளர்ச்சியின் வன்மையால் வழங்கவில்லை. ஆகையால் குடியரசின் பாதுகாப்பு அதற்குக் கிடையாது. இந்த நிலையில் மக்களின் அடிப்படையான சுதந்திரத்தைக் காப்பாற்றக்கூடியவை நீதி மன்றங்களும் சட்டசபைகளும்தான். இதற்கு ஒரு உதாரணம்

காட்டினால் நான் சொல்வது நன்கு விளங்கும். இந்து சமூகத்தில் தீண்டாமையை ஒழிக்கவேண்டுமென்பது காங்கிரஸின் அடிப்படையான நோக்கம். தேர்தல் காலத்திலும் அதற்கு முன்பும் இதைப்பற்றித் தீவிரப் பிரசாரம் காங்கிரஸ் நடத்திவந்தது. இந்தக் கொள்கையை ஒட்டியே ஆலயப்பிரவேச மசோதா சட்ட சபையில் நிறைவேற்றப் பட்டுச் சட்டமாகிவிட்டது. மதுரை மீனாட்சியம்மன்கோவிலில் ஹரிஜனங்களும் இதுவரை உட்புகமுடியாமல் விலக்கப்பட்ட இந்துக்களும் உள்ளே சென்று மற்றவர்களைப்போலத் தரிசனம் செய்யச் சட்டம் உத்தரவளித்தது. கூடியமட்டில் சந்தேகத்திற்கிடமில்லாமலும் மறைவான கற்பனைகளுக்கிடங்கொடாமலும் இருக்கும் வண்ணம் ராஜாஜி சட்டத்தைத் தக்க சட்ட நிபுணர்களைக்கொண்டு தயாரித்துச் சட்ட சபையில் நிறைவேற்றினார். மதுரைக் கோர்ட்டுகளில் சனாதனிகள் ஓர் யுக்தி வாதத்தைக் கிளப்பினார்கள். இன்னின்ன இடங்களில் இன்னின்ன ஜாதியார்கள் நின்று தரிசிக்கலாமென்கிற வழக்கத்தையும் மீறிக் கோவிலில் இதுவரையும் தீண்டப்படாதவர்கள் எல்லோரையும் தாண்டி உட்புகச் சட்டத்தில் அதிகாரம் கிடையாதென்பது அவர்கள் கட்சி. தீண்டப்படாதவர்கள் எவ்விதத்திலும் எவ்விடத்திலும் வரக்கூடாதென்னும் கொள்கையையுடைய சனாதனிகள் பொது மக்களின் உணர்ச்சியின் மூலம் சட்டத்தை மாற்ற இயலாததால் கோர்ட்டின்மூலம் குதர்க்கவாதம் கிளப்பிச் சட்டத்தின் போக்கை மாற்றிவிட முயன்றார்கள். ஒன்றிரண்டு கோர்ட்டுகளில் நீதிபதியின் மூளையில் குழப்பத்தையும் உண்டாக்கினார்கள். காங்கிரஸ் மந்திரி சபை எதிர்வாதம் நடத்தவேண்டி வந்தது. இம்மாதிரி இடையூறுகள் பல நீதிமன்றங்களில் ஏற்படலாம். சட்டசபைகளின் நோக்கத்தையும், சட்டத்தின் கருத்தையும் அறிந்து அதன்படி நீதி வழங்கவேண்டிய பொறுப்பு நீதிபதிகளுக்கு இருக்கவேண்டும். அதற்கு மாறாக நீதிபதிகள் தீர்ப்புச் செய்தால் சட்டத்திற்கும் ஆட்சிமுறைக்கும் பலமில்லாமல் போய்விடும். இதை எண்ணியே உயர்தர நீதிமன்றத்தில் நியமிக்கப்படும் நீதிபதிகளைச் சிபார்சுசெய்யும் உரிமைவேண்டுமென மந்திரி சபை கேட்டது.

இதற்கு எதிர்வாதமும் உண்டு. சட்டத்திற்கு அரசன் முதலாக எல்லோரும் கீழ்ப்படிந்து நடக்கவேண்டும். அதிகாரம் வகிப்பவர்களும் சட்டத்தை மீறக்கூடாது. நீதிபதிகள் சட்டத்தைப் பரிபாலிப்பவர்கள். அவர்களைச் சட்டத்திறன் ஒன்றைக்கொண்டு



நியமிக்கவேண்டும். அவர்கள் நீதி வழங்கும்பொழுது சர்க்கார் என்றும் மந்திரியென்றும் பொருள் படைத்தவர்களென்றும் ஏழைகளென்றும் உள்ளத்தில் உணர்ச்சி கொள்ளக்கக்கூடாது. அவர்களை அரசன் அல்லது அரசனுடைய பிரதிநிதியோ நியமிக்கவேண்டும். அதுதான் முறையென்று சொல்லக்கூடும். ஆனால் இந்த முறை ஜனநாயகமன்று. குடியரசில் உயர்ந்த நீதிவழங்கக்கூடியவர்கள் குடிகளே. அந்த முறையில் வகுப்படும் சட்டங்கள்தான் நீதியாகும். அநீதமாகவாவது அல்லது நடை முறையில் சாத்தியமில்லாமலாவது போகுமானால் அந்தக் குறையை நீதிபதிகள் எடுத்துக்காட்டவேண்டும். அவ்விதம் திருத்தி அமைப்பது மக்கள் பிரதிநிதிகளடங்கிய சட்டசபைகள் செய்யவேண்டும். மாகாண சுய ஆட்சியென்று பறைசாற்றுவதும், குற்றங்கள், தவறுகள் ஏற்படின் அவை தங்கள் பொறுப்பு அல்லவென்று சாதிப்பதும் மத்திய கவர்மெண்டார் போக்கு. திருஷ்டாந்தமாக வங்கப் பஞ்சத்தில் மாகாண மந்திரிகள்மீது முழுக் குற்றத்தையும் டில்லி சர்க்கார் சுமத்தினார்கள். மாகாண சுய ஆட்சியின் பொறுப்பிற்கு ஓர் முக்கிய அம்சமாகிற சென்னை ஹைகோர்ட்டிற்கு நீதிபதிகளை நியமிப்பது மந்திரி சபையைக் கலந்தாலோசியாமல், பிரதம நீதிபதி சிபார்சின்பேரில் கவர்னரும் வைசிராயுமாக நியமிப்பது ஒழுங்கில்லையென்பது எங்கள் வாதம்.

எங்கள் வேண்டுகோள் நிராகரிக்கப்பட்டுவிட்டது. மந்திரி வேலையை ராஜிநாமா செய்ய ராஜாஜி யெண்ணினார். மந்திரி சபையில் சிலர் இந்த விஷயத்தைக் கொண்டு நமது பொறுப்பை விட்டுவிடுவது உசிதமில்லையென யோசனை கூறினார்கள். காங்கிரஸ் மந்திரி சபைகளை ராஜிநாமா செய்ய உத்தரவு போட்டதற்குப் பல மாதங்களுக்கு முன்பே அதிகாரத்திலிருந்து விலகும் பிரச்னை சென்னை மந்திரி சபையில் ஏற்பட்டது. ஒரு சமயம் சட்டசபையில் ராஜாஜி பேசும்பொழுது மந்திரி சபையின் மனப்பான்மையை வெளியிட்டிருக்கிறார். பொது மக்களின் ஊழியர்களாக மந்திரிகள் வேலை செய்யும்பொழுது நாம் என்றென்றும் நீடித்து ஆட்சிபுரிவதாகவே திட்டங்கள் வகுக்கவேண்டும். ஆனால் இந்த எண்ணத்தைக்கொண்டு எவ்விதத்திலும் எவ்வாறாயினும் பதவியில் ஒட்டிக்கொண்டிருக்க வேண்டுமென முடிவு கொள்ளக்கூடாது. அவசியம் நேரிடின் இருபத்து நான்கு மணி நேரத்திற்குள் வேலையை விட்டுப்போக

ஆயத்தமாகவிருக்கவேண்டுமெனச் சொல்லியுள்ளார். அதே மனப்பான்மையில் பதவி வகித்த இரண்டரை வருஷங்களும் தொண்டு செய்துவந்தோம்.

மந்திரி சபையை நடத்தியதில் ராஜாஜியின் போக்கு ஒப்பற்ற ஓர் படிப்பினை. தமக் கேற்படும் துயரம், துன்பம், பகைமை, பொறுமை, அவதூறு எல்லாவற்றையும் தம்முள் அடக்கும் தன்மை அவருடைய இயல்பு. இந்த மனோபாவம் இணையற்ற பெரிய பதவி வகிக்கும் காலத்தில் இன்னும் தீவிரமாகக் காணப்பட்டது. கறுப்புக் கண்ணாடியால் தமது கண்ணோட்டத்தை மறைத்துவிடுகிறார் என்று அவரது விரோதிகள் அடிக்கடி கூறுவதுண்டு. அது ஒரு விதத்தில் உண்மை. அதாவது தம்மைக் கேவலப்படுத்தவோ அவமானப்படுத்தவோ எண்ணித் தம்மைக் கேவலமாக யாராகிலும்பேசினாலும் கூட அவைகளைப் புன்சிரிப்போடு விழுங்கிவிடுவார். இந்தச் சாகசம் உலகில் எவ்வளவு பெயர்களால் செய்யக்கூடும்? தாம் பிரதம மந்திரியாக இருந்த உணர்ச்சியும் ஞாபகமும் அவருக்கிருந்ததாக நினைக்க இடமில்லை. எல்லா மந்திரிகளிலும் மிகக் குறைந்த அவகாசம் அவருக்குத்தான். அவருக்கென தனிப்பட்ட இலாகாக்கள் ஒன்றுமில்லாமலிருந்தால்கூட அவருக்கு ஓய்வு இருந்திருக்க முடியாது. அப்படியிருக்கக் கனத்த வேலை கொண்ட மூன்று இலாகாவை அவர் நடத்தி வந்தார். பிறகு இரு சட்டசபைக்கான வேலைகள். சுகாதாரச் சட்டம் ஒன்றைத் தவிர சட்டசபையில் இயற்றப்பட்ட மற்றச் சட்டங்களனைத்தும் அவராலேயே நிறுவப்பட்டன. இவ்வேலைகளுக்கு நடுவில் பொது மக்களுடைய இயக்கம் ஒன்றுவது தவறாது வந்து நடத்திவைத்து வந்தார். இவ்வளவு பளுவான வேலைகளிலிருந்தும் தமக்கென மற்ற மந்திரிகளைக் காட்டிலும் அதிகமான உதவிகளை அவர் தேட மறுத்துவிட்டார். அவருக்கிருந்த வேலைக் கொடுமையால் மற்ற மந்திரிகளுடைய வேலையில் தலையிட அவருக்கு அவகாசமுமில்லை. மனமும் இல்லை. மற்றவர்களுடைய பிசகுகளைத் தாமே ஏற்று மந்திரி சபைக்குக் குறைவு வராதபடி காத்துக்கொண்டுவந்தார். மந்திரிகளுக்குள் மிகக் குறைந்த பிரயாணம் செய்தவர் அவர்தான். காங்கிரஸ் தீர்மானங்களை அணுவளவேனும் தவறாது பின்பற்றி வந்தார். மந்திரி சபையில் சேர எனக்கு அவர் எழுதிய கடிதத்தில் "உன் சம்பளம் மிகச் சொற்பம்;


பாத்ருடுவின்

# பால சஞ்சீவினி (Regd.)

(இது ஒன்றுதான் அசல் விஜயநகர மருந்து)

குழந்தைகளின் ஈரல்குலைக்கட்டி வியாதிகளுக்குச் சிறந்த மருந்து

சொற்ப காலத்திலேயே நிச்சய குணமளிக்கும்

48 வருஷகாலமாகப் பல்லாயிரக் கணக்கான குழந்தைகளை இக்கொடிய குலைக்கட்டி வியாதியினின்று காப்பாற்றியிருப்பதனால் பல பிரக்யாதி பெற்ற டாக்டர்கள் இச்சஞ்சீவினியை உபயோகித்துக் கொண்டிருக்கிறார்கள்.

எல்லா மருந்து ஷாப்புகளிலும் கிடைக்கும்.

போலி மருந்துகளைக்கண்டு ஏமாறாதீர்கள்

டாடர் பிள்ளா பாபய்ய பாத்ருடு & பிரதர்,

11, தெற்கு மாடவீதி, மைலாப்பூர், மதராஸ்.

கும்பகோணம் கிளை :—
7, சாரங்கபாணி கோவில்
கீழவீதி.

திருச்சி கிளை :—
15, புகழியபிள்ளை தெரு,
தெப்பக்குளம் போஸ்டு

வேலையும் ஆறுமாதத்திற்குமேல் நீடிப்பது சந்தேகம், எனினும் நீ வந்தால் நலம்" என்று கண்டிருந்தார். வெளியூர்களிலிருந்து வரும் மந்திரிகளுக்குச் சென்னையில் வீடு பார்க்கும்படி தமது நண்பர் ஒருவருக்குச் சொல்லிய பொழுது "மந்திரிகளுக்கு 50 ரூபாயிலிருந்து 75 ரூபாய்க்குமேல் போகாமல் வீடு பார்க்க வேண்டும். ராஜனுக்கு மட்டிலும் நூறு ரூபாய்க்குக் குறையாமல் பார்க்கவேண்டும்" என்றார். இது என் பேரில் பிரியத்தினாலாவது அல்லது பிறர்பேரில் அன்புக் குறைவினாலாவது சொல்லிய பேச்சல்ல. நான் பெரிய பங்களாவில் வெகு வருஷங்கள் வசித்ததினாலும் சம்பளத்தையே நம்பிக் காலம் கடத்தவேண்டிய அவசியமில்லாதிருந்ததினாலும் இவ்விதம் சொல்லியிருக்க வேண்டுமேதவிர வேறு காரணம் எதுவும் இருக்கமுடியாது. மாதம் ஐந்நூறு ரூபாய் சம்பளம் வாங்கும் முறையைப் பற்றிய புகார் ஒன்று நடந்தது.

காங்கிரஸ் மந்திரி சபைக்குப் பொறுப்பாளிகள், அவர்களைச் சட்டசபைக்குப பொறுக்கிய வாக்காளர்கள், யாருக்காகிலும் மந்திரி சபை பதில் சொல்லவேண்டியிருந்தால் அது வாக்காளர்களுக்கே. ஆனால் காங்கிரஸ் ஒரு திட்டமியற்றி அதன்பேரில் வாக்குக்கள் வாங்கி அபரிமிதமான வாக்குக்களால் சட்டசபையில் ஆதிக்கம் பெற்றமையால் வாக்காளர்களுக்கு மட்டில் அல்லாமல் காங்கிரஸால் நியமிக்கப்பட்ட பார்லிமெண்டரி போர்டாருடைய கண்காணிப்பிற்கும் அதன் மூலமாக மகாத்மா காந்தியின் தணிக்கைக்கும் உட்படவேண்டியிருந்தது. சென்னையிலிருந்து ஒருவர் அவருக்கு எழுதிய கடிதத்தில் சென்னை மந்திரி சபையார் மாதம் ஐந்நூறு சம்பளம் பெறுவதைப் பற்றியும் மோட்டார்கார் வாங்கியதைப் பற்றியும் புகார் செய்திருந்தார். அதற்கு மகாத்மாஜி ராஜாஜிக்கு எழுதிய கடிதத்தில் பின் வருமாறு குறிப்பிட்டிருந்தார்: "நீங்கள் மந்திரி சபை நடத்துவதில் என் கொள்கைகளுக்கு மாறுகச் சில நிகழ்ச்சிகள் நடந்திருப்பதைக் குறிப்பிடுகிறேன். முதலாவது காங்கிரஸ் தீர்மானப்படி உயர்ந்தபடியான சம்பளம் மாதம் ஐந்நூற்றுக்குமேல் வாங்கக் கூடாதென்று சொல்லியிருந்தும் நீங்கள் எடுப்பிலேயே உயர்தரச் சம்பளத்தை ஏற்படுத்திக்கொண்டுவிட்டீர்கள். இது நியாயமாகத் தோன்றவில்லை. இரண்டாவதாக, சர்க்கார் செலவில், அதாவது பொதுமக்கள் செலவிலிருந்து. ஒவ்வொரு மந்திரிக்கும் சட்டசபைத் தலைவருக்கும் ஓர் புதிய மோட்டார் கார் வாங்கியிருக்கிறீர்கள். மூன்றாவது அதற்காகும் செலவிற்காக மாதம் தலா நாற்றைம்பது ரூபாய் வீதம் அலவென்ஸும் ஏற்படுத்திக்கொண்டிருக்கிறீர்கள். என்னிஷ்டப்படி மந்திரி சபை ஏற்பட்டால் நான் மாதம் ஒன்றுக்கு எழுபத்தைந்து ரூபாய்க்கு மேல் கொடுக்கமாட்டேன். மோட்டார்கார் வாங்கிக் கொடுக்கமாட்டேன். உத்யோக ஸ்தலங்களுக்கு நடந்தோ அல்லது பஸ் அல்லது டிராம் வண்டிகளிலோ தான் போக வேண்டுமென விதிப்பேன்" என்று இவ்வாறு எழுதியிருந்தார். சென்னை மாகாண மந்திரிகள் எவ்வளவு எளியவர்களாக இருந்தாலும் மாதம் எழுபத்தைந்து ரூபாய்க்குள் மந்திரியாக வேலை பார்க்க முடியுமென எனக்குத் தோன்றவில்லை. இம்மாதிரி ராஜாஜிக்குக் காந்திஜியினிடமிருந்தும், பார்லிமெண்டரிபோர்டாரிடமிருந்தும் வகையறியாத எண்ணற்ற தொல்லைகள் ஏற்பட்டுக்கொண்டிருந்தன. என் அபிப்பிராயப்படி இதற்கு விமோசனம் ஒன்றேதான். காந்திஜி அவர்களே ஒரு சிறிய மாகாணத்தை (ஒரிஸ்ஸா போன்றதை) தாமே எடுத்துக்கொண்டு நடத்திக்காட்டினாலொழிய வேறு வழி கிடையாது என்பதே.

மந்திரிகளைப் பொது மக்கள் தங்கள் சொந்த வேலைகளுக்காகவும் பொது விஷயங்களுக்காகவும் அடிக்கடி பார்க்க விரும்புவது வழக்கம். பொதுஜன ஆட்சி முறையில் தனிப்பட்ட ஒவ்வொருவனும் மந்திரியை அணுகத் தனக்கு அதிகாரமுண்டு என்றே எண்ணினான். ஆகையால் மந்திரிகளைக்காண வருபவர்களின் தொகை ஏராளமாயிற்று; அக்கப்போர் கடிதங்களைவிட, கையெழுத்தில்லாத மொட்டைக் கடிதங்களைவிட, பன்மடங்கு அதிகரித்தது. கடமைப்பட்டுள்ள வேலைகளைச் செய்து முடிப்பதா அல்லது சென்னை மாகாணத்திலுள்ள ஒவ்வொரு குடிகளின் முறையீடுகளைத் தாங்களே நேரில் கவனிப்பதா? எனக்கு ஒன்றும் விளங்கவில்லை. ஒருநாள் காலையில் எனது நண்பர்கள் சேலத்திலிருந்து நகரத் தண்ணீர் ஸப்ளை விஷயமாக என்னை நேரில் சந்தித்து வற்புறுத்துவதற்காக வந்தார்கள். நான் இது விஷயத்தைப்பற்றி அவர்களிடம் அடிக்கடி பேசி, என்னாலியன்றதைச் செய்துவந்திருப்பது அவர்களுக்கும் தெரியும். மணி பதினொன்றுக்குக் கவர்னர் மாளிகையில் அன்று மந்திரி சபைக் கூட்டம். அதற்குப் புறப்படுவதற்காக நான் அவசரமாகக் காலைச் சாப்பாட்டை முடித்துக்கொண்டு புறப்பட வேண்டியிருந்தது. வந்த நண்பர்களைக் காக்க

வைக்கவேண்டியிருந்தது. அதனால் அவர்களுக்குச் சற்று மனக்கலக்கமேற்பட்டது. மறுபடி வெளி வந்து வண்டியிலேறப் போகும்பொழுது வந்த காரியமென்ன வென்று கேட்டேன். அவர்கள் சேலம் தண்ணீர் சப்ளை விஷயந்தான் என்றார்கள். சற்றுத் தங்கியிருந்து கவனித்துக் கேட்க அவகாசமில்லை. ஆகையால் சற்றுக் கேலியாகவே "என்னால் காவேரி நதியைத் திருப்பிவிடமுடியுமா" வென்று கேட்டேன். நான் கேட்டது தவறு எனினும் என் பேரில் குறைகூறி ராஜாஜியிடம் அவர்கள் முறையிட்டார்கள். இம்மாதிரி பல சம்பவங்கள். தமது சொந்த விஷயமாக ராஜாஜியைச் சந்திக்க ஒரு வியாபாரி விரும்பினார். அதற்கு அவர் இடம் கொடுக்கவில்லை. ஒருநாள் இரவு சென்ட்ரல் ஸ்டேஷனில் இரண்டாம்வகுப்பு வண்டியில் ராஜாஜிக்குப் படுக்க இடம் ரிசர்வ் செய்யப்பட்டிருப்பதைப் பார்த்த இந்த வியாபார நண்பர் காலியாக இருந்த எதிர்ப் படுக்கைக்குத் தாம் ஓர் சீட்டு வாங்கி ரெயில் புறப்படும் சமயத்தில் தாம் அந்த இடத்தில் அமர்ந்தார். ரெயில் புறப்பட்டுச் சிலதூரம் சென்றதும் வியாபாரி வெகு நாளாகக் காத்துக்கொண்டிருக்கும் தமது சொந்த அலுவலைப்பற்றிப் பேச ஆரம்பித்துவிட்டார். வண்டி அடுத்த ஸ்டேஷனில் நின்றவுடன் ராஜாஜி காலியாகவிருந்த ஒரு முதல் வகுப்பு வண்டியைத் தமக்காக ரிசர்வ் செய்துகொண்டு வியாபாரியிடமிருந்து ஓடி அங்கு மறைந்து தப்பித்துக் கொண்டார். முதல் வகுப்புத் தனி வண்டிப் பிரயாணம் மற்ற ஒரு விதத்திலும் பயன் படாவிட்டாலும் இம்மாதிரி உபத்திரவத்தினின்று தப்புவதற்குப் பயன்பட்டது.

ராஜாஜி சென்னை தியாகராய நகரில் ஒரு சிறியவீட்டில் ஐம்பது ரூபாய் வாடகையில் குடியிருக்கிறார். பிரதமமந்திரியானதும் அதே வீட்டிலேயேதான் வசித்துவந்தார். தமது வீட்டு வாசலில் வில்லைபோட்ட சேவகர்கள் ஒருவரும் காத்திருக்கக்கூடாதென உத்தரவிட்டார். இதன் விளைவு அவர் வீடு அவருக்குச் சிறைக்கூடமாயிற்று. வாசல் கதவு எப்பொழுதும் தாளிட்டு வைக்கவேண்டிய அவசியம் ஏற்பட்டுவிட்டது. அவரது மகன் நரஸிம்மனோ அல்லது குமாஸ்தாவில் யாராகிலும் ஒருவரோ அடுத்த அறையிலிருந்து கொண்டு வருபவர்களைக் கண்டு பேசி ராஜாஜியைக் கலந்துகொண்டு உள்ளே அனுமதிப்பது வழக்கமாகிவிட்டது. ஹிந்தி எதிர்ப்பின் கூட்டத்தாருடைய தொல்லைகளுக்காக அவர் வீட்டிற்கு எதிர்ப்புறம் ஐம்பது கஜத்திற்கப்பால் ரிசர்வ் போலீஸ் படை எப்பொழுதும் பாரா கொடுத்துக்கொண்டிருந்தது. இந்த அமளிக்கு நடுவில் ஏதோ ஓர் ஏழைப் பள்ளிக்கூட உபாத்தியாயருக்கு வேலை போய் விட்டது. பிள்ளைகுட்டிக்காரர். அவர் ராஜாஜியைக்காண விரும்பினார். பார்க்கமுடியவில்லை. முடிவில் அவர் மனைவி ராஜாஜியின் வீட்டு வாயிலில் தவங்கிடந்து, ராஜாஜி ஆபீஸிற்குப் போகப் புறப்படுமுன் வாசற்படியில் குறுக்கே படுத்துக்கொண்டு சத்யாக்கிரகம் செய்தாள். வாசலில் கார் காத்துக்கொண்டிருக்கிறது. இந்த அம்மாளும் சாதகமான பதில் பெறாமல் வழிவிட மறுத்தாள். ராஜாஜி வீட்டின் பின்புறமாகச் சென்று தெருவை அடைந்து சத்தமில்லாமல் கால் நடையாகக் கோட்டையிலிருக்கும் தமது கார்யாலயத்திற்குப் புறப்பட்டு விரைந்து நடந்தார். சிறிது தூரத்திற்கப்பால் காரில் போய்க்கொண்டிருந்த நண்பர் ஒருவர், ராஜாஜியைத் தமது வண்டியிலேற்றிக் கொண்டுபோய் கோட்டையில் விட்டார். இந்தமாதிரியான மந்திரியையும், அவர் சபையையும் யாராகிலும் கேட்டதுண்டா, கண்டதுண்டா?


# சீனிவாஸ்
# கார்டன்ஸ்

உயர்தர காய்கறி விதைகளுக்கும் ஒட்டு மாங்கன்றுகள் இதர ஒட்டுப் பழச் செடிகள் புஷ்பச் செடிகள் மற்றும் இதர செடிகளும் நம்மிடம் கிடைக்கும்.

விபரங்களுக்கும் கேட்லாக்குக்கும் எழுதவும்

## ஸ்ரீனிவாஸா கார்டன்ஸ்

கடலங்குடி P. O. (Via) நாச்சியார்கோவில்
கும்பகோணம்.

# முக்கோணமா, முக்கோணலா?

க. சந்தானம்

இம்மகா யுத்தம் தொடங்கி ஏறக்குறைய ஐந்து வருஷமாகிவிட்டது. அதன் கொடுமை நாளுக்குநாள் அதிகரித்து வருகிறது. ஜெர்மானியர் அழிக்காத பாகங்களை நேசதேசத்து விமானங்கள் அழித்துவருகின்றன. இதேமாதிரி ஐரோப்பிய யுத்தம் இன்னும் இரண்டுவருஷம் நடந்தால், அந்தக் கண்டமே அதோகதியாகி நாகரிகத்தின் நரகமாகிவிடுமென்று தோன்றுகிறது. ஆனால் ஜெர்மனியின் தோல்விமட்டும் நிச்சயம். அத்தோல்வியுடன் ஐரோப்பாவின் பல தேசங்களில் போரின் கொடுமைகளை நகைக்கும் கோரச்சொற்களுடன் புரட்சித் தீப் பரவலாம். அங்கிலேயில் பிரிட்டிஷாரும் அமெரிக்கர்களும் ஜப்பானுடன் விடாப் போர்புரியத் தயாராக வருவார்களாவென்று இப்பொழுது கூறமுடியாது. ஜப்பானும் ஜெர்மானியரின் வீழ்ச்சியைக் கண்டு நடுங்கித் தான் வென்ற நாடுகளில் பலவற்றை விட்டுச் சந்திசெய்துகொள்ள முன்வரலாம். தவிர ஹிட்லர் தோல்வியுற்றதும் ருஷியாவைப் பொறுத்தவரையில் யுத்தம் முடிவுபெறும். அமெரிக்கர்களும் பிரிட்டிஷ் சாம்ராஜ்யமும் ஜப்பானுடன் தீராப்போர் தொடர்ந்தால், ஐரோப்பா கண்டம் முழுதும் ருஷியாவின் செல்வாக்குக்குட்பட்டுவிடும். இதையெல்லாம் யோசித்தே பிரிட்டிஷ் பிரதம மந்திரி சர்ச்சில் 'ஐரோப்பிய யுத்தம் முடிந்ததும் ஓர் கட்டம் பூர்த்திபெறும்; அதன்பிறகு போரின் இரண்டாவது கட்டம் ஆசியாவில் ஆரம்பமாகும்' என்று கூறிவந்திருக்கிறார். அவர் சமீபத்தில் பார்லிமெண்டில் இங்கிலாந்தின் வெளிநாட்டு ராஜ நீதியைப்பற்றிப் பேசுங் காலையில் ஐரோப்பாவைப்பற்றியே பேசினார். ஆதலால் இந்தக் கட்டுரையிலும் ஐரோப்பிய நிலைமையைப்பற்றியே எழுதுகிறேன். இதிலிருந்து ஆசியாகண்டத்தில் நடைபெறும் சம்பவங்கள் முக்கியமானவையல்லவென்றோ வருங்காலத்திலும் சென்ற முந்நூறு வருஷங்களைப்போல் ஐரோப்பாவே உலகச் சரித்திரத்தில் முன்னணியிலிருக்குமென்றோ நான் நினைப்பதாக வாசகர்கள் எண்ணக்கூடாது. பாக்கிய சூரியன் ஐரோப்பாவில் அஸ்தமித்து வருகிறது. அமெரிக்காவில் உச்சியடைந்து ஆசியாவில் உதயமாவதைக் காண்கிறோம். ஆனால் இதன் காலபரிமாணங்கள் தனி மனிதனுடைய தினத்தைப்போலன்று. கண்டங்களின் பெருக்கும் அழிவும் புலப்படுவதற்குப் பல தலைமுறைகளாகும். எஞ்சின் நின்றுவிட்டபோதிலும் மலைப்பாதையில் கீழ் நோக்கிச் செல்லும் மோட்டார் வேகமாக ஓடும். அதுபோலவே இந்த நூற்றாண்டு முழுவதும் ஐரோப்பாவின் பெருமை ஓரளவு இருந்துவருமென்று எதிர்பார்க்கலாம். படிப்படியாக க்ஷீணித்து அநேகமாக அடுத்த நூற்றாண்டில் மற்றக் கண்டங்களுக்குப்பின் தங்கிவிடும்.

குழப்பக் காலங்களில், ஆயுத பலமே முக்கியமானது. இரண்டாம் முனை ஏற்படாமலும், அமெரிக்க பிரிட்டிஷ் சைனியம் ஐரோப்பா கண்டத்தில் பிரவேசிக்காமலும் ஜெர்மனி தோற்றுவிட்டால் ருஷியசேனையொன்றே முக்கிய ஆயுத பலமாகவிருக்கும். அதோடு ஜெர்மானியர் பலாத்காரமாக ஆக்கிரமித்து அடக்கி வைத்திருக்கும் நாடுகளில் அவர்களை எதிர்த்துவரும் கொரில்லாப்படைகளில் பெரும்பாகம் பொது உடைமைக் கக்ஷியைச்சேர்ந்தவை. இவ்விரண்டும் சேர்ந்து ஐரோப்பிய தேசங்களிலெல்லாம் பொதுவுடைமைப் புரட்சி யுண்டாக்கி அபேதவாத ஆட்சியை ஸ்தாபிக்குமென்பதில் சந்தேகமில்லை. அப்படியானால் ஐரோப்பாவிற்குப் பெரிய கேடு வந்துவிடுமென்று நான் கூறவில்லை. மற்ற முடிவுகளைக் காட்டிலும் இதே மேலானதாக இருக்கலாம். ஆனால் இது சாத்தியமென்று நான் நினைக்கவில்லை. இரண்டாம் முனையில்லாமல், ருஷியா இனித் தானாக முன்னேறுவது கடினம். சாத்தியமானாலும், ஸ்டாலினும் ருஷியத் தலைவர்களும் அதற்குவேண்டிய நரபலி கொடுக்கச் சம்மதிப்பார்களாவென்பது சந்தேகம். இந்த மூன்று வருஷங்களில் ஒரு கோடி ருஷியர்கள் தங்கள் தேசத்தைப் பாதுகாக்க உயிர்துறந்திருப்பார்கள். தொழிற்சாலைகளும், விவசாயப் பண்ணைகளும் சின்னாபின்னப் பட்டிருக்கின்றன. ருஷிய எல்லையைத் தாண்டி ஜெர்மனியின் எல்லையை நெருங்கும்பொழுது ஜெர்மானியரின் போர்த்திறமையோடு தாய் நாட்டைக் காக்கும் வீராவேசமும் கூடிவிடும். ஆதலால் இனி ஜெர்மானிய சைனியத்தை முறியடிக்கும் முயற்சியில், அமெரிக்க

பிரிட்டிஷ் சேனைகளும் பூராப் பங்கு எடுத்துக்கொள்ள வேண்டிவரும். சில மாதங்களுக்குள் பிரான்சு, பெல்ஜியம், ஹாலண்ட் முதலிய தேசங்களில் இரண்டாம் முனை ஏற்படுமென்று எதிர்பார்க்கலாம்.

ஆதலால், யுத்தமுடிவில் மூன்று பெரிய சேனைகள் ஐரோப்பா கண்டத்தில் இருக்கும். இம்மூன்றும் ஏகோபித்து ஒரு திட்டம் போட்டு அமுல் செய்தால், அதைத் தடுக்க வேறு எந்த சக்தியுமிராது. இந்தச்சேனைகள் தம்தம் அரசாங்கத்திற்குக் கீழ்ப்பட்டு நடக்குமாதலால், இங்கிலாந்து, அமெரிக்க ஐக்கிய நாடுகள், ருஷியா இம்மூன்று அரசாங்கங்களின் நீதிகளைப் பொறுத்தே சமாதானமேற்படும். ஐரோப்பாவைச் சுற்றிலும் இவை ஓர் முக்கோணமாக வளைத்துக்கொண்டு, சுதந்திரம், குடியரசு, தர்மம், தயை என்ற கொள்கைகளைக் கடைப்பிடித்து ஸ்திரமான அரசாங்கங்களை எல்லா நாடுகளிலும் ஏற்படுத்தினால் நிலைபெற்ற சமாதானமுண்டாகும். அப்படியின்றி, மூன்று வல்லரசுகளும் மூன்று விதமாகப் பிரிந்து ஒவ்வோர் நாட்டிலும் மூன்று கக்ஷிகளை ஆதரித்தால், குழப்பம் பெருகி மூன்றாவது உலக யுத்தம் ஆரம்பமாகும். சர்ச்சில், ரூஸ்வெல்ட், ஸ்டாலின் இவர்களுக்கு இது தெரியாததன்று. மூவரும் ஒற்றுமையுடன் காரியங்களையெல்லாம் சாதிக்கவேண்டுமென்றுதான் விரும்புகிறார்கள். ஆனால் ஒரு குடும்பத்தில் கூட மூன்று சகோதரர்கள் ஒன்று சேருவது சுலபமல்ல. இம்மூன்று தலைவர்களும் தங்கள் நாட்டின் நலத்தைக் காக்கவேண்டும், தங்கள் கொள்கைகளைப் பின்பற்றி நடக்கவேண்டும், ஒவ்வோர் நாட்டிலும் தங்களுக்குச் சாதகமான கக்ஷிகளை ஆதரிக்கவேண்டும்.

மூன்று வல்லரசுகளுள் அமெரிக்கா ஐக்கிய நாடுகளுக்கு ஐரோப்பாவில் ஆகவேண்டிய அரசியல் லக்ஷியமொன்றுமில்லை. வியாபார வசதிகள் போதும். தவிர யுத்தத்தால் நாசமடைந்த பிரதேசங்களுக்குச் சண்டை நின்றவுடன் உணவும் உடையும் கொடுப்பதற்கு அமெரிக்க அரசாங்கத்திற்குத்தான் சக்தியிருக்கும். அமெரிக்க சைனியமிருக்குமிடங்களில்தான் அமெரிக்க உதவியும் அதிகமிருக்குமாதலால் அமெரிக்க சைனியத்தைப் பல தேசங்கள் வருந்தியழைக்குமென்று எதிர்பார்க்கலாம். ஜெர்மானிய சைனியம் தோல்வியுற்றதும் ஜெர்மனியை மூன்றுபாகமாகப் பிரித்து ஒவ்வோர் சைனியத்திடமும் ஒரு பாகத்தை ஒப்புவிக்க வேண்டுமென்றதோர் யோசனை இருந்து வருகிறது. இது அமுலுக்குவந்தால் அமெரிக்க சைனியத்தின் வசமிருக்கும் பாகத்திலேதான் புதிய ஜெர்மனி பிறக்குமென்று எதிர்பார்க்கலாம்.

ருஷியாவுக்கும் இங்கிலாந்துக்கும் சுயநல உத்தேசங்களுண்டு. பின்லாந்து பால்டிக் பிரதேசங்கள், போலந்து, ருமேனியா, பல்கேரியா, ஹங்கேரி முதலிய தேசங்கள் ருஷியாவின் குடையின்கீழ் இருக்கவேண்டுமென்று ஸ்டாலின் பிடிவாதமாகச் சாதித்துவிடுவார் என்பதில் சிறிதும் சந்தேகமில்லை. அத்தேசங்களில் பூராப் பொதுவுடைமை ஆட்சியை ஸ்தாபிக்க முயலுவார் என்று எண்ணக்கூடாது. கூடியவரையில் ஆட்சிமுறையைப் பற்றிய பிரச்னைகளை நாட்டின் மக்களுக்கே விட்டுவிடுவார். ஆனால் பொது உடைமைக் கக்ஷிகளின் செல்வாக்கு இத்தேசங்களில் ஓங்கும். அவர்களிடமே ஆயுதபலமும் அதிகமாகவிருக்கும். ஆதலால் சாதாரண குடியரசிலிருந்து பூர்ணப் பொது உடைமை வரையில் வெவ்வேறு படியில் இருக்கும் அரசாங்கங்கள் இந்நாடுகளில் தோன்றும்.

இங்கிலாந்திற்கோ தனக்கருகாமையிலுள்ள கடலோரப் பிரதேசங்களையும் மத்திய தரைக் கடலோரப் பிரதேசங்களையும் தன் வசம் வைத்துக்கொள்ளுவது அவசியமாகும். ஹாலண்டு, பெல்ஜியம், நார்வே தேசங்களும் மத்தியதரைக் கடலில் கிரீஸ் தேசமும் பிரிட்டிஷ் ஆதரவை விரும்பித் தேடுமென்பது நிச்சயம்.

ஆனால் பிரான்சு, இத்தாலி யூகாஸ்லோவியா முதலிய தேசங்களில் மூன்று வல்லரசுகளுக்கும் பல சிக்கல்கள் உண்டாகுமென்று எதிர்பார்க்கிறேன். யூகாஸ்லோவியாவை எடுத்துக்கொள்ளுவோம். அங்கே ஹிட்லரை முதலில் எதிர்த்தவர் மிசிலோவிச் செட்ளிக் என்ற பிரக்கியாதிபெற்ற கொரில்லாப் படைகளைத் திரட்டியவர் அவரே. ஆனால் பொது உடைமைப் படைகள் மார்ஷல் டைடோவின் தலைமையின்கீழ் எழுந்ததும், மிகிலோவிச்சின் நிலைமை திரிசங்கு சொர்க்கமாகிவிட்டது. இரண்டு எதிரிகளுக்கு நடுவில் அகப்பட்டுக்கொண்டார். மார்ஷல் டைடோவுக்கு முதலில் ருஷியாவிலிருந்தே உதவி கிடைத்தது. அவர் கை ஓங்குவதைக் கண்டு, சர்ச்சிலும் மிகிலோவிச்சை விட்டுவிட்டு டைடோவுக்கு ஆதரவளிக்க ஆரம்பித்தார். வெற்றிக்காலத்தில் மார்ஷல் டைடோ ருஷியாவுடன் சேர்

ந்துகொண்டு ஓர் புதிய ஆட்சிஸ்தாபிப்பாரா அல்லது லண்டனிலிருக்கும் மன்னர் பீடரை ஏற்று ஆங்கில அரசாங்கத்தாரின் நன்மதிப்பை நாடுவாராவென்று கூறமுடியாது.

பிரான்சு தேசம் இங்கிலாந்துக்குக் கீழ்ப்பட்டிருக்க முடியாது. ஜெர்மனி நிராயுதமாகச் செய்யப்பட்டால் பிரிட்டிஷ் தயவை நாடத் தேவையில்லை. அமெரிக்க உதவி கொண்டு மறுபடியும் தன் ஆயுதபலத்தை வளர்க்க முயலும்.

ருஷிய சைனியம் ஜெர்மனியின் ஒரு பாகத்தில் இருந்து, அங்கே பொதுவுடமைப் புரட்சி உண்டானால், வல்லரசுகளின் முக்கோணம் பிளந்து முக்கோணலாகத் தொடங்கும். இப்பிளவு எவ்வளவுதூரம் பரவுமென்று சொல்லமுடியாது. ஐரோப்பாவையே இரண்டு பாகங்களாகப் பிரித்து, புதிய விரோதக் கூட்டங்களாகச் செய்துவிடலாம்.

சென்ற யுத்தத்தின் பலனாக ருஷியாவில் புரட்சியுண்டாயிற்று. இந்த யுத்தத்தால் அப்புரட்சி ஐரோப்பா முழுதும் பரவுமா? அல்லது குடியரசும் பொது உடைமையும் கூடிய புதியதோர் சமுதாயம் சமாதானத்துடன் பிறக்குமா என்பதே உலகத்தின் முன் நிற்கும் மகத்தான பிரச்னை. இதற்குப் பதில் சீக்கிரம் கிடைக்கும். அதனால் இந்தியாவும் பெரிதும் பாதிக்கப்படும். ஆதலால், யுத்தத்தின் போக்கையும் திரைக்குப்பின் நடைபெறும் நீதி யுத்தத்தின் போக்கையும் நாம் நன்கு கவனித்துவரவேண்டும்.


# சைபால்

**CIBOL**

(வெளி உபயேத்திற்கு)

—முகப்பரு, சொரிசிரங்கு, வேனில்கட்டி,— பித்தவெடிப்பு, தீப்பட்டபுண், சேத்துப்புண், கரப்பான், படை, புழுக்கடி முதலிய தோல் சம்பந்தப்பட்ட எல்லா வியாதிகளுக்கும் — சிறந்தது. —

எரிச்சல் கிடையாது —

— துணிகளில் கரை பிடிக்காது

— நறுமணம் உள்ளது —

எல்லாக் கடைகளிலும் கிடைக்கும்

தயாரிப்பவர்கள்:—

**THE SOUTH INDIAN MFG. COY.**

**44, DHANAPPA MUDALY ST.**

**MADURA**


18 JUN 1944
MADRAS




கோடை வெப்பத்தில் மலையூற்றுக் களின் குளிர்நீர்போன்று ஆசுவாச மளிப்பது

வீட்டில் எப்பொழுதும் ஒரு பாட்டில் கையோடு காவலாய் வைத்திருங்கள்

டாடாஸ்

# ஓ டி கொலோன்

A TATA PRODUCT

டாம்கோ விற்பனை இலாகா
19, வன்னியர்தெரு, தபால் பெட்டி நெ. 31
மதராஸ்.

தி டாடா ஆயில் மில்ஸ் கம்பெனி லிமிடெட்

# நிழல்

ரா, ஸ்ரீ. தேசிகன்

மீனாக்ஷி இறந்து இரண்டு வருஷங்கள் கழிந்துவிட்டன. அவள் சிராத்தத்தை நிறைவேற்றிவிட்டுச் சுந்தரமையர் பாண்ட மங்கலத்தில் அன்றிரவு நிலாப்படர் மாடியில் ஒரு நாற்காலியில் சாய்ந்துகொண்டிருந்தார். புதிதாய் வந்த மனைவி அவருக்கு வெற்றிலை மடித்துக்கொண்டிருந்தாள்.

"அடி, சிவகாமு, நாளைக்கு மங்கலியப்பூண்டு; ஞாபகமிருக்கோல்லையோ. புடவையை மடியாப் புழிஞ்சு உணத்தினியோ?" என்று அன்னபூரணி கீழேயிருந்தே கேட்டாள். அவளுக்குத் திகில். இரண்டு தடவையிலும் காக்காய் பிண்டத்தைத் தொடவில்லை. மேல் விளைவு யாதாகுமோ என்ற அச்சம் அவள் மனத்தில் குடிகொண்டிருந்தது.

"இல்லை அம்மா, இதோ வந்துவிட்டேன்" என்று சொல்லிக்கொண்டே கீழே போனாள் சிவகாமு.

சிவகாமு இறங்கினதும் "சிவகாமு, நீ பயபக்தியா யிருக்கணும், அவள்தான் நமக்குத் குல தெய்வமடி, அவளுக்குக் குறைவு ஒன்றும் வைக்கக் கூடாது" என்று அன்னபூரணி உபதேசம் செய்தாள்.

இவ் வார்த்தைகளை யெல்லாம் அடுத்தாத்துக்காரி ஜன்னல் வழியாய்க் கேட்டுக்கொண்டே இருந்தாள். சிவகாமு தன் காரியத்தை முடித்துக்கொண்டு மாடிக்குப் போனாள். இவள் வருவதற்குமுன் அசதியினால் கண் அயர்ந்துவிட்டார் சுந்தரமையர். சிவகாமுவுக்குத் தூக்கம் வரவில்லை.

பக்கத்து வீட்டுக் காரியும் மாடிக்குப் போனாள்.

"அதிசயம் பார்த்தீர்களா; குலதெய்வமாம்! மீனாக்ஷி இருக்கிற வரையில் மாமியார் ஒரு புறம் திட்டுகிறது; புருஷன்காரன் மற்றொரு பக்கம் அடிக்கிறது. ஆம்படையானைப் பேச விட்டாளா அந்தக் கிராதகி? தெப்பக்குளத்தில் விழுந்து இறந்தாளோ, பிழைத்தாளோ. மங்கலியப் பூண்டாம்! அதுதான் ஒன்று குறைச்சல்" என்று தன் அகமுடையானைத் தட்டிச் சொன்னாள்.

"நானுந்தான் கேட்டுக்கொண்டே யிருந்தேன், எனக்குச் சிரிப்பு வந்தது; அதை அடக்கிக்கொண்டு படுத்திருந்தேன்"

"ஆனால் ஒண்ணு சொல்லணுமே; ஊருக்குப் பயநதுண்டு மாமியார்க்காரியும், பிள்ளையும் விதவிதமாய்ப் புடவைகளை வாங்கித் தருகிறார்கள். நாள் தவறினாலும் பூவும் வெற்றிலையும் தவறுகிறதில்லை. மூத்தா நகை, புடவைகள் எல்லாத்தையும் அப்படியே சொரிகிறாள், என்னபண்ணி யென்ன? அதைக் கெடுத்து இதுக்குச் செய்கிறதில் என்ன லாபம்? அதை வதைத்தாளே—அதன் சாபம் வீண்போகுமா? தெப்பக்குளத்தில் விழுகிறபொழுது என்ன எண்ணிச் சொத்துப்போச்சோ. அங்கேயே அந்த ஆவி சுத்திக்கொண்டிருக்கோ என்னமோ?" என்று வாய் மூடாமல் கொட்டித் தள்ளினாள் கற்பகவல்லி.

"சிவகாமுவை அந்தப் பக்கம் அழைத்துக் கொண்டு போகிறதற்குச் சுந்தரமையர் யோசிக்கிறார், இந்தக் காரணத்தை உத்தேசித்தோ என்னமோ தெரியாது"

"இது எப்படி உங்களுக்குத் தெரியும்?"

"அநேகந்தரம் கவனித்திருக்கிறேன்"

"என்ன நடக்கப்போகிறதோ?"

இவர்கள் இப்படிப் பேசிக்கொண்டே தூங்கி விட்டனர்.

சிவகாமு செவிகளில் இச்சொற்கள் விழுந்தன. சிவகாமு ஓர் எழை வீட்டுப்பெண். சுந்தரமையர் வீட்டில் பெண்ணைப் படுத்தின செய்தி சிவகாமுவின் பெற்றோர்களுக்குத் தெரிந்த போதிலும் தங்கள் பெண்ணைக் கொடுத்தார்கள். சுந்தரமையர் வீட்டில் நகை நட்டைக் காண்பித்தார்கள். "சொத்துக்குக்குறைவில்லை, வயிறு காயாமல் சாப்பிடலாமில்லையோ?" என்று சிவகாமுவின் தாய் தகப்பன்மார்கள் யோசித்தார்கள். ஆனால் குழந்தையைப் படுத்தினால் என்ன செய்கிறது?—என்ற எண்ணமும் அவர்கள் உள்ளங்களிலே பாயாமலில்லை அனேக இடத்தில் பார்த்தும் ஒன்றும் பயப்படவில்லை. பெண்ணுக்குப் பதினெட்டு வயதாகிவிட்டது, என்ன செய்வார்கள்? சுந்தரமையர் மனைவி மீனாக்ஷி இறந்துபோன ஆறு மாதத்திற்குள்ளேயே சிவகாமுவைக் கலியாணம் செய்துகொடுத்தார்கள். சகுனங்களை நம்பினார்கள். சுந்தரமையர் வீட்டுச் செய்தி காட்டுத் தீப் போலப் பறந்தாலும் துணிந்துதான் அக்காரியத்தில் இறங்கினார்கள்.

நல்ல சகுனங்களுக்கேற்பச் சிவகாமுவை நன்றாகத்தான் நடத்திவந்தார்கள். ஊரில் நேர்ந்த அபவாதத்தை நீக்க எண்ணினார்களா?—மீனாக்ஷியின் அகால துர்மரணம் அவர்கள் மனங்களில் மாறுதலை உண்டுபண்

ணிற்ருே? எந்தக் காரணமோ? எல்லாச் சந்தர்ப்பங்களும் சேர்ந்து சதிசெய்து அவர்களிடத்தில் புதிய அன்புணர்சியை எழுப்பினவா? மனிதனுடைய இயல்பு எந்தவிதமாய் மாறுமென்று அவனுக்கே தெரியாது. புதிய நிகழ்ச்சிகள் சுகமனத்தில் துயின்றுகொண்டிருக்கிற உணர்ச்சிகளை விழிக்கும்படி செய்கின்றன. எந்தக் காரணமாயிருந்தால் என்ன? இரண்டு வருஷங்கள் இன்பமாய்க் கழிந்தன. கலியாணமானதும் சிவகாமு புக்ககத்திற்கு வந்துவிட்டாள்.

சிந்தனையில் ஆழ்ந்த அவளுக்குக் கண்கள் விழித்தபடியே இருந்தன. இரவும் வளர்ந்தது.

மறுநாள் மங்கலியப் பூண்டு. இரவிலே தூக்கம் விழித்ததில் மயக்கமாயிருந்தாலும், மங்கலியப்பூண்டுப் பெண்கள் வரவே, சிவகாமு எண்ணெய் தேய்த்துக்கொண்டாள். மூத்தாளுக்குப்போட்ட ஆபரணங்களை அணிந்தாள். தலையிலே கொத்துக் கொத்தாய்ப் பூக்கள் விளங்கின: முகத்தில் விசாலமான குங்குமப் பொட்டுத் தோன்றிற்று.

குலுங்கக் குலுங்கச் சொரிந்துநின்ற ஆடையும் அணிகலமும் சிவகாமுவின் வனப்பு வாய்ந்த உடம்பை நிறைத்துவிட்டன. ஆனல் தன்னையறியாமல் கீழே அயர்ந்து படுத்துவிட்டாள், கூப்பிடக் கூப்பிட எழுந்திருக்கவில்லை —எழுந்திருக்க முடியவில்லை.

சிவகாமுவைச் சூழ்ந்துவிட்டார்கள் பெண்கள்:

"பிரார்த்தனை பண்ணுங்கள், ஏதானும் அபசாரம் பண்ணிவிட்டோமோ? என்னமோ?" என்று மாமியார் அன்னபூரணி கவலை வாய்ந்த குரலில் பேசினுள்.

"பழைய அபசாரந்தான்" என்று எண்ணினர்கள். "உங்களுக்கொன்றும் குறைவு வராது; பாட்டி இதோ பாருங்கள் சிவகாமு எழுந்திருக்கப் போருள்" என்று உதட்டுத் தேறுதல் செய்தார்கள்.

இரண்டு மணிநேரம் சென்றது, சிவாமுவுக்குத் தூக்கம் கலையை. எழுந்திருந்தாள்; தூக்கக் கலக்கமாயிருந்தது.

"என்னடி அம்மா, என் வயத்திலே பாலைக் கறந்தையே" என்று மாமியார் சொல்லிக் கொண்டே வந்தாள்.

"அம்மா ஒண்ணுமில்லை, ராத்திரி முழுதும் தூங்கல்லை, என்னை அறியாமாலே தூங்கிட்டேன்" என்று தூக்கக்கலக்கத்திலேயே பதில் சொன்னுள் காமு.

அன்றைய தினம் மங்கலியப் பூண்டு நடந்தது, அது முடிந்து ஒரு மாதத்திற்கு மேலாகிவிட்டது.

"திருச்சினுப்பள்ளித் தெப்பக்குளம், உச்சிப் பிள்ளையார் கோயில் இதெல்லாம் நான் பார்க்கல்லையே. இங்கே வந்து இரண்டு வருஷத்திற்கு மேலே ஆகப் போகிறது" என்று ஒரு நாள் கேட்டாள்.

"அதற்கென்ன அழைத்துப் போறேன்."

"இப்படித்தான் தட்டிக் கழிக்கிறீர்கள்"

"இன்னிக்குப் போவோமா?"

"போவோமே" என்ருர் சுந்தரமையர்.

பாண்டமங்கலத்திலிருந்து திருச்சிராப்பள்ளிக் கோட்டைக்குச் சாயந்தரம் சென்ருர்கள், தெப்பக் குளத்துக்குப் பக்கத்திலே போய்க் கொண்டிருக்கும்பொழுது சிவகாமுவின் கண்கள் குளத்தைச் சுற்றித் திரிந்தன. சுந்தரமையர் வேகமாய் நடக்கமுயன்ருர்.

ஊரிலே நிகழ்ந்த வம்புகள் சிவகாமுவின் மனத்தில் ஒலித்தன. சுந்தரமையர் மனமன்றில் மீனுக்ஷியின் கோரமான மரணம் தோன்றித்தோன்றி மறைந்தது. இவ்விருவரும் பேசாமல் நடந்தார்கள்.

"அதோ போருரே ஒரு ஐயா; இந்த ஆண்டாள் தெருவிலே இருந்தாரு. இந்த ஐயா அம்மாவைப்படுத்தின பாட்டிலே அவுங்க குளத்திலே விழுந்துட்டாங்க, இப்போ போருரே புதுக் கண்ணாலஞ் செய்துகிட்டு. கூடப்போற அம்மா மினுக்குது அந்த மீனுக்ஷி நகை நட்டுக்களைப் போட்டுக்கிட்டு" என்று இவர்களைப் பார்த்து ஒருவன் கூறினுன்.

இந்தக் குரலைச் சுந்தரமையர் அறிவார். பேசினவன் அவர் ஆண்டாள் தெருவிலிருக்கும்பொழுது பால் கொடுத்தவன். அவனைப் பார்க்காதவர்போலச் சுந்தரமையர் நடந்தார். சிவகாமுவின் உள்ளத்தைக் கிளறிவிட்டன தெருவிலே எழுந்த சொற்கள்.

உச்சிப் பிள்ளையார் கோயில் வாசற்பக்கம் வந்ததும் "ஏறிப்பார்ப்போமா?" என்று சுந்தரமையர் கேட்டார்.

தலையை அசைத்தாள் சிவகாமு.

உச்சிப்பிள்ளையார் கோயிலுக்குப் போனுர்கள். அவருக்கு முன் காவிரியும் பக்கத்திலுள்ள சோலைகளும் விரிந்துகிடந்தன. சூரியன் மறைந்த தருணம்.

"அதோ பார், ஸ்ரீரங்கம் சோலையிலே மறைந்து. கிடக்கிறது" என்று சிவகாமுவுக்குக் காட்டினுர் சுந்தரமையர்.

அவள் பதில் கூறவில்லை.

இருட்டிப் போய்விட்டது. பாண்டமங்கலத்திற்குத் திரும்பினுர்கள். வண்டியில் சேர்ந்து உட்கார்ந்தார்களே ஒழிய இருவர் எண்ணங்களும் இரு வேறு உலகங்களில் திரிந்தன.

நாட்கள் சென்றன.

அந்த மீனாக்ஷி எப்படி இருப்பாள் என்று சிவகாமி மனம் தியானிக்க ஆரம்பித்தது. கண் இப்படி இருக்குமோ? மூக்கு இப்படி இருக்குமோ? வாய் இந்தவிதமாய் அமைந்திருக்குமோ? என்றெல்லாம் அவளுடைய கற்பனை சிருஷ்டித்தது. முடிவில் முழு உருவம் அவள் முன் நின்றது. நாள் தேயத்தேய அவள் வாயை அசைப்பதுபோலப் பட்டது. மீனாக்ஷி காலில் போட்டிருந்த மெட்டுக்களின் ஒலி கூட் கேட்கத் தொடங்கிற்று. இப்படிச் சதா காலம் அவள் மனம் திரிகிற நிலையிலே வீட்டுக் காரியத்தில் நுழைய அது இடங்கொடுக்கவில்லை. நினைவுகளுக்கு இரையாகிய அவள் உடம்பும் நாளுக்குநாள் இளைத்தது.

"இதுக்குத்தானா இந்தப் பெண்ணைக் கலியாணம் பண்ணித்து அட தெய்வமே" என்று முணுகிக்கொண்டே அலுவல்களைக் கவனித்தாள் அன்னபூரணி. சுந்தரமையருக்குக் கவலை அதிகரித்தது. அவரை அரித்துத் தின்னவும் ஆரம்பித்தது.

"ஒருவேளை க்ஷயமாயிருக்கலாமோ?" என்று அவர் சிந்தித்தார். ஜலதோஷம் வந்தாலும் க்ஷயமென்று நிதானிக்கும் கோனேரிராவிடம் காண்பிக்க அவர் கருதினார். கண் வைத்தியன் கண் சரியாய்ப்போய்விட்டால் எல்லா வியாதியும் பறந்துவிடுமென்பான். பல்லால்தான் எல்லாம் என்று பல் வைத்தியர் சொல்கிறார். அவரவர் தொழில் நடக்கவேண்டாமா? ஏதாகிலும் ஓர் அங்கம் பாதிக்கப்பட்டாலும், மற்றவைகள் பாதிக்கப்படுமென்பது உண்மையானாலும் அதனால்தான் எல்லாம் என்று சொல்லமுடியுமோ? கோனேரிராவிடம் போனால் க்ஷயந்தான் எல்லாம் என்று சொல்லிவிடுவார். க்ஷயரோகத்தைப்பற்றிப் படித்த அவர், படிக்கிறபொழுது அந்த வியாதியே தமக்கே வந்துவிட்டது என்று திகில் அடைந்தாராம்.

கோனேரிராவிடம் காண்பித்தார்கள்,

"இது க்ஷயந்தான், சந்தேகமே வேண்டாம். தங்க இன்ஜக்ஷன் கொடுத்தால் சரியாய்ப் போய்விடும்" என்றார்.

ஐந்தாறு இன்ஜக்ஷன்கள் செய்தும் பயன் படவில்லை. டாக்டர் பில் அதிகமாயிற்றே தவிர வேறு காரியமில்லை.

தனக்குள்ளே சிரித்துக்கொள்ளுகிறது—அழுகிறது—இம்மாதிரியான சேஷ்டைகள் சிவகாமுவுக்கு வந்துவிட்டன. முகத்திலுள்ள சுந்தரப்பார்வை போய்ப் பேய்த் தோற்றம் வந்துவிட்டது. கண்கள் எங்கேயோ சுழன்றன.

"அடி மீனாக்ஷி! இங்கே உட்காரு, உன்னைக் காணனும்னு ரொம்பநாள் ஆசை" என்ற சொல்லும் அடிக்கடி வந்தது.

குணசேகரத்திற்குப் போனால், இவ்வியாதி தீர்ந்துவிடுமென்று சொன்னார்கள்.

குணசேகரத்திற்கு, அன்னபூரணி, சிவகாமு, சுந்தரமையர்—இம்மூவரும் புறப்பட்டார்கள். அன்றைய தினம் "மீனாக்ஷி நகையெல்லாம் கொண்டுவா" என்றாள் சிவகாமு.

அவள் புடவை, அவள் நகை—எல்லாவற்றையும் எடுத்து அணிந்துகொண்டாள். மெல்ல மெல்ல வண்டியிலும் ஏறினாள்.

குணசேகரத்தில் கோவிலிலே ஒரு பயங்கரமான காட்சி. மூலைக்கு மூலை பேய் பிடித்தவர்கள் ஆடினார்கள்.

ஒரு தமிழ்ப்பெண் துலுக்குப் பாஷை பேசினாள்.

மற்றொரு பிராமணப் பெண்

'ஆடு வேணும் கோயிவேணும் அள்ளிக்
குடிக்க அழகான கள்ளு வேணும்,
ஆடு வேணும் கோயிவேணும் அள்ளிக்
குடிக்க அழகான கள்ளு வேணும்'

என்று புலம்பினாள். படிப்பு மணமே அறியாத மற்றொருபெண், சம்ஸ்கிருதசுலோகங்களைக் கொட்டினாள்.

இக்காட்சிக்கிடையே சிவகாமுபோய் நின்றாள். அர்ச்சகர் பெருமாள் தீர்த்தத்தை அவள்மீது தெளித்தார். தலைவிரித்தாட ஆரம்பித்தது. "நான் யார் தெரியுமா? நான்தான் மீனாக்ஷியின் நிழல். நகைநட்டைக் கழட்டியெறி. மினுக்கிறயே" என்ற குரல் கிளம்பிற்று.

சிவகாமு ஒட்டியாணத்தைக் கழட்டி எறிந்தாள். கண்கள் உருண்டன. முகத்தைப் பார்த்தால் மீனாக்ஷியின் களை அங்கே உட்கார்ந்துகொண்டிருந்தது. சுந்தரமையருக்குத் தூக்கிவாரிப்போட்டது. அவருக்கு மயக்கம் போட்டுக் கீழேவிழுந்தார். அர்ச்சகர் முகத்தில் தண்ணீரை அடித்தார்,

அன்னபூரணி அம்மாள் திகைத்துப் போனாள்.

"குணசேகரத்திற்கு வந்தது இதற்குத் தானா?" என்று மனம்நொந்தாள். மெதுவாக அவர்களைப் பாண்டமங்கலத்திற்கு அழைத்து வந்தாள்.

அதிர்ச்சியில் சுந்தரமையருக்கு மூளை குழம்பிவிட்டது. சுரமும் வந்தது. ஐந்தாறு நாட்களாகப் பிதற்றலும் பிடுக்கலுந்தான். பிரபலமான டாக்டர்கள் வந்து பார்த்தார்கள், குணத்திற்கு வரவில்லை.

ஒருநாள் நள்ளிரவு. சிவகாமு மூலையில் புலம்பிக்கொண்டிருந்தாள். இந்த உலகத்துச் சிந்தனை இல்லை. அன்னபூரணி வெகுநாள் இரவு கண் விழித்ததில் அசந்து தூங்கிவிட்டாள். "நான் போறேன், நான் போறேன்" என்ற குரல் கேட்டது.

"என்ன மீனாக்ஷி குரல் மாதிரி யிருக்கே. சொப்பனம் காண்கின்றேனா?" என்று அன்ன பூரணி திடுக்கிட்டெழுந்தாள்.

"அடே சுந்தரம், அடே சுந்தரம்" என்று கூப்பிட்டாள், பேச்சில்லை. கைகால் எல்லாம் சில்லிட்டுப் போயின. மார்பிலே அடிப்பு நின்றுவிட்டது. சற்றுச் சூடுமட்டும் இருந்தது.

"ஐயோ மோசம் பண்ணிட்டியா" என்ற ஓலம் சூழ அமைதியிலிருந்து எழுந்தது: அந்த அமைதியிலே அது கரைந்தது.

"காக்காய் பிண்டத்தைத் தொடாத காரணம் இதுதானா?,, என்று எண்ணினாள்.

"இதுக்காக நான் பெத்தேன்" என்று விம்மினாள்.

ஆறுமாத காலம் மெல்ல நகர்ந்தது. கொஞ்சம் கொஞ்சமாக உலக வாசனை வந்தது சிவகாமுவுக்கு. கழுத்தைத் தடவிப்பார்த்தாள் அவள்.

"என் தாலி எங்கே?" "அவர் எங்கே?"

"வருவான்".

"எப்பொழுது?"

"வரப்போறானா? அவன் போய்ச் சேர்ந்து விட்டான்"

"போயிட்டாரா?" என்று அழுதாள். "இதுக்கா நான் ஆட்டுக்கொண்டேன்" என்று பெருமூச்செறிந்தாள் சிவகாமு.

போனவரை நினைந்து இருவரும் கண்ணீர் நிதமும் வடித்தார்கள். பிள்ளையை இழந்த சோகம், கணவன் போனதுக்கம்—இவ்விரண்டும் சேர்ந்து இவர்களுக்கிடையே ஒரு பாசத்தை நெய்துவிட்டன.

அந்த அன்புக் கயிற்றிலே அவர்கள் உயிர்கள் தங்கிநின்றன. பழங்கதைகள் பேசி இவ்விரு விதவைகள் தங்கள் காலங்களைக்கழித்தனர்.

காலம் நிற்குமோ? எத்தனையோ இன்னல்களுக்கிடையே அது இடைவிடாது ஓடிக்கொண்டிருக்கிறது.

---


# அலுமினியம்

## இத்தொழிலின் வளர்ச்சிக்கு ஒரு சந்தர்ப்பம்

அலுமினியம் ஸ்டாக்கின் நிலைமை சற்றுத் திருப்திகரமாக இருப்பதால், புதிதாகச்சரக்குக் கொள்முதல்செய்யச் சௌகர்யங்கள் ஏற்பட்டு இருக்கின்றன.

அதனால் பொது ஜனங்களுக்கு வேண்டிய தேவைகளுக்கு அதிகமாக உற்பத்தி செய்யப்படுகிறது. ஜாஸ்தி உற்பத்தி செய்வதற்குச் சந்தர்ப்பங்கள் இருக்கின்றன.

சில்லறை வியாபாரிகள் தங்கள் விற்பனையை விருத்தி செய்யவும், சரியான விலைக்கு விற்கவும் இது ஓர் உபயோகமான ஆதாரமாகும்.

அலுமினிய பாத்திரங்கள், கம்பிகள், தகடுகள், ஆணிகள் மற்றும் எல்லாவித அலுமினிய சாமான்களுக்கும் எங்களுக்கு எழுதுங்கள்.

**ஜீவன்லால் (1929) லிமிடெட்**

கல்கத்தா, பம்பாய், மதராஸ், ராஜமஹேந்திரம் டில்லி, ஏடன்.

# தியாகம்

சு. சுப்புலக்ஷ்மி

[1943-ஆம் வருஷம். வங்கத்திலே பயங்கரமான பஞ்சப்பேய்கள் தலைவிரித்தாடுகின்றன. ஏழை மக்களிடையே பட்டினியும், சாவும், தொத்து வியாதிகளும் ஏற்பட்டு விடுகின்றன. இதனால் சிலர் மனிதத் தன்மையையே இழக்க நேரிடுகிறது. ரங்கபுரி ஜில்லாவிலுள்ள நில்பமாரி என்ற கிராமம். கிழ விவசாயி ஒருவனது குடில். அவன் வாயிலில் நின்று கதவைத் தட்டுகிறான்].

கிழவன்: கௌரி! கௌரி!

கௌரி: யாரது?

கிழ: நான் தான், கதவைத்திற.

[கதவு திறக்கப்படுகிறது. அவன் மகள் கௌரி வந்து நின்றாள்]

கௌரி: (ஆச்சரியத்துடன்) அப்பா! இன்றைக்கு ஏது இவ்வளவு அரிசி! மூட்டை, ஒரு மூட்டை அரிசியா?............அப்பா! இவ்வளவு அரிசியும் உனக்கு எப்படிக் கிடைத்தது?

[திண்ணையில் வைக்கப்பட்டிருக்கும் மூட்டையைப் பிரிக்கிறாள்]

(ஏமாற்றத்துடன்) என்ன? தவிடு!........ அப்பா! இந்தத் தவிடு எதற்காக வாங்கி வந்தாய்? அரிசி எங்கே அப்பா?

கிழ: (துயருடன்) மகளே! அரிசி!......... அரிசியா வேண்டும்?........... நீ சிறு பெண் தானே, கால நிலையைப் பரிபூர்ணமாக உணரவில்லை. இன்று நாமிருக்கும் நிலைமையை நீ எப்படி அறிவாய்?...........பஞ்சம்! பயங்கரமான பஞ்சப் பேய், தற்போது ஏழை மக்களை ஈவிரக்கமின்றிச் சித்திர வதை செய்கிறது......

கௌரி: அப்பா! தெரிகிறது. ஆனால் இதிலிருந்து ஜனங்கள் மீள முடியாதா? நாம் வாழ உபாயம் கிடையாதா? பஞ்சமேற்படக் காரணம் இல்லையே. பஞ்சமென்றால் வெள்ளாமை சீர்கெட்டிருக்க வேண்டும். இயற்கையன்னை மழை பொழியாமல் வெள்ளாமையை அழிக்க வேண்டும். ஆனால் இந்த வருஷம் விளைச்சல் அதிகரித்துத்தானே இருக்கிறது, இயற்கை மாதா அருள் மழையைப் பொழியத் தானே செய்தாள்! அப்படியிருக்கப் பஞ்ச மேற்படுவானேன்?

கிழ: மகளே! சரியான கேள்விதான். இன்று நம் பாரத பூமியில் நிகழ்ந்து வரும் அநீதி, சீர்குலைவு, உள்ளத்தில் கொதித்திடும் உணர்ச்சி, ராக்ஷஸ சக்திகளின் அடக்குமுறை, முதலியவைகளைப்பற்றி உனக்கு அதிகமாகத் தெரிந்திராது. நம் வங்காளம், தூய்மையிலும், அறிவிலும், ஆற்றலிலும், ஈகையிலும் புகழ் பெற்றது. தான் பட்டினி கிடக்கும். ஆனால் அன்னியர்கள் பட்டினி கிடப்பதைக் கண்டு சகிக்க மாட்டாது. அப்படிப்பட்ட புண்ய பூமியிலேயே பஞ்சமேற்படுவதென்றால் காரணம் என்ன தெரியுமா? சொத்துரிமைப் பாத்தியதையை அஸ்திவாரமாகக் கொண்ட, இன்றைய சமூகத்தின் மிகக் கேடுகெட்ட, கழுத்தறுப்பைக் கொண்ட ராக்ஷஸ சக்திகளின் கை ஓங்கி நிற்பதே! யுத்தம், யுத்தம் என்று கூறி ஏழை—பாவ புண்யங்களுக்கு அஞ்சி நடக்கும் ஒன்றும் தெரியாத ஜனங்களை—பயமுறுத்தி, அவர்கள் உணவை மறைத்துச் சேர்த்துப் பல இடங்களில் அடுக்கி வைத்துக் கொண்டு, அப்பொருள்கள் மீது ஏகபோக உரிமை செலுத்தும் நரப் பைசாசங்கள்தான் இப்பஞ்சத்தைச் சிருஷ்டித்திருக்கின்றன.

கௌரி: அப்பா! இப் பிசாசுகளை விரட்டியடிக்கச் சர்க்காரால் முடியாதா?

கிழ: சர்க்கார்! நமது சர்க்கார் இப்பொழுது சிறையிலடைக்கப்பட்டிருக்கிறார்கள். அவர்களுக்கு வாய்ப்பூட்டு போடப்பட்டிருக்கிறது. அவர்கள் இப்பொழுது வெளியிலிருந்தால் பஞ்சமே ஏற்பட்டிருக்காது. ஆனால் இப்பொழுது அரசு செலுத்தும் பரங்கிச்சர்க்காரால் ஒன்றும் செய்ய முடியாது. அவர்கள் அன்னிய நாட்டைச் சார்ந்தவர்கள். தம் வயிற்றையே பிரதானமாகக் கொண்டவர்கள். ஜனங்களின் ஒத்துழைப்பைப் பெறாதவர்கள். ஆகவே கள்ளச் சேமிப்பாளரின் முன்னே செயலாற்றும் திறமையற்று இருக்கிறார்கள்.

கௌரி: (துக்கத்துடன்) இந்நிலைமையைச் சமாளிக்க ஒரு வழியும் கிடையாதா? ஐயோ! எத்தனை அனாதைகள், குழந்தைகள் முதல் வயோதிகர்கள் வரை பஞ்சத்திற்காளாகி உயிர் விடுகின்றார்களோ!...........தெய்வமே! எங்கள் மக்களைக் காப்பாற்றமாட்டாயா?

[விண்ணை நோக்கி வினவுகிறாள்]

கிழ: குழந்தாய்! வருந்தாதே, எல்லாம் வல்ல இறைவன் கல்நெஞ்சம் கொண்ட பரங்கிச் சாக்காருக்கு அறிவை உபதேசிப்பார். ஏதாவது வழி ஏற்படும்! ஜனசக்திகளைத் திரட்டிக் கொண்டு, சமூகத்தை அழித்துவரும் இந்த விஷக் கிருமிகளை அழித்து விடலாம்...... கௌரி! முறம் கொண்டுவா, இந்த உமியைப் புடைக்கலாம்.

[கௌரி இரு முறத்துடன் வருகிறாள். இருவரும் உமியைப் புடைக்கிறார்கள். இடிந்த அரிசி முறத்தடியில் தங்குகிறது. அதை எடுத்துச் சட்டியில் போடுகிறார்கள். "மாகோ

பாபுரே!" என்ற குரல் கேட்கிறது. தந்தையும் மகளும் திரும்பிப் பார்க்கிறார்கள். சிறுமி ஒருத்தி கைக்குழந்தை ஒன்றுடன் வந்து நின்றாள். அவ்விரு ஜீவன்கள் தோலற்ற எலும்புக் கூடுபோல் காணப்படுகிறார்கள்.]

கிழ: குழந்தைகளே! உங்களுக்கு என்ன வேண்டும்? உள்ளே வாம்மா. அரிசி தருகிறேன்.

(சிறுமி மகிழ்வுடன் உள்ளே வருகிறாள்)

கௌரி: அப்பா! இவர்கள் யார்?

கிழ: பஞ்சத்திற்குப் பலியாகப்போகும் சின்னஞ்—சிறு ஆத்மாக்கள்.

கௌரி: என்ன! பஞ்சத்திற்குப் பலியாகப் போகிறார்களா?

(கண்களில் நீர் பெருகுகிறது)

பாவம்! ஒன்றுமறியா ஜீவன்கள்! ஒரு வேளை கூட பட்டினி கிடக்க முடியாதவர்கள்......... அப்பா! அவர்களைக் காப்பாற்றி நம்மோடு வைத்துக்கொள்ளலாமா?

சிறுமி: ஊஹூம். நாங்கள் உங்களோடு வாழ மாட்டோம். அதோ பாருங்கோ, அந்த ஆல மரத்தடியிலே எங்கம்மா மயக்கமாய் விழுந்து கிடக்கிறார். அம்மா பிரதிதினமும் வீட்டிற்கு வீடு சென்று மன்றாடிப் பிச்சையெடுத்து வருவார். தாம் பட்டினிகிடந்து எங்களைக் காப்பாற்றுவார். ஆனால் இன்றைக்கு அம்மா அலைந்து அலைந்து பல வீடுகளுக்குச் சென்று கேட்டார். இருந்தும் பிச்சை கிடைக்கவில்லை. துக்கத்துடன் வந்து மயக்கமாகிக் கீழே விழுந்துவிட்டார். இந்தச் சமயத்தில் தாயைக் காப்பாற்றவேண்டியது எங்கள் பொறுப்பல்லவா! அதான் நாங்கள் பிச்சை கேட்கிறோம். எம் தாய்க்கு நீங்கள் தான் உயிர்ப்பிச்சை யளிக்கவேண்டும்.........தாயே! ஒரு கையளவு அரிசி கொடுத்தாற்கூடபோதும்!

கௌரி: கையளவு என்ன? படி நிறையத் தருகிறேன். போய் உங்கள் தாயைக் காப்பாற்றுங்கோ. மடியைக்காட்டு.

(கிழவன்படி நிறைய அரிசி கொடுக்கிறான். சிறுமி அதைப் பெற்றுக்கொண்டு தன் நன்றியை அறிவித்துக்கொண்டு குதூகலத்தோடு குழந்தையுடன் ஓடுகிறாள்)

2

[சின்னாட்கள் செல்கின்றன. அதே குடிசை வீடு, தந்தையும், மகளும் காணப்படுகிறார்கள். பஞ்சப்பேய் அவர்கள் குடிலை அணுகிக் கொண்டிருக்கிறது.]

கிழ: மகளே! இன்று அந்தத் தவிடுகூட கிடைக்கவில்லை. யாரோ வியாபாரி அதிக விலை கொடுத்துத் தவிடு அனைத்தையும் வாங்கிக் கொண்டு போய்விட்டானாம். ஜமீன்தாரிடம் எவ்வளவுதூரம் மன்றாடிக் கேட்கமுடியுமோ அவ்வளவு தூரமும் கேட்டாகிவிட்டது. ஆயினும் அவர் மனம் இரங்கவில்லை. தாம் மறைத்து வைத்திருக்கும் தானியங்களை எடுக்க முடியாதென்று தீர்மானமாகக் கூறிவிட்டார். தம் சொந்த நிலத்தைப் பாதுகாக்கும் விவசாயி என்பதைக்கூட மறந்து போனார். ............என் செய்வது? இன்றைக்கு ஆகாரத்திற்கு என்ன செய்வது?

கௌரி: அப்பா, கவலைப்படவேண்டாம். இரண்டு நாளைக்கு வேண்டிய அரிசியை நான் பத்திரப்படுத்தி வைத்திருக்கிறேன். அதற்குப் பிறகு தான்—

கிழ: பிறகு பார்த்துக் கொள்ளலாம். பகவான் ஏதாவது வழி காண்பிப்பார். இருக்கும் அரிசியை இன்றைக்குச் சமை.

[நிலைகுலைந்த ஆடையுடன் அழகிய கன்னிப்பெண் ஒருத்தி ஓடிவருகிறாள்]

பெண்: அபயம்! அபயம்! காப்பாற்றவேண்டும்.

கிழ: பயப்படாதே, நங்காய், பயப்படாதே.

கௌரி: சகோதரி, நீ யார்? ஏனிந்த அலங்கோலம்? பயப்படாமல், சொல்.

பெண்: பெரியவரே!............யுவதி! நான் ஓர் ஏழை விவசாயியின் பெண். என் பெற்றோர்களும், சகோதரர்களும் பஞ்சப் பேய்க்கு இரையானார்கள். எங்கள் குடும்பத்தில் நான் ஒருத்தியே பாக்கி. இருந்த பொருள்களையும், நிலபுலன்களையும் விற்றுச் சிலகாலம் நான் வாழ்ந்தேன். பின் கையிலிருந்த பொருள்கள் தீர்ந்தன. உயிர் வாழ்வதற்காகப் பிச்சை எடுக்கலானேன். ஜமீன்தார் வீட்டிற்குப் பிரதிதினமும் போய் அவரிடம் மன்றாடி அரிசி வாங்கிக் கொண்டு சில காலம் ஜீவித்தேன். ஆனால் இன்று அவர் என்னைக் கனிவுடன் வரவேற்று ஓர் அறைக்குள் அழைத்துப் போனார். அறைக் கதவைத் தாளிட்டுக் கொண்டார். என் உடல் நடுங்கிற்று. அவர் கெட்ட ஸ்வபாவம் அப்பொழுது தான் புலனாயிற்று. காமாவேசத்துடன் என்னருகே வந்து என்னைப் பிடித்துத் தழுவிக் கொள்ளமுயன்றார். நான் கற்புக்காக அவரிடம் தைரியமாகப் போராடிக் கொண்டே வெளியேறினேன்.

கௌரி: ஹா! தெய்வமே! இதென்ன கூத்து? பெண் ஜன்மமெடுத்தாலே இப்படித் தான்! அதிலும் அழகாயும் அனாதியாகவும் கன்னிப் பெண்ணாயுமிருந்துவிட்டாற் போதும். வேறு வினை வேண்டாம்............முற்றாத கட்டையில் பூச்சி பிடிப்பது போன்றதுதான் நம் நிலையும். புருஷர்கள்.........காமப் பித்தர்கள்!

பெண்: யாரைக் குறை கூறி என் செய்வது? நாடு சீர்குலைந்து இருக்கிறது. நியாயம், தர்மம், கட்டுப்பாடு செழிப்பு இவைகளெல்லாம் அழிந்து வருகின்றன. அதர்மம், அக்ரமம், பஞ்சம், வறுமைகளெல்லாம் தலைதூக்கி நிற்கின்றன. இவைகளை அடக்க அந்நிய அரசாங்கம் யாதொரு நடவடிக்கைகளையும் எடுத்துக் கொள்ளவில்லை. ஆகவே ஏழைகளின் உயிர் தினே தினே சாந்தியடைந்து கொண்டே




போகின்றன.........சகோதரி! என்னைக் காப்பாற்று. என் வழிப் பிரயாணத்திற்காகக் கொஞ்சம் அரிசி கொடுங்கோ!

கிழ: குழந்தாய், வேண்டிய அரிசி தருகிறேன். ஆமாம், நீ எங்கே செல்லப்போகிருய்?

பெண்: பெரியவரே, கல்கத்தா செல்லப் போகிறேன். அங்கே என் அத்தையின் கணவர் ஓர் ஆலையில் வேலை பார்க்கிருர். நான் அவரிடம் சொல்லி ஆலையில் வேலை செய்து பிழைப்பிற்கு வழி தேடிக்கொள்ளலாமென்று உத்தேசம்.

கிழ: நல்லது கௌரி! அரிசி கொடுத்தனுப்பு.

[கௌரி இருக்கும் அரிசியில் பாதிகொடுத்து அவளை அனுப்புகிருள். ஜமீன்தார் வருகிருர்]

ஜமீ: ராம்தாஸ்!

கிழ: மஹராஜ்! வாருங்கள். உட்காருங்கள்...கௌரீ...கௌரீ.

ஜமீ: இருக்கட்டும். ராம்தாஸ்! இந்த ரஸ்தா வழியே யாராவது ஓர் கன்னிப்பெண் போனுளா?

கிழ: இளம் கன்னிப்பெண்ணே! இல்லையே. கிழவிகூட போனதாகத் தெரியவில்லை பாபுஜீ!

ஜமீ: சீ, மடையா, உன்னைப்போய்க் கேட்கிறேன் பார்.

[கௌரி சிறு கலத்தில் நீர் கொண்டு வருகிருள்.]

கௌரி: நமஸ்தே! ஜமீன்தார் பாபுஜீ, நமஸ்தே.

ஜமீ: (ஆச்சரியத்துடன்) ராம்தாஸ்! இவள் யார்?

கிழ: என் மகள்.

ஜமீ: உன்மகளா? அடடா? நான் இவளைப் பார்த்ததே கிடையாதே. அடாடா! என்ன அழகு! அடக்கம் ஒடுக்கம், பதவிசு...

கிழ: இல்லை. அநேகதடவை பார்த்திருக்கிறீர்கள். அப்பொழுதெல்லாம் இவள் சிறுமியாய் இருந்தாள்.

ஜமீ: இப்பொழுது கன்னிப்பெண்......... போகட்டும், ராம்தாஸ்! இவளுக்கு விவாகம்—

கிழ: பாபுஜீ விளையாடுகிறீர்களே. இன்று முதல் நாங்கள் வயிற்றைப் பட்டினிபோட ஆரம்பித்துவிட்டோம். பஞ்சத்தால் பாதிக்கப்பட்டு இன்னும் சில நாட்களில் எங்கள் ஆவி போகப்போகிறது. அப்படியிருக்க விவாகம் எப்படிச் செய்யப்போகிருேம்.

ஜமீ: ஐயோ! பாவம் ராம்தாஸ்! நீங்கள் பிழைப்பதற்கு நான் ஒரு யோசனை சொல்கிறேன். கேட்கிருயா?

கௌரி: பாபுஜி! என்ன யோசனை? சீக்கிரம் சொல்லுங்கோ. அதன்படி அப்பா கட்டாயம் நடப்பார்.

ஜமீ: சபாஷ்! அப்படிச்சொல்லு பெண்ணே! நீ ரொம்ப கெட்டிக்காரி.

கிழ: பாபுஜி! நீங்கள் என்ன சொன்னாலும் கேட்கத்தயார். என் குழந்தை கௌரி, உயிரோடு வாழவேண்டும். நான் கிழவன். இறந்தாலும் பாதகமில்லை.

ஜமீ: என் யோசனை இதுதான். உன் மகளை எனக்கு விவாகம் செய்து கொடுத்து விடு. நீ உயிர் வாழலாம். என் சொத்து முழுதும் உன் ஆட்சிக்கு உட்படும். உன் மகள் ராணியாகிவிடுவாள்.

கிழ: அக்ரமம்! அநியாயமானது. முடியாது. அருமையாக வளர்க்கும் கொடியைச் சிதைக்க முடியாது!

ஜமீ: முடியாவிட்டால் எனக்கென்ன? தந்தையும் மகளுமாக மடியுங்கள்! நான் போகிறேன்.

[கௌரி திடுக்கிடுகிருள். அவள் விழிகளில் நீர் பெருகி வழிகிறது]

[ஜமீன்தார் இரண்டடி எடுத்து வைக்கிருர்.]

கௌரி: நில்லுங்கள் என் தந்தையை மன்னியுங்கள். என் மனம் தங்களையே நாடுகிறது. உங்களை விவாகம் செய்துகொள்ள யாதொரு தடையுமில்லை.

ஜமீ: சபாஷ். அப்படிச் சொல்லு. ராம்தாஸ்! இப்பொழுது என்ன சொல்கிருய்?

கிழ: கௌரி! நீயா இப்படிப் பேசுகிருய்?

கௌரி: ஆம்.

கிழ: இதென்ன பேதைமை? ஐயோ! உன் வயதென்ன, அவர் வயதென்ன? என் மனம் சகிக்காது. நீ அவரை விவாகம் செய்து கொள்ளக்கூடாது.

கௌரி: ஏன்? பிதா? இன்று நாமிருக்கும் பயங்கரமான நிலை உங்களுக்குத்தெரியாதா? கேவலம், ஒரு உடலின் மாம்ஸ பிண்டத்தின்—சுகத்திற்காகப் பார்த்தால் பல உடல்கள் பட்டினியால் வாடி உயிர் நீங்கும்படி நேரிடும். பலருக்காக ஒருவர் தியாகம் செய்தால் என்ன? பாரதபூமியில் பெண் ஜன்மமெடுத்து விட்டு இச்சிறு தியாகம்கூட செய்யாவிட்டால் நாளிருந்தென்ன? இறந்தென்ன? தயவு செய்து அவர் மகிழப் பதிலளித்து அனுப்புங்கள் பிதாஜீ.

[கிழவன் துயருடன் தலையை அசைக்கிருன்]

3

[கௌரிக்கும், ஜமீன்தாருக்கும் விவாகமாகிறது. கௌரி தன் சாமர்த்தியத்தினுல் ஜமீன்தாரின் தான்யங்கள் குவிந்திருக்கும் அறைப் பூட்டின் சாவிகளைப் பெறுகிருள். அன்றிரவு. படுக்கையறை. கௌரி சாளரத்தின் மூலம் வெளியே பார்க்கிருள். ஜமீன்தார் பாபு வருகிருர்]

ஜமீ, படே பஹூ! உலகத்தைப் பார்க்கிருயா?

கௌரி: ஆம்.

ஜமீ: நன்ருகத்தான் இருக்கிறது. அதோ பார், அந்தச் சந்திரிகையை, அடாடாடா! என்ன அழகு! என்ன பிரகாசம்! கௌரி! இவைகளைப் பார்த்ததும் உலகம் இன்பமயமென்பது உனக்குத் தெரிகிறதல்லவா?

கௌரி: இல்லை, உங்களுக்கு அப்படித் தெரிந்திருக்கலாம். ஆனல் எனக்கு எல்லாம் துன்பமயமாகவேயே காக்ஷியளிக்கிறது.

ஜமீ: படேபஹூ! இதென்ன அறிவீனம்? உனக்கென்ன குறை ஏற்பட்டுள்ளது? சொல், அதை இப்பொழுதே நிறைவேற்றி வைக்கிறேன்.

கௌரி: நாதா! எனக்கு ஒரு குறையும் ஏற்படவில்லை. ஆனல் நம் மக்களுக்குத்தான் பல குறைகள் ஏற்பட்டிருக்கின்றன. அதோ பாருங்கள், அந்தக் குடிசை வீடுகளை, குழந்தைகள், பஞ்சத்திற்குப் பலியாகி இருக்கும் தாய்மார்களைக் கண்டு கதறுகின்றன. தாய்மார்கள், குழந்தைகளைப் பட்டினிக்குப்பலியாகக் கொடுத்துவிட்டு மற்ருெரு புறத்தில் அழுவதைப் பாருங்கள். அதோ குடிசைகளை அடுத்துள்ள மயானத்தைப் பாருங்கள். எத்தனை பிணங்கள் எரிந்துகொண்டிருக்கின்றன. இவைகளைப் பார்த்தால் உலகமே துன்பமயமாகத்தான் தோன்றுகிறது.

ஜமீ: ஆம் கௌரி! அதற்காக நாமும் துன்பப்படவேண்டுமா?

கௌரி: இல்லை. நான் அப்படிச் சொல்லவில்லை. அவர்கள் துன்பத்தை நம்முடைய துன்பமாகக் கருதி அவர்களைக் காப்பாற்ற வேண்டும். அப்பொழுதுதான் மனிதஜன்மம் எடுத்ததின் பயனை அடையமுடியும். நம் மனமும் திருப்திப்படும்.

ஜமீ: கௌரி! அறிந்தேன். நீ பிச்சை கொடுக்க விரும்புகிருய், இல்லையா?

கௌரி: ஆம் பட்டினியால் மடியும் மக்களைக் காப்பாற்றவேண்டுகிறேன்.

ஜமீ: தர்ம சிந்தனையே கௌரி! உன்னிஷ்டப்படி நீ பிச்சை எவ்வளவு வேண்டுமானுலும் அளிக்கலாம். தான்ய அறைக் கதவுகளின் சாவிகள் உன்னிடமே இருக்கின்றன. உன் மனம் திருப்தி அடைகிறதா?

கௌரி: சந்தோஷம். தாங்கள் தயவுசெய்து உத்தரவிடுங்கள். இன்றிரவு அதுவும் இப்பொழுதே பிச்சை அளிக்கவேண்டும். ஏனெனில் இன்றிரவிற்குள் எத்தனை ஆத்மாக்கள் உயிர்விட நேரிடுமோ?

ஜமீ: கௌரி! படே பஹூ, உன்னுடைய புத்தியின் தீக்ஷண்யத்தால் என் இருள் அடைந்த மனதகத்தில் வர்ணிக்க முடியாத சீதளப் பிரகாசம் ஏற்படுகிறது. உன்னுடன் நானும் நம் ஏழை மக்களுக்குப் பிச்சையளிக்க வர விரும்புகிறேன்.

கௌரி: பிராணபதி! என் மனம் குளிர்ந்தது. வாருங்கள் ஏழை மக்களைக் காப்பாற்றும் தொண்டில் இறங்குவோம்—நம் வாழ்க்கை புனிதப்படும்.

[கௌரி கணவனைக் கையைப்பிடித்து அழைத்துப் போகிருள்]

# ரோகிணி

ரா. விழிநாதன்

நினைத்த கருமத்திற்கு மாறாக நடந்துவிட்டாலும், யோக்கியதைக்குத்தக்க மதிப்புக்கிடைக்காமல் போய்விட்டாலும், ஆசாபங்கம் ஏற்பட்டாலும், மனிதன் ஏக்கமடைகிறான். இந்தக் காரணம்தானோ, அல்லது வேறு காரணமோ, தெரியவில்லை. தனக்கு வாய்க்கப்போகும் மனைவியைப் பார்த்தது முதல் சந்திரன் இந்த உலகத்தையே வெறுக்க ஆரமபித்தான்.

ஒவ்வொரு பரீக்ஷையிலும் முதன்மையாகத் தேறி ஐ. ஸி. எஸ். படிப்பிற்காக மேல்நாடு செல்லச் சிந்தித்துக்கொண்டிருக்கும் நவநாகரிக யுவன் ஒருவனுக்கு, படிப்பு வாசனையே யற்ற பட்டிக்காட்டுப்பெண் ஒருத்தி மனைவியாக வாய்ப்பது என்றால், — உலகத்தினிடம் விரக்தியோ, கோபமோ ஏற்படாமல் எப்படி இருக்கமுடியும்? அவனது கற்பனைப் பூங்காவில் நறுமணம் வாய்ந்த — 'திறந்த வெளியில் கண்ணிற்கினிய மாடமாளிகை, மோட்டார் முதலிய நாகரிக வாகன வஸதிகள், கல்விக் களஞ்சியம், 'அழகு தெய்வம்' என்று புகழத்தக்க மனைவி'— மலர்கள் மலர்ந்துகொண்டேயிருந்தன. அப்படியிருக்க, வெட்கமே உருவான ஸர்வாபரண பூக்ஷிதையான ஒரு பட்டிக்காட்டுப்பெண், மனைவியாகப்போகிறாள் என்றால் கோபம் வராமல் என்ன செய்யும்!

ஆனால், இங்கே ரோகிணியோ வென்றால்? சந்திரனைப் பார்த்ததினமே தன்மனத்தைப் பறிகொடுத்துவிட்டாள். காரணம்,—அவளது கண்களே அவளை ஏமாற்றிவிட்டன. சந்திரனது ஏக்கத்தினால் கலங்கிய பார்வையில் காதல் மயக்கம் குடிகொண்டிருக்கிறது எனத் தவறாக நினைத்துவிட்டாள். அவள் சிறு குழந்தையல்ல. வயதுவந்த பெண்தான். அவளுக்கும் சுய அறிவு, தன்னம்பிக்கை என்பவையுண்டோ இல்லையோ! அவைகளின் சிபாரிசை ஏற்றுக்கொண்டு, எளியஸ்வபாவம் வாய்ந்த அவள், தேவதைகள் அக்கினி முதலியவர்களைச் சாக்ஷியாக வைத்து, அந்த நம்பிக்கையின்பேரில் வாஸனை கமழும் பூமாலையைத் தன் நாதனுக்குச் சமர்ப்பித்தாள்-பூமாலையை மட்டுமல்ல—தன் பூவுள்ளத்தையும் அர்ப்பித்து விட்டாள், என்றால் அதில் ஆச்சரியமுறுவதற்கு என்ன இருக்கிறது?

இவ்வளவு எல்லாம் நடந்தபின், அதே மனதிற்குப் பிடிக்காத பெண்ணை, வேண்டாவிருப்பாகத் தன் வீட்டிற்கு அழைத்துப்போகத்தான் நேர்ந்தது சந்திரனுக்கு. உலகத்து ஒப்பிற்காக ரோகிணியைத் திரஸ்கரிக்கவும் முடியவில்லை அவனால். அவளிடம் மேலெழுந்தவாரியாகக் காதலைக் காட்டத்தான் வேண்டி வந்தது.

புக்ககத்தில் ஏழெட்டு நாட்களைக் கழித்து இனிய இன்பக்கனவுடன், தன் பிறந்தகத்தை அடைந்தாள், ரோகிணி. பிறந்த ஊர்த்தோழிகளும், அவளது தமக்கை ரேவதியும் நோண்டி, நோண்டி அவளது கணவனைப் பற்றிக் கேட்கலாயினர். முக்கியமாக அவளது தமக்கை ரேவதி, விதவையாயிருந்தபொழுதிலும் தன்னுள்ளத்தெழும் கிளர்ச்சிகளைக் காண்பித்துக் கொண்டேவிட்டாள். பணக்காரத் தந்தையின் பெண் அவள். அதனால் விதவையான பின்பு தன் பிறந்தகத்திலேயே இருப்பது என்று எண்ணி வந்துவிட்டாள்.

அன்று விடியற்காலையில் ரேவதி விழித்தெழுந்து வீட்டுக்காரியம் செய்வதில் முனைந்தாள். புதுமாப்பிள்ளை சந்திரன் அன்று வரப்போவதாக இருந்தது. அன்று ரோகிணியின் உள்ளத்தும் கணவனைக் காணப்போகிறோம் என்ற ஆனந்தம் ஒரு புறம் எழும்பிக்கொண்டிருந்தது. மறுபுறம் விரைவில் அவரைப் பிரிய நேரிடுகிறதே என்ற வருத்தம் குழப்பிக்கொண்டிருந்தது. சந்திரன் ஐ. ஸி. எஸ். படிப்பிற்காக மேல்நாட்டுக்குப் புறப்பட்டுக்கொண்டிருந்தான். அதனால்தான் 'மேல்நாட்டிலிருந்து திரும்பிவர எவ்வளவு வருஷம் பிடிக்குமோ?' என்று எண்ணி வேட்டகத்திற்கு வந்திருந்தான், தன் மனைவியைப் பார்த்துப் போவதற்காகச் சந்திரன்.

அன்றிரவு ஆகாயத்தில் 'விண்மீன்'கள் ஜ்வலித்துக்கொண்டிருந்தன, வைரம்போல. சந்திரன் தன் கிரணங்களை வாரி வீசிவிட்டிருந்தான், நிலப்பரப்பில். இன்தென்றலும் காதலர்களின் உள்ளத்துள் மோகன சக்தி ஒன்றை ஏவிவிட்டிருந்தது. ரோகிணியின் இதயத்தில் நாதனைப் பிரியும் துயரம்! சந்திரனின் உள்ளத்தில் மேல்நாடு செல்லும் இன்பக்கனவு!

ரோகிணி, நான் நாளைபோய் வருகிறேன்' என்று கூறினான் சந்திரன் புரிப்புடன்.

'எப்பொழுதும்போலவே, இந்த 'விண்மீன்' களும் கண்ணைச் சிமிட்டிக்கொண்டிருக்கும் வானவெளியில்.' என்றாள் துயரத்துடன் ரோகிணி.

'என்ன சொல்லுகிறாய் ரோகிணி.'

'தென்றலில் இதே மோகன சக்தி நிரம்பியிருக்கும். மலர்கள் தன்னழகில் பூரித்திருக்

கும். உலக காரியங்களில் எவ்விதமான மாறுதலும் ஏற்படாது. சந்திரன் இவ்வாறே சிரித்துக்கொண்டிருப்பான். நிலவு உலகப்பரப்பில் நிலவியிருக்கும். குயிலும் தன் இனிய குரலில் கூவிக்கொண்டிருக்கும்.'

'ஆம் ரோகிணி, நீ சொல்வது உண்மைதான்.'

'இவை யெல்லாம் உண்மைதான், ஆனால் என்னுள்ளம்—தாகத்திற்குத் தண்ணீரோ, தங்க நிழலோ கிடைத்தற்கரிதான பெரும் பாலைவனத்திற்கு நிகராகிவிடும். 'இதயம் சூன்யமயம்' என்று சொல்லக்கூடிய நிலைமை ஏற்பட்டுவிடும்!'

'ஆனால் நான் திரும்பிவந்ததும்?—'

'யாருக்குத் தெரியும், என்ன என்ன மாறுதல்கள் ஏற்பட்டிருக்கும் என்பது? உள்ளத்தின் நிலை அப்பொழுது எவ்வாறிருக்குமோ? காதல் உணர்ச்சியே அற்றுப்போய்விடலாம் அதற்குள். யார் கண்டது? ஒருகால் ரோகிணி இந்த உலகத்தைவிட்டே மறைந்தும் விடக்கூடும். காலம் என்பது குறுகியதல்லவே. மிகவும் நீண்டதல்லவா?'

'ரோகிணி மறைந்துவிடுவாளா? அசட்டுப் பிசட்டு என்று இம்மாதிரி பேசாதே ரோகிணி.'

'அப்படித்தான் தோன்றும் நான் சொல்வதெல்லாம், உங்களுக்கு. கெட்டதை யோசித்துத்தான் நல்லதை யோசிக்கவேண்டும். நீங்கள் வருவதற்கு முன்பு நான் இறந்துவிடுகிறேன் என்று வைத்துக்கொள்ளுங்கள் அப்பொழுது?

'அது யோசிக்கவேண்டிய விஷயம்தான். என்ன சொல்கிறாய்? சொல்லு'.

'நான் வான வெளியில் நக்ஷத்திரமாக மாறி உங்களைப் பார்ப்பேன்'.

'நீ நக்ஷத்திரமாக மாறி என்னைப் பார்க்கிறாய் என்பதை நான் அறிந்துகொள்வது எப்படி?' என்று வினவினான் சந்திரன், வேடிக்கையாக.

'அது தான் சொல்கிறேனே! அதோ ஏழு நக்ஷத்திரங்கள் கும்பலாகத் தெரிகின்றன, பாருங்கள். அவைகளுக்கு இடது புறத்தில் நான் இருப்பேன். மாலைப் பொழுதில் ஸந்தியாதேவியைத் தழுவிய வண்ணமே நானும் பிரகாசிப்பேன். நக்ஷத்திரங்களெல்லாம் முளைப்பதற்கு முன்பாக, மாலை வேளையில் ஜன்னல் கம்பி வழியாக ஆகாயத்தை உற்று நோக்குங்கள். அந்த நக்ஷத்திரக்கும்பலிற்கு இடது புறத்தில் ஏதாவது நக்ஷத்திரம் தெரியுமாகில், அது 'ரோகிணி' தான் என்று கண்டு கொள்ளுங்கள். என்ன நான் சொல்வது புரிகிறதா?

சந்திரனுக்குச் சிரிப்பு வந்தது. அவனும் சிரித்த வண்ணம் கூறலானான்—'ரொம்ப சரி' உனக்கு முன்பு நான் இறந்து விட்டால்?—அதே நக்ஷத்திரக்கும்பல்களுக்கு வலது புறத்தில் மூன்று முழ தூரத்தில் பிரகாசிப்பேன். நீ ஜன்னல் வழியாக ஆகாயத்தை எட்டிப்பார். என்று அக்கும்பலிற்கு வலது புறத்தில் நக்ஷத்திரம் தெரிகிறதோ, அன்று நான் இறந்துவிட்டேன் என்பதையறிந்துகொள், என்ன?'

பிரியும் நேரம் நெருங்கியது, கணவனும் மனைவியும் இறுகத்தழுவிக்கொண்டு, கண்ணீர் சொரிந்தனர். அந்த வேடிக்கையைக்கண்டு ஆகாயத்தில் ஒளிவீசிக்கொண்டிருந்த நட்சத்திரங்கள் சிரிப்பதுபோலத்தோன்றின. முழுமதியின் கண்களினின்றும் துயரநீர்ப்பெருக்கு எடுத்து ஓடியதுபோலவும் தோன்றியது.

## 2

சந்திரன் மேல்நாடு சென்று ஆறுமாதம் ஆகியது. பன்னிரண்டு மாதமும் ஆகியது. இரண்டாம் வருஷமும் ஆரம்பமாகியது. முதல் மாதம் நீண்டகடிதங்கள் ரோகிணியை நாடி வந்தன. இரண்டாம் மாதம் சற்று நீளத்தில் குறைந்ததோடு மட்டுமல்லாமல், எண்ணிக்கையிலும் குறைவுகண்டது, மூன்றும் மாதம் இரண்டே இரண்டு கடிதங்கள். நாலாவது மாதம் இரண்டே இரண்டு வரிகளில் இரண்டே இரண்டு. ஐந்தாவது மாதம் ஒன்று. ஆறுவது முதல் கடித வரத்தே நின்றுவிட்டது.

ரோகிணி வெகுதுயரத்தில் ஆழ்ந்தாள். ஸ்வாமிக்கு என்னவெல்லாமோ வேண்டிக்கொண்டாள். கணக்கிலடங்காத கடிதங்கள் கணவனை நாடிச்சென்றன, அவளிடமிருந்து. தாய் தந்தையருக்கும் வேலையும் பொறுப்பும் அதிகரித்தன. உடன் தந்திபறந்தது. ஸௌக்கியம் என்ற பதில் வந்தது. அதுமுதற்கொண்டு ரோகிணி துயரத்தை மறந்து அமைதியாக இருக்க முயற்சிசெய்யலானாள். பகல் வேளைகளில் வேலைக்காரர்களின் கைக்காரியத்தைக் கூடப் பிடுங்கிச்செய்வாள். தன் நிலைமையையும் ரேவதியின் வைதவ்யத்தையும் எண்ணிச் சிற்சில சமயம் பெருமூச்செறிவாள். மாலை நேரங்களில் மாடிக்குச்சென்று வானவெளியை உற்றுநோக்கியவண்ணம் காணப்படுவாள்.

இரண்டரை வருஷங்கள் ஆகிவிட்டன. கூடச்சென்றிருந்த தோழன் மேல் நாட்டிலிருந்து திரும்பி வந்து விட்டான். ஆனால் சந்திரன் வரப்போவதாகவே பேச்செடுக்கவில்லை. அத்தோழனிடம் சென்று சந்திரனின் நிலையை விசாரித்து வந்தார் ரோகிணியின் தந்தை.

'மாப்பிள்ளையைப்பற்றிய தகவலே கிடைக்க மாட்டேன் என்கிறதே. நீங்களும் இப்படிப் பேசாமலிருந்தால்' என்றாள் தாய்.

ஏதோ காரியமாகப்போய் கொண்டிருந்த ரோகிணியின் காதில் அவ்வார்த்தைகள் விழுந்தன. ஒட்டுக்கேட்கும் எண்ணத்தில் அங்கேயே நின்று விட்டாள், அவள்.

'நான் என்ன செய்கிறது. சொல்லு. அவன் சிநேகிதன் சொன்னதைக் கேட்டாயோ இல்லையோ. நீ என்ன செய்யச்சொல்கிருயோ அதைச்செய்கிறேன் அம்மா' என்று சலித்துக் கொண்டார் தந்தை.

'பெண் நம்முடையது. அதுக்குச்சுகத்திற்கு வேண்டியதைச் செய்யவேண்டியது நம் கடமை. அவ்வளவுதான் எனக்குத்தெரியும். நான் வேறே என்ன சொல்கிறது?'

'நானும் தந்திக்கு என்று எவ்வளவோ தான் செலவழிக்கிறேன். அது உனக்குத்தெரியாத தன்று.

'ஒரு தந்திக்காவது பதில் வந்தால்தானே!'

'பதில் வந்துவிட்டால் கவலையேது! அது தானே அங்கே கிடையாது' என்று துயரத் துடன் தந்தை கூறினர்.

'இதுமாதிரி பதில் இல்லாமல் இருப்பதற்கு என்ன அர்த்தம்?

'என்ன அர்த்தமோ எனக்குத்தெரியாது. என்னைப் பொறுத்த வரையில் தீர்மானித்து விட்டேன்—இறந்து விட்டான் என்று'.

'இறந்து விட்டாரா?' ரோகிணி கதிகலங்கி ளுள். கணவன் இறந்தபின் உலகத்தில் உயிர் தரித்திருப்பதா! எதற்காக, எந்த நம்பிக்கை யைக்கொண்டு? ரோகிணியின் செவியில் 'இறந் துவிட்டான்' என்ற சொல்லிற்குப் பிறகு ஒன் றுமே விழவில்லை. மறுகணம் ஒரே ஓட்டத் தில் மாடியை அடைந்தாள். கண்களை அகல விழித்து ஆகாயத்தை—ஏழு நட்சத்திரங்களின் கும்பலுக்கு வலதுபுறத்தில்—உற்று நோக்கி ளுள், கூர்ந்து கவனித்தாள். ஒன்றும் அவளது கண்களில் படவில்லை. 'இறப்பதா? நடந்திருக் கவேமுடியாதுஅது. அவர் இவ்வுலகத்திலிருந்து மறைந்திருப்பாராளுல் நக்ஷத்திரமாக மாறி என்னைப்பார்க்க வந்திருப்பாரே. அவர் பொய் சொல்வாரா? மாட்டவேமாட்டார். இறந் திருக்கமாட்டார்' என்று தனக்குள் கூறிக் கொண்டாள். தோழிகள் கூறிக்கொண்டிருந் தனரே — அப்பாவும்கூடத்தான் சொல்லிக் கொண்டிருந்தாரே-'மதுபானம், மறுவிவாகம் என்று' ஒருகால் அது உண்மையாயிருக்கு மோ!—ஒருகாலும் இராது. அவர் அவளுக் குத்தான் சொந்தமானவர். அவரது காதல். காதல்மொழிகள் எல்லாம் வேறு ஒருத்திக்குச் சொந்தமாவதா? முடியவே முடியாது. அவ ரது வார்த்தைகளெல்லாம் வெறும் வாய்ச் சொல்லாக மட்டும் இராது—

—அவர் மிகவும் பரிசுத்தமானவர், எங்கும் அவ்விதமே தானிருப்பார். தன் ரோகிணியைக் காணுமல் எவ்வளவு நாட்கள்தான் தனிமையில் இருப்பார்? அவர் நிச்சயம் விரைவில் என்னை நாடி வந்தே திருவார். அவர் வராமலிருக்க மாட்டார். மார்புறத்தழுவிக் கொள்ளும் வெறியில் துடித்துக்கொண்டிருக்கும், எனது இந்தக் கர பாசங்களில் சிக்கிக்கொள்ளாமல் போவதா? எனது இக் கர பாசத்தின் ஆனந் தத்தை அனுபவிக்க வந்தே தீருவார், என்று இவ்வாறெல்லாம் மனத்தைத் தேற்றிக் கொண்டு ஆகாயத்தை உற்று நோக்கினள்—'என்ன அது? ஏழு நக்ஷத்திரங்களின் வலது புறத்தில் ஏதோ மினுக்குகிறதே! அது என்ன, என்னவாயிருக்கலாம்? என்றுபகீட்டமுற்ருள். அடுத்த கணம் 'சீ இவ்வளவு படபடப்பு நமக்குக்கூடாது. அங்கே எங்கே நக்ஷத்திரம் தெரிகிறது? இல்லை. தெரியவில்லை. ஒரு நிமிஷத்தில் இம்மாதிரி பிழை செய்யத் துணிந்துவிட்டேனே— யானைக்கும் அடிசறுக் கும் என்பார்களே. அது ஒன்றும் பிழையில்லை. அங்கே நக்ஷத்திரமும் இல்லை' என்று மனத் தைத்தேற்றிக் கொண்டாள்.

3

ரோகிணி, ரோகிணி, என்று கூப்பிட்டுக் கொண்டே ரேவதி மாடிக்கு வந்தாள். 'ஏன் ரோகிணி, ஆகாயத்தில் இந்த வேளையில் என்ன கண்ணிற்குப் புலப்படும்? ஒரேயடியாக ஆகாயத்தை விழுங்கி விடுவது போலப்பார்க் கிருயே?' என்ருள் ரேவதி.

'நானு, ஒன்றுமில்லையே!' என்ருள் ரோகிணி ஒன்றும் பார்க்காதவள் போல.

'ஒன்றுமில்லையா? என்னிடமே இப்படி மறைக்கிருயே! உள்ளத்தை ஒளியாமல் கூறு'.

'ஒன்றுமில்லையக்கா' என்ருள்.........

'ஆகாயத்தைப் பார்ப்பானேன்! அவரைப் பற்றி ஏதோ இன்பக்கனவு கண்டு கொண்டி ருக்கிருய் போலிருக்கிறது?'

ரோகிணி ஒன்றும் பதில் கூருமல் வாளா விருந்தாள்.

ரேவதியின் கண்களில் நீர் துளித்தது. 'ரோகிணி, கவலைப்படாதே. உனது அந்த ஆசையற்ற நாயகன் வராமல் ஏமாற்றிவிட் டாலும், காலக்ஷேபத்திற்கு நீ கவலைப்பட வேண்டாம். அப்பா ஆஸ்தி பூராவையும் உன் பெயருக்கே எழுதிவைத்துவிடுவதாகச் சொல் லிக்கொண்டிருக்கிருர்'.

'அப்படிக்கூருதே, அக்கா. அவர் ஏமாற்ற மாட்டார். நிச்சயம் வந்தேதிருவார். என்னைப் பிரிந்து எவ்வளவு நாட்கள்தான் இருப்பார்? இந்தத்திடநம்பிக்கையைத் தகர்த்தெறிய ரேவ திக்கு மனம் வரவில்லை. மௌனம் சாதித் தாள்.

'அவர் வந்துவிடமாட்டாரா, அக்கா' என் ருள் ரோகிணி.

'வராமல் என்ன! நிச்சயம் வருவார்' என்று உள்ளொன்றும், புறம்பொன்றும் வைத்துக் கூறும்படியாகிவிட்டது, ரேவதிக்கு. அச்சமயம் தாய் கீழிருந்து ரேவதியை அழைத்தாள். ரேவதி கீழே சென்றுவிட்டாள்.

ரோகிணியின் கண்கள் ஆகாயத்தை—ஏழு நட்சத்திரங்களுக்கருகில் வெறித்து நோக்கின. அவைகளின் வலப்புறத்தில் 'மினுக்கு, மினுக்கு' என்று மினுக்குவதுபோலப் பூச்சி பறந்தது அவளது கண்களுக்கு. இதயம் பட

பட'க்கவாரம்பித்தது. கண்ணைக் கையால் தேய்த்துத் துடைத்துக்கொண்டு மறுபடியும் பார்த்தாள் — நக்ஷத்திரம் ஒன்றும் தெரியவில்லை. 'சுகமாக உயிர் வாழ்கிறார்' என்று தீர்மானித்துக்கொண்டாள். 'அவரைப் பாராமல் எவ்வளவு நாட்கள் தானிருப்பது? நானே நக்ஷத்திரமாகப் பிறந்து, அவரைப் பார்க்கிறேனே! நக்ஷத்திரமாகப் பிறந்தால்—அவரை இரவு நேரங்களில்தான் பார்க்கமுடியும்! பகல் நேரங்களில் முடியாது. அதற்கென்னசெய்வது? பகல் வேளையில் பார்க்கவேண்டாமே! இரவு வேளையில் மட்டும்தான் பார்ப்போமே! அவ்வளவு போதாதா, என்ன அதற்கு? 'பகல் வேளைகளில், சூரியனது வீட்டு ஹாலில் படுத்து உறங்குவது. அந்திப்பொழுது ஆனதும், நன்கு அலங்கரித்துக்கொண்டு சூரியன் நன்கு அஸ்தமிப்பதற்கு முன்பே, மினுக்க ஆரம்பித்து விடுவது. மாரிக் காலத்தில், சாதகபக்ஷியின் தாகத்தைப் போக்குவதற்கு நீர்த்திவலைகளை உதிர்ப்பது. சந்தியாதேவியுடன் கூடவே ஏழு நக்ஷத்திரங்களுக்கு இடது புறத்தில் உதித்துத்தன் நாயகனுக்கு ஆரத்தி எடுப்பது' என்றால் எவ்வளவு சுகமாயிருக்கும்?

—இவ்விதமான நம்பிக்கையிலும், ஆச்வாசத்திலும், மூன்று முழு வருஷங்களைத்தள்ளி விட்டாள், ரோகிணி. நான்காவது வருஷமும் ஆரம்பமாகிவிட்டது. ரோகிணி, நம்பிக்கை இழக்கவில்லை. ஆனால் பொறுமை யிழந்து விட்டாள். 'கணவனைப்பிரிந்திருக்கிறோமே' என்ற ஏக்கத்தில் இரவுபகல், எந்நேரத்திலும் மூழ்கிக்கிடப்பாள். சரியான தூக்கமோ. சாப்பாடோ கிடையவே கிடையாது. அவளுக்கு, கொஞ்ச நாட்களுக்கெல்லாம் அவளைப் பரீக்ஷிக்க டாக்டர்கள் வரவாரம்பித்தனர். அவளுக்கு 'ராஜயக்ஷ்மா' கண்டிருக்கிறது என்று ஏகோபித்த அபிப்பிராயம் அளித்து விட்டனர் வைத்தியர்கள். குடும்பத்தார்கள் மிக்ககவலையும், பீதியும் அடைந்தனர். அவளை அழைத்துக்கொண்டு அவளது தந்தை மலைப்பிரதேசத்திற்குச் சென்றார். நோய் வாய்ப்பட்டது முதல், ரோகிணி மலர்ந்த முகத்துடன் காணப்பட்டாள். தன் தாய்தந்தையுடனும் சரி, தமக்கையுடனும்சரி சிரித்து இனிமையாகப் பேசிவந்தாள்.

அன்று பௌர்ணமி, ஒருவித மாசுமறுவின்றி நீலவானம் தெளிவாகக்காணப்பட்டது. முழுமதி, 'நிலவு' என்னும் பாலைக்கொண்டு பூதேவிக்கு அபிஷேகம் செய்திருந்தான். இரவு பன்னிரண்டு மணியிருக்கும், ரோகிணி, மெதுவாக 'அக்கா' என்றழைத்தாள். அருகில் படுத்து உறங்கிக்கொண்டிருந்த ரேவதி எழுந்து உட்கார்ந்து 'ஏன் அம்மா' என்று கேட்டாள்.

'இன்று பௌர்ணமி தானே!'

'ஆமாம்'

'தாரகைகள் ஆகாயத்தில் விழித்துக்கொண்டிருக்கின்றனவா?'

'விழித்துக்கொண்டிருக்கின்றன, ரோகிணி'

'பூமி, ஆகாயம், இரண்டிலும் மகிழ்ச்சி ததும்பியிருக்கிறதல்லவா?'

'என்ன என்ன கேள்வியெல்லாமோ கேட்கிறாயே' என்றாள் ரேவதி, வியப்புடன்.

'அக்கா, உன்னால் புரிந்து கொள்ளமுடியாது. அன்று இரவும் இதே மாதிரிதான் மகிழ்ச்சி ததும்பியிருந்தது'

'என்றைக்கு, அடி அசடே?

'அவர், என்னைப்பிரிந்து சென்றாரல்லவா? அன்று இதேமாதிரிதானிருந்தது. இன்று சந்திக்கும் சுபதினம்! அதனால் தான் இப்படியிருக்கிறது' என்று தனக்குத்தானே ஏதோ கூறிக்கொண்டாள், ரோகிணி.

'சந்திக்கும் சுபதினமா? என்றாள் ரேவதி, கலக்கத்துடன்.

'ஏன் கலங்குகிறாய் அக்கா? அதோ தெரிகிறதே, ஏழு நக்ஷத்திரங்கள், அதற்கிடது புறத்தில் நானும் நக்ஷத்திரமாயிருப்பேன்'.

'ஏனடி இப்படி உளறுகிறாய்?'

ரோகிணி புன் முறுவல் பூத்தாள்.

'இன்றைக்கு ஜ்வரம்-கிரம் இல்லை. சிறிது தூங்கு'

'தூங்குவதா! அதற்குத்தானே ஏற்பாடு செய்து கொண்டிருக்கிறேன். அந்த ஜன்னல் கதவை நன்றாகத் திறந்துவை. என்ன குளிர்ந்த காற்றையே காணோமே! சரி, வந்துவிட்டது. அக்கா, ஏழு நக்ஷத்திரங்களுக்கு இடது புறத்தில் தானிருப்பேன். பார்க்கவேண்டுமென்று ஆசை ஏற்பட்டால் என்னைப்பார்த்துக்கொள், அங்கே'

'ரோகிணி' ரோகிணி, இதுமாதிரி உளறாமல் தூங்கேன், சிறிது நேரத்திற்கு'

'இனி, சப்தம் போடாதே! நான் தூங்கப் போகிறேன். என்று புன் முறுவலுடன் கூறினாள் ரோகிணி.

'ரோகிணி, தூக்கம் வந்துவிட்டதா! ரோகிணி ஒரு வார்த்தை சொல்லேன்'

ரோகிணியின் வாயினின்றும் வார்த்தையே எழவில்லை. ரேவதியின் புலம்பல் அறையின் மூலை முடுக்குகளிலெல்லாம் முட்டிக்கொண்டு அறைக்குள்ளேயே சுழன்றுகொண்டிருந்தது.

4

லண்டன் நகரத்து மாதாகோயிலில், இரவு மணி பன்னிரண்டு 'டணார் டணார்' என்று அடித்தது. சந்திரன் தன் லண்டன் நகரத்துப் புது மனைவி 'எமிலி'யின் கைகளைத் தன் மீதிருந்து நகர்த்திக்கொண்டு கட்டிலின்மீது உட்கார்ந்தான், ஒரு உணர்ச்சி வேகத்தில். ஜன்னல் கதவுகளைத் திறந்தான். 'எமிலி' சோம்பல் முறித்துக்கொண்டு, எழுந்து வியப்புடன் 'குளிர் நடுக்குகிறது. ஜன்னல் கதவுகளை ஏன் திறக்கிறீர்கள்?' என்றாள்.

வெகு நேரம் வரை சந்திரன் பதில் அளிக்காமலிருப்பதைப் பார்த்து, அருகில் சென்று அவனது கையைப் பிடித்து உலுக்கிவிட்டு ஏமிலி, 'இதென்ன காரியம் செய்கிறீர்கள்? ஏதாவது ஸ்வப்னம்—கிப்னமா?' என்றாள்.

'ஸ்வப்னமா! இல்லை, ஏமிலி. ரோகிணி அதோ நின்றுகொண்டு என்னை உற்றுநோக்குகிறாள். ஸ்வப்னமாய் எப்படியிருக்கமுடியும்?'

'கனவுதான் கண்டிருக்கிறீர்கள். நன்றாகத் தெரிகிறதே நீங்கள் பேசும் பேச்சிலிருந்து. வந்து படுத்துக்கொண்டு பேசாமல் தூங்குங்கள்' என்றாள், புன்முறுவலுடன் ஏமிலி.

'என்னைப் பார்ப்பதற்காக எவ்வளவு நாழிகையாக அவள் காத்துக்கொண்டிருக்கிறாளோ தெரியவில்லை. இந்தக் குளிரில் அவள்மட்டும் நிற்கிறது, நான் சுகமாய்த்தூங்குவதா? நன்றாயிருக்கிறது. அதெப்படி முடியும்?'

'எவளைப்பற்றிச் சொல்கிறீர்கள்? என் கண்ணில் ஒருவரும் நிற்பது தெரியக்காணோமே!'

'உனக்குத் தெரியவில்லை? அதோ ஏழு நக்ஷத்திரங்களுக்கு இடதுபுறத்தில் நின்றுகொண்டிருக்கிறாளே, அவள்! நிஜமாக உனக்குத் தெரியவில்லையா?'

'அவள் யார்?' என்றாள் ஆச்சரியத்துடன் ஏமிலி.

'அவள் தான், ரோகிணி'

'ரோகிணி என்பது யார்?'

'அவள்தான் என் மனைவி,'

'உங்களுக்குக் கல்யாணம் ஆகிவிட்டதா?'

'முன்பேதான் சொன்னேனே, ஆகிவிட்டது என்று.'

'ஆமாம். ஆமாம். ஞாபகம் வருகிறது. ஆனால் அவளைத் தள்ளிவைத்துவிட்டதாகச் சொன்னீர்களே, நீங்கள்'

'நான் தள்ளிவைத்து விட்டதாகத்தான் நினைத்தேன் ஏமிலி. ஆனால் அவள் என்னை விடுபவளாகத் தோன்றவில்லை. அவள் விவாகரத்தை ஒத்துக்கொண்டால் தானே, அதற்கு?'

'துரோகி' என்று கோபத்துடன் கூறி அவனை உதறித்தள்ளி நகர்ந்தாள் ஏமிலி.

அன்று துறை முகத்தில் கூட்டத்தோடு கூட்டமாகச் சென்று கொண்டிருந்தான், சந்திரன் கப்பலேறுவதற்கு.

சந்தியாகாலம் மஞ்சள் வெயில் இறைத்துக் கொண்டிருந்தது. லண்டன்மாநகரத்து வாலிபன் ஒருவனின் கையுடன் கை சேர்த்துக் கொண்டு ஏமிலி, துறைமுகத்தில் உலாவிக் கொண்டிருந்தாள். சந்திரனின் கண்கள் அவளைத் தேடவே இல்லை. ஆகாயத்தை உற்று நோக்கியவண்ணம் கப்பலில் ஏறி அமர்ந்தான் அவன்.

'மிஸ்டர் சந்திரன் இந்தக் கப்பலில்தானே தம் நாட்டுக்குத் திரும்புகிறார்?' என்று ஏமிலியைக் கேட்டான் அவ்வாலிபன். ஏமிலி வெறுப்புத் ததும்பும் குரலில் 'ஆம்—இந்தியர்களுண்டே, வெறும் பொய்யர்கள் மட்டுமல்ல. விபரீதப் போக்குப் படைத்தவர்களும்கூட' என்று கூறினாள்.

'என்ன அப்படிச் சொல்லுகிறீர்கள்?' என்றான் வாலிபன் ஆச்சரியத்துடன்.

'ஒரு நக்ஷத்திரத்தைப் பார்த்துவிட்டு அவள்தான் தன் மனைவி என்று கூறிக்கொண்டிருந்தான் அவன்' என்றாள் ஏமிலி.

'நக்ஷத்திரத்தையா?' என்று கேட்டு வாலிபன் சிரிக்கலானான். ஏமிலியின் சிரிப்பும் அவனுடன் சேர்ந்துகொண்டது. கப்பல் கிளம்பும் மணியும் ஒலித்தது. இந்த மூன்று நாதமும் ஒன்று சேர்ந்தன. கப்பல் புறப்பட்டது. விபரீதப் போக்குப் படைத்த அந்த வாலிபனை, ஏமிலி தூரதிருஷ்டிக் கண்ணாடியின் உதவியைக்கொண்டு கூர்ந்து கவனிக்கலானாள்.

சந்திரன் தன் கூர்ந்த பார்வையில் ஆகாயத்தை உற்று நோக்கிக்கொண்டிருந்தான். ஏழு நக்ஷத்திரங்களுக்கும் இடது புறத்தில் ஒரு பிரகாசமான நக்ஷத்திரம் பிரகாசித்துக்கொண்டிருந்தது. சந்திரன் நக்ஷத்திரத்தில் வைத்த கண்ணை எடுக்கவேயில்லை. நக்ஷத்திரமும் கப்பலுடன் ஓடிக்கொண்டிருந்தது.

வான வெளியில் நக்ஷத்திரங்களின் பூங்காவனம். அப்பூங்காவின் பிரதிபிம்பம், நீல நிறமான ஜலத்தில்பிரகாசித்துக்கொண்டிருந்தது. இந்த இரண்டிற்கும் மத்தியில், 'ரோகிணி' நக்ஷத்திரத்தைக் கூர்ந்து நோக்கிக்கொண்டிருந்தன. சந்திரனது இரு நேத்திரங்களும்.




டோங்ரேயின்

# பாலாமிருதம்

பிரசித்தி பெற்ற குழந்தைகளின்

டானிக்

# கோவில் மணிகள்

ஆர். கே. விசுவநாதன், எம். ஏ.

ஒலி எழுப்புவதற்கு நம் முன்னோர்கள் கையாண்ட சாதனங்களுள் மணிகள் மிகவும் பழமையானவை. பூஜை வேளைகளில் கோவில்களில் பக்தர்களின் மனதைத் தியானத்தில் ஈடுபடச் செய்வதற்குப் பெரிய மணிகளும் சிறிய மணிகளும் வெகு காலமாக உபயோகப்பட்டு வருவதை நாம் அறிவோம். எல்லா ஒலிகளிலும் 'ஓம்' என்ற ஒலியையே நம்முன்னோர்கள் போற்றி வந்திருக்கின்றார்கள். இதற்கென்றே மணிகளைக்கையாண்டார்கள்போலும் தென்னிந்தியாவில் உள்ள ஒவ்வொரு கோவிலிலும் பெரிய மணி ஒன்று உண்டு. இம்மணிகளை வார்ப்பிப்பதற்கென்றே ஸ்தபதிகள் என்ற வகுப்பினர் இருக்கின்றனர். பரம்பரையாய் இவர்கள் இத்தொழிலில் ஈடுபட்டு வந்ததின் பயனாக இந்நற்கலை மேன்மை பெற்றிருப்பது வியக்கத்தக்கதன்று. மக்களினிடையே சமய அறிவைப் பரப்புவதற்குப் புராண கதைகளைப் பக்தியில் சிறந்த பாகவதர்களைக் கொண்டு எடுத்து கூறும் வழக்கம் நம்நாட்டில் இன்னும் வழங்கி வருவதை நாம் அறிவோம். இவற்றை எடுத்துச் சொல்லும்போது மக்களின் ஊக்கம் தளராமல் இருப்பதற்கு நடு நடுவே சங்கீதத்தையும் சேர்த்துக்கொள்வது உண்டு. அப்போது ஜாலரா என்ற இசைக்கருவியை உபயோகிப்பார்கள். இவை வட்ட வடிவமுள்ள உலோகத் தகடுகளேயாகும். இவற்றில் அனேக வகை இருக்கின்றன. அவற்றுள் பிரசித்தி பெற்ற புண்டரீகபுரம் ஜாலராவைப்பற்றி அனைவரும் கேள்விப் பட்டிருக்கலாம். இவற்றை வார்ப்பிப்பதற்கும் ஸ்தபதிகள் உண்டு. ஒலி எழுப்புவதற்குத் தகடுகளைக் கிண்ணிகளாகவும் எடுத்துக்கொள்வதுண்டு. உதாரணமாக, ஜலதரங்கம் என்ற வாத்தியத்தைக் கூறலாம். பீங்கான் கிண்ணிகளில் வேண்டுகிற அளவுக்கு ஜலத்தை எடுத்துக்கொண்டு சிறு குச்சிகளினால் அவற்றைத் தட்டி, ஸ்வரக் கிரமங்களின்படி ஒலிகளை எழுப்பி, ராகங்களையும் கீர்த்தனைகளையும் ஜலதரங்க வித்வான்கள் வாசிப்பார்கள். இதைபோலவே மேனாட்டார்கள் மணிதரங்கம் என்ற வாத்தியத்தைக் கையாண்டு வருகின்றார்கள். இதில் பெரிய மணிகள் பலவற்றை ஸ்வரக்கிரமங்களுக்குத் தகுந்தவாறு அமைத்துக்கொண்டு ஒலியை எழுப்பி அவர்களின் சங்கீதத்தை வாசிக்கின்றார்கள். இவ்வாத்தியத்திற்கு ஆங்கிலத்தில் (Carillon) என்று பெயர். ஐரோப்பாவில் 'ஆண்ட்வெர்ப்' என்ற இடத்தில் உள்ள வாத்தியம் பிரசித்தி பெற்றது.

இக்கட்டுரையில்மணிகள் வார்க்கும்விதத்தையும் அவற்றின் ஒலியைப் பற்றிய சில விவரங்களையும் பார்ப்போம்.

முக்கால் பாகம் செம்பும் கால்பாகம் வெள்ளீயமும் கலந்த உலோகத்தில் பெரிய மணிகள் வார்க்கப்படுகின்றன. இவைகளில் சில உருளை வடிவமாகவும் (Cylindrical) சில கூருருளை வடிவமாகவும் (Conical) மற்றும் சில அரைக்கோள வடிவமாகவும் (Hemi Spherical) இருக்கும். பெரும்பாலனவற்றில் அடிப்பாகம் உருளை வடிவாயும், வாய் கூருருளை வடிவாயும் இருப்பதைக்காணலாம். உலோகத்தின் தடிப்பு மணி முழுவதும் ஒரே அளவினதாய் இராமல் அடியிலிருந்து வாய்க்குச்செல்லச் செல்ல அதிகரித்துக்கொண்டு வருவதைப் பார்க்கலாம். அடிப்பாகத்திற்குச் சற்றுக்கீழேயுள்ளபாகத்தை மணியின் தோள் (Shoulder) என்று சொல்லுவார்கள். வாய்க்கும் அடிப்பாகத்திற்குமிடையே உள்ள பாகத்தை மணியின் இடுப்பு (Waist) என்றும், வாயின் உள் விளிம்பை உதடு (Lip) என்றும் கூறுவார்கள். உதட்டுக்குச்சற்றே மேலுள்ள பாகம் மணியின் மற்ற பாகங்களைக்காட்டிலும் அதிக தடிப்புடன் இருப்பதைக் காணலாம். இதை (Sound bow) என்று கூறுவார்கள். மணியின் நடுவே தொங்கும் நாக்கு இப்பாகத்தைத் தாக்கி ஒலியை எழுப்புகிறது. சில மணிகளில் நாக்கு வைக்காமல் அதன் வெளி விளிம்பைஉலோகத் துண்டினால் தட்டி ஒலியை எழுப்புவதும் உண்டு. நாக்குள்ளபெரிய மணிகளை இரண்டு விதமாக ஒலிக்கச் செய்வார்கள். ஒன்றில் நாக்கை மட்டும் இழுத்து விளிம்பில் மோதுமாறு செய்வார்கள். மற்றொரு விதத்தில் மணி முழுவதையும் சாய்த்து ஒலியை எழுப்புவார்கள். இதற்குத் தகுந்தவாறு மணியின் அடிப்பாகம் ஏற்றப்பட்டுக் கயிற்றுடன் இணைக்கப்பட்டிருக்கும். கயிற்றை இழுப்பதினால் மணி சாய்ந்து நாக்குடன் மோதி ஒலி உண்டாகும். மணியைப் போல ஜாலரா விளைந்திராவிட்டாலும் ஒலி சம்பந்தமாய் ஜாலராவையும் மணிகளின் வகுப்பிலேயே சேர்த்துக்கொள்ள வேண்டும். ஜாலராவை வார்ப்பிப்பதற்குப்பத்தில் எட்டுப் பாகம் செம்பையும் இரண்டு பாகம் வெள்ளீயத்தையும் சேர்த்துக்கொள்வார்கள். ஜாலராவில் சிறிதும் பெரிதுமாக அநேக ரகங்கள் உண்டு. பெரிய ஜாலராவுக்கு வட்ட வடிவமாய்த் தகடுகளை எடுத்து நடுவில் சற்றுக்குழிந்து இருக்குமாறு செய்வார்கள். குழிந்துள்ள பாகத்தின் வெளிப்புறத்தில் கைப்பிடியை அமைத்துக்கொண்டு ஒன்றைமற்றொன்றினால் தட்டி ஒலியை எழுப்புவது வழக்கம். கைப்பிடிக்குப்பதிலாக இரண்டு தகடுகளிலும் நடுவில் துவாரமிட்டு அவற்றை நூலினால் சேர்த்துக்கொள்வதும் உண்டு. சிறிய ஜால

ராக்கள் குழிவு மிகுந்த சிறிய கிண்ணங்களாக இருக்கும். இவற்றை ஒன்ரேடொன்று விளிம்பில் மட்டும் மோதிக் கொள்ளுமாறு செய்து ஒலி எழுப்பப்படும்.

மணிகளை வார்ப்பிப்பதற்குமுன் வேண்டுகிற அளவுக்கு மணியைப்போல் மண்ணில் 'கரு' செய்து கொள்வார்கள். இலுப்பை எண்ணெய் குங்குலியம் இரண்டையும் நன்ருய்க் கொதிக்க வைத்து மெழுகு செய்து கொண்டு அதை மண் கருவின்மீது வேண்டுகிற கனத்திற்குப் பூசி, விளிம்பு முதலிய பல்வேறு இடங்களுக்கு வேண்டியபடி நிரவி விடுவார்கள். நன்ருகக் காய்ந்தபின், சுட்ட மண்ணை அரைத்து மெழுக்கின்மீது பூசிக்கொள்வார்கள். மறுபடியும் காயவைத்து அதன்பக்கமுழுவதும் கல்லைப் பரப்பிச் சூளை போடுவார்கள். அது நன்ருகச் சூடேறியதும் உள்ளிருக்கும் மெழுகு உருகி அதற்கென்று ஆங்காங்கே வைத்துள்ள துவாரங்களின் வழியாக வழிந்தோடி விடும். வேருெரு அடுப்பில் உலோகக் கலவையை அதாவது வெண்கலத்தைக் கொதிக்க வைத்து அது நீரானவுடன் கருக்கூட்டிலுள்ள துவாரங்களில் ஊற்றுவார்கள். மெழுகு இருந்த இடத்தில் உலோகக் கலவை சென்று பூராவும் நிரம்பி வழிய ஆரம்பித்தவுடன் ஊற்றுவதை நிறுத்திக்கொள்வார்கள். ஒரு வாரம் அல்லது பத்துத்தினங்கள்வரை கருவை ஆறவைப்பார்கள். நன்ருக ஆறியவுடன் மேலிருந்த கல்மண் முதலியவற்றை எடுத்தெறிந்துவிட்டு உள்ளிருக்கும் மண் கருவையும் நீக்கி விடுவார்கள். பிறகு மணிக்கு நாக்கைச் சேர்த்துகொண்டு தொங்கவிடுவதற்கு வேண்டியவாறு மணியின் அடியில் வசதி செய்து கொள்ளுவார்கள். மேனுட்டார்கள் வார்க்கும் முறையில் முதலில் இருப்புக்கூடு ஒன்றில் மெழுகு போன்ற ஒரு கலவையைத் தடவி மணியின் வெளிப்பாகம் இருக்கவேண்டியபடி பூசிக்கொள்வார்கள். பிரத்யேகமாக மணிக் கரு ஒன்றைக் கல்லில் செய்து கொண்டு அதன் மீது மணியின் உள் பக்கம் எவ்வாறு இருக்க வேண்டுமோ அதைப் போல முன்சொன்னமெழுகைத்தடவிக்கொள்வார்கள். பிறகு மணியின் உள்புறத்தைக் கொண்ட கருவின்மீது வெளிப்புறத்தைக் கொண்டுள்ள இருப்புக்கூட்டை நன்ருகப்படிய வைத்துச் சூடுசெய்து, இரண்டிற்கும் நடுவே காய்ந்த வெண்கலத்தை ஊற்றிக் குளிர வைப்பார்கள். பத்துத் தினங்கள் ஆனபின் இருப்புக் கூட்டையும் கருவையும் நீக்கி விடுவார்கள். நாதம் சரியாக அமையாவிடில் மணியின் விளிம்பை இராவிச் சரிப்படுத்துவார்கள். ஏறக்குறைய இதே முறையில்தான் ஜாலராக்களும் வார்க்கப்படுகின்றன.

இனி, மணிகளின் ஒலியைப்பற்றிச் சிறிது பார்ப்போம். ஒலிகளெல்லாம் துடிக்கும் பொருள்களிலிருந்து வெளிப்படுவது யாவரும் அறிந்த விஷயம். ஒலியின் சுருதி என்பது அதை எழுப்பிய பொருளின் துடிப்பு வேகத்தைச் சார்ந்திருக்கிறது. அதன் முழக்கம் இத்துடிப்பின் வீச்சைப் பொறுத்திருக்கிறது. துடிக்கும் பொருள் கம்பியாகவோ அல்லது காற்று நிரையாகவோ இருத்தலே மிக எளிய அமைப்பாகும். அவ்வாறு இல்லாமல் உலோகத் தகடு, கிண்ணம்போன்ற பொருள்களைக்கொண்டு ஒலி எழுப்பினல் துடிப்பின் தன்மை சிக்கலாகிவிடுகிறது. நாம் எடுத்துக் கொள்ளும் தகடு சமதளமாய் இராமல் உருளை வடிவத்துடனே அல்லது கூருருளைவடிவத்துடனே இருக்குமானல் அதன் துடிப்புப் பின்னும் சிக்கலாகி விடுகிறது. இத்துடன் தகட்டின் கனமும் இடத்திற்கிடம் மாறுபட்டால் துடிப்பைப்பற்றிய ஆராய்ச்சி மிக்கக்கடினமாகி விடுகிறது. சென்ற நூற்ருண்டின் இறுதியில் "லார்டு ராலே" என்ற பிரசித்திபெற்ற விஞ்ஞானியே முதன் முதல் மணிகளைப் பற்றிய சோதனைகளை நடத்தி ஓரளவுக்கு அவற்றின் ஒலியின் தன்மையை அறிந்தார். இவர் இங்கிலாந்தில் உள்ள பெரிய மாதாகோவில் மணிகளைச் சோதித்து சில முடிவுகளைக் கண்டார். எல்லா மணிகளின் வாயும் வட்டவடிவமாய் இருப்பதை நாம் அறிவோம். நாக்கினல் மோதி மணியைத் துடிக்கச்செய்தவுடன் மணியின் வாய் வட்டவடிவத்திலிருந்து ஆயத வடிவத்திற்கு (Ellipse) மாறி, திரும்ப வட்ட வடிவமாகி, இம்மாதிரி தொடர்ந்து மாறிக்கொண்டேபோவதை மேற்சொன்ன விஞ்ஞானி கண்டார். மணியின் மீது சில இடங்களில் அசைவே இல்லாமல் இருப்பதைப் பார்த்தார். அவ்விடங்கள் இரண்டு வகையாக அமைந்திருப்பதைக் கண்டார். முதல் வகை இடங்களை முடிவட்டங்கள் (Nodal circles) என்றும் இரண்டாவது வகை இடங்களை முடிரேகைகள் (Nodal meridians) என்றும் வகைப்படுத்திக்கொண்டார். மணியைச்சுற்றி முடிவட்டங்களும், மணிவாயிலிருந்து அடிவரை முடிரேகைகளும் ஏற்படுவதை அறிந்தார். மேலும் நாக்கு மோதும் பாகத்திற்குத் தகுந்தவாறு இவ்விரண்டு வகை இடங்களும் அமைவதைக் கண்டார். தன் இருசைச் சுற்றி மணி சீராக அமையாவிடில் ஒரே சமயத்தில் இரண்டுவித துடிப்புக்கள் உண்டாகி விம்மல்கள் (Beats) கேட்பதை உணர்ந்தார். விம்மல் என்னும் நிகழ்ச்சி ஒன்றுக்கொன்று மிக நெருங்கிய துடிப்பு எண்களை உடைய இரண்டு ஒலிகள் ஏற்படும்போது புலப்படும். அப்போது முழக்கம் மாறி மாறி உயர்ந்து குறையும். இவ்வாறு ஒலியின் முழக்கம் பொங்கி வடிதலையே விம்மல் என்று கூறுவது. எல்லா மணிகளின் நாதத்திலும் விம்மல் கேட்பதை அறிந்தார். ஒலிகளெல்லாம் தூயனவல்ல என்றும், அவை உண்டாகும்போது ஓர் ஆதார சுருதியுடன் அதற்கு இரண்டு முதல் பன்மடங்குகொண்ட பல வேறு பரிவார சுருதிகள் (Overtones) கலந்தே வருகின்றன என்றும் நாமறிவோம். "ராலே" மணியின் நாதத்தில் அடங்கிய பரிவார சுருதிகளைத்

தக்க சாதனங்களைக்கொண்டு, அறிந்தார். அதில் ஓர் ஆதார சுருதியும், அதற்கு இரண்டு மடங்கு சுருதியுள்ள மேல்ஷட்ஜமமும், அதற்கடுத்த சாதாரண காந்தாரமும், அதற்கடுத்த பஞ்சமமும், அதற்கு மேலுள்ள ஷட்ஜமமும் ஆக ஐந்து பரிவார சுருதிகள் இருப்பதைக் கண்டார். அநேக மணிகளில் இப்பரிவார சுருதிகளினிடையே இசைப்பொருத்தம் இல்லாமல் இருப்பதை அறிந்தார். பரிவார சுருதிகள் இசைப் பொருத்தத்துடன் வருமாறு செய்வதே மணிவார்ப்பிப்பவர்களின் வேலைத் திறனாகும். மணியின் நாதத்தில் உள்ளமிகக் குறைவான சுருதி சூயைத்தான் மணியின் Hum note என்று சொல்வது; அதிலுள்ள தாரஸ்தாயி கீழ் ஷட் ஜமத்தை மணியின் Strike note என்று கூறுவார்கள்.

கடைசியாக உலகப் பிரசித்திபெற்ற மணிகளில் சிலவற்றின் விவரங்களைப் பார்ப்போம். உலகிலுள்ள எல்லா மணிகளைக் காட்டிலும் ரஷ்ஷியதேசத்து "Tsar Kalokol" என்ற மணியே மிகப்பெரிதாகும். இது 1733-ஆம் ஆண்டில் வார்க்கப்பட்டு நூறு வருஷங்கள் வரை தொங்கவிடப்படாமல் தரையிலேயே இருந்ததாகக் கூறப்படுகிறது. பின்னர் "நிகலஸ்" என்ற அரசர் நாளில், அதாவது 1836-ஆம் ஆண்டில் ஒரு கட்டிடத்தில் தொங்கவிடப்பட்டதாகக் கூறப்படுகிறது. சில வருஷங்கள் கழிந்த பின்னர் கட்டிடம் நெருப்புப் பிடித்துக்கொண்டு, மணி கீழே விழ, அதன் விளிம்பின் ஒருபாகம் தெறித்துவிட்டது. மறுபடியும் இதைத் தொங்கவிட்டார்கள். இதன் நிறை 180 டன். உயரம் 19 அடி. 9 அங்குலம். வாயின் சுற்றளவு 60 அடி 9 அங்குலம். கனம் 2 அடி. இதன் ஒவ்வொரு பக்கத்திலும் 25 பேர்கள் நின்றுகொண்டு இதன் நாக்கை இழுத்து விளிம்பில் மோதும்படி செய்கிறார்களாம். அதற்கு அடுத்தபடியாகப் பர்மாவிலுள்ள ஒரு கோவில் மணியைக் கூறுகிறார்கள். இதன் நிறை 80 டன். தென்னிந்தியாவில் திருச்சிராப்பள்ளி, சிதம்பரம், திருப்பதி முதலிய இடங்களில் உள்ள மணிகள் பிரசித்தி பெற்றவை. இவை மூன்றிலும் திருப்பதி மணிதான் மிகப்பெரியது. நாதத்தில் திருச்சி மலைக்கோட்டை மணிதான் சிறந்தது.


மேதாஸ்

# மஸ்தானு மாத்திரைகள்

**சிறந்த டானிக்**

மேல்நாட்டு வைத்திய முறை, நமது ஆயுர்வேத முறை
இவைகளை ஒருங்கே சேர்த்து தயாரிக்கப்பட்டுள்ளது

**பலஹீனம், வாத வலிகள், மன ஓய்வு,**
**தலைவலி, அஜீர்ணம், மலச்சிக்கல்,**
**காசநோய், சிற்றின்பத்தில் பலஹீனம்**

இவைகளுக்கெல்லாம் கைகண்ட ஒளஷதம்

**இன்றே ஆரம்பியுங்கள்**

கிடைக்குமிடம்:—

## K. S. மேதா & கோ.,

மருந்து வியாபாரிகள்,

**250, சைனு பஜார் (மாடி), சென்னை.**

# ஸ்திரீ சுபாவம்

**கமலா பத்மநாபன்**

“ஏன் சாரதா? உன் தங்கை இங்கு வந்து கிட்டத்தட்ட ஒரு மாதம் ஆகிறதுபோலிருக்கே! லீவை எல்லாம் இங்கேயே கழித்து விட்டால் அப்புறம் அவள் உங்கள் பெரிய அக்கா வீட்டில்போய் எப்பொழுது இருக்கிறதாம்? தன் வீட்டில்வந்து இருக்கவில்லையே என்று அவளுக்குக் கோபம் வராதா?” என்று நாசூக்காய்க் கேட்டான் விச்வநாதன்.

“ஏன்? என் தங்கை சுனந்தா இங்குவந்து இருப்பதினால் உங்களுக்கென்ன அப்பேர்ப்பட்ட கஷ்டம்? நானும் மூன்று வருஷமாய் அவளைக் கோடை விடுமுறைக்கு இங்கேவந்து என்னுடன் கொஞ்ச நாட்களாவது இருந்து விட்டுப் போகும்படி கூப்பிட்டுக்கொண்டே இருந்தேன். ஒரு தடவை கூடவரவில்லை. ஏதோ இந்த வருஷமாவது வந்து பத்து நாட்களாவது பொருந்தி நம் ஆத்தில் தங்கி இருக்கிறாளே என்று நான் சந்தோஷப்பட்டுக் கொண்டிருக்கையில், உங்களுக்கு அதற்குள் அவள்வந்து ரொம்ப நாட்கள் ஆகிவிட்டன போல் தோன்றுகிறதோ? ஆச்சு, நாளைக்குக் கல்யாணம்ஆய், புக்ககம் போய்விட்டால் அப்புறம் நாமெல்லாம் வருந்தி வருந்திக் கூப்பிட்டால்தான் அவள் நம்மாத்திற்கு வரப்போகிறாளா என்ன? உங்களுக்கு ஏன் இவ்வளவு அலுப்பு? நீங்கள் இப்படிப் பேசுவதை அவள் கேட்டிருந்தால் நம்மைப்பற்றி என்ன நினைப்பாள்? நல்ல வேளை! இப்பொழுதுதான் தன் சினேகிதி வீட்டிற்குப் போய்வருவதாகச் சொல்லி வெளியே போனாள்” என்று வருத்தத்தோடு புகன்றாள் சாரதா.

“இந்த ரேஷன் காலத்தில் நமக்குவேண்டிய சாமான்கள் கிடைப்பதே எவ்வளவோ திண்டாட்டமாக இருக்கிறது. உன் தங்கை ஒருவளோடு நின்றால் தேவலையே! அவளுக்கு இந்த மதராஸில் எவ்வளவோ சினேகிதிகள் இருக்கிறார்கள்! அவர்களை எல்லாம் தினம் நான்கு பேர்களாய் நம் வீட்டிற்கு அழைத்து வந்து, ‘அக்கா, ஐந்து கப் டீயும் ஏதாவது டிபனும் செய்துகொடேன். இவர்கள் எல்லோரும் என் நேசிகள். தமாஷாக அரட்டை அடித்துக்கொண்டே சாப்பிடுவோம்’ என்று நாள் தவறாமல் சுனந்தா உனக்கு உத்தரவு இடுவதையும், நீ உடனே பல்லை இளித்துக் கொண்டு உன் தங்கைக்கும் அவள் சினேகிதிகளுக்கும் விழுந்து விழுந்து டீயும் டிபனும் கொண்டுபோய்க் கொடுத்து உபசாரம் செய்வதையும் நான் பார்க்கவில்லையா என்ன? இவ்வளவுதானா? இன்னும்கேள். உன் தங்கை இங்கு வந்தபிறகு எவ்வளவு சினிமா-படங்களுக்குப்போய் வந்திருக்கிறீர்கள்? பாட்டுக் கச்சேரிகள் எத்தனை? டௌனுக்கு எவ்வளவு நடை நடந்திருக்கிறோம்? ஸோப், ஸென்ட், பௌடர், ஸ்னோ என்று சொல்லி ஒன்றுக்குப் பத்தாய் விலைஏறி இருக்கும் இந்த நாகரிக சாமான்கள் எல்லாம் இதுவரை எவ்வளவு வாங்கியிருக்கிறாய்? நீ இதைப்பற்றி எல்லாம் எப்பொழுதாவது யோசித்தது உண்டா? இவைகளுக்கெல்லாம் எத்தனை பணம் செலவழிந்திருக்கும்? நான் என்ன நானூறும் ஐந்நூறும் சம்பாதிக்கிறேனா? நீ உன் அருமைத் தங்கைக்காக இப்படிக் கண்ணை மூடிக்கொண்டு பணத்தை வாரி இறைத்தால் அப்புறம் நாம் போகும் வழிதான் என்ன? எதற்கும் ஒரு நிதானம் வேண்டாமா? கணக்குப் புஸ்தகத்தை எடுத்துப் பார். உன் தங்கைக்காக, இன்று வரை, அனாமத்தாய் எழுபத்தைந்து ரூபாய் செலவழிக்கப்பட்டிருக்கிறது! எனக்கு வரும் சம்பளம் நூற்றிருபது! பார்க்கப்போனால் உருப்படியாக ஒரு சாமானும் வாங்கவில்லை! எல்லாம் கன்னாப்பின்னாச் செலவுகள்தான்! எந்தத் தெய்வத்திற்கு பிரீதி? நீயே சொல்! சுனந்தா இன்னும் சிறியவள். அவளுக்குத் தெரியாததற்கு நீயல்லவோ புத்தி புகட்டிச் சரியான வழி கற்பிக்கவேண்டும்? அதை விட்டுவிட்டு நீயே அவளுக்குமேல் பச்சைக் குழந்தையாக நடந்துகொள்ளுகிறாயே! எனக்கு இவையெல்லாம் சுத்தமாகப் பிடிக்கவில்லை. ஒன்று, அவளைக் கூடியசீக்கிரம் ஊருக்கு அனுப்பிவிடும் வழியைத் தேடு; அல்லது நீயாவது நிதானத்துடனும் விவேகத்துடனும் நடந்துகொண்டு உன் தங்கையையும் சீர்திருத்து. வயதுக்குத் தகுந்த அடக்க வொடுக்கமே காணோமே உன் தங்கையிடம்!” என்று பெரிய பிரசங்கம் செய்தான் விச்வநாதன்.

சாரதாவுக்கு இவ்வார்த்தைகளைக் கேட்டு அசாத்திய கோபமும் ரோஷமும் உண்டாகி விட்டன. விச்வநாதனை வெறித்துப் பார்த்தபடி தன் கைகளில் அடுக்கடுக்காய் அணிந்துகொண்டிருந்த தங்க வளைகளில் ஒன்றைக் கழற்றி, அலட்சியமாய் விச்வநாதனின் காலடியில் அதை வீசி எறிந்தாள். “இந்தாருங்கள், இதை விற்று ரூபாயைக் கொண்டுவாருங்கள். மூன்று பவுன் வளை அது. நீங்கள் சுனந்தாவுக்காக இது பரியந்தம் செலவழித்திருப்பதாகச் சொல்லும் எழுபத்தைந்து ரூபாயை எடுத்துக் கொண்டு பாக்கிப் பணத்தை என்னிடம் தாருங்கள். சுனந்தா ஊருக்குத் திரும்பிச் செல்லும் வரைக்கும் அப்பணத்தை வைத்துக் கொண்டு நான் சமாளித்துக்கொள்கிறேன்.

பணத்திற்கு உங்கள் கையை எதிர்பார்த்து நிற்கிறேன் என்று எண்ணவேண்டாம்'' என்று தூக்கி எறிந்தாற்போல் படபடப்பாய்ப் பேசி விட்டு உள்ளே சென்றாள்.

விச்வநாதன் ஒரு மாதிரி சிரித்துக்கொண்டே கீழே கிடந்த தங்க வளையை எடுத்துக் கொண்டு தன் அறைக்குச் சென்றான்.

சுனந்தா சாரதாவின் தங்கை. பதினாறு வயது யுவதி. மூக்கும் முழியுமாய்ப் பொன்னிற மேனியுடன் நல்ல அழகாய் இருப்பாள். இந்தக் காலத்து நாகரிகப்படி, கண்ணையும் கருத்தையும் ஒருங்கே கவரும் முறையில் அலங்காரம் செய்துகொண்டு, வசீகரமாய் நடந்துகொள்ளும் அப்பூங்கொடியாளை எந்தப் புருஷனும், ஏன் பெண்களும் கூடத்தான் ஒரு தடவைக்கு இரண்டு தடவையாக நிமிர்ந்து பார்க்காமல் இருக்கமாட்டார்கள். எஸ். எஸ். எல். ஸி. பரீக்ஷைக்கு எழுதிவிட்டு அக்காவின் அழைப்புக்கு இணங்கி விடுமுறைக்காக மதராஸுக்கு வந்து சாரதாவின் வீட்டில் தங்கி இருந்தாள். சுனந்தா எப்போதும் இருப்பது தஞ்சையில் தனது பெற்றோர்களுடன். அவள் தந்தை நான்கு வருஷங்களுக்குமுன்பு சென்னையில் டாக்டராக இருந்த காலத்தில் அவளுக்கு அங்கே நிறையச் சிநேகிதிகள் இருந்தனர். தந்தை சென்னையைவிட்டு மாற்றலாகிப் போனபொழுது சுனந்தாவும் தன் பள்ளிச் சிநேகிதிகளை எல்லாம் விட்டுப்பிரிந்து பெற்றோருடன் தஞ்சைக்குப்போகும்படி நேர்ந்தது. மறுபடியும் நான்கு வருஷங்களுக்குப் பிறகு, இப்பொழுதுதான் முதல் தடவையாகத் தன் பழைய சிநேகிதிகளை எல்லாம் சந்திக்கச் சமயம் வாய்த்தது அவளுக்கு.

சாரதாவுக்கு, அபூர்வமாய்த் தன் அருமைத் தங்கை தன்னிடம்வந்து இருப்பதினால் சந்தோஷம் நிலைகொள்ளவில்லை. சுனந்தாவை மகிழ்விக்கும்பொருட்டு தினம் ஸினிமா, பாட்டுக்கச்சேரி என்று போவதையும், வாரத்திற்குக் குறைந்த பக்ஷம் நான்கு தடவைகளாவது ''ஷாப்பிங்'' என்று டௌனுக்குக் கிளம்பி காசை வாரி இறைப்பதையும், சுனந்தாவின் தோழிகளுக்காக வீட்டில், நாள் தவறாமல் குட்டி டீபார்ட்டிகள் நடைபெறுவதையும் கண்டுதான் விச்வநாதனுக்கு மேற்சொல்லியபடி ரொம்ப கோபம் வந்துவிட்டது. ஒரு நாளா, இரண்டு நாளா? கிட்டத்தட்ட மூன்று வாரங்களாய், அதாவது சுனந்தாவின் விஜயத்திலிருந்து இதே அமர்க்களம் என்றால், எந்தப் புருஷன்தான் பொறுத்துக் கொண்டிருப்பான்? விச்வநாதன் இப்படிக் கோபம் கொள்வதற்கு இன்னொரு முக்கிய காரணம்கூட இருந்தது. தங்கை வந்த நாளிலிருந்து சாரதா தன் கணவனை அடியோடு மறந்தே போனவளாய், எப்போதும் சுனந்தாவையே சுற்றிக்கொண்டு, அவளுடனேயே, சிரித்துப் பேசிக்கொண்டு அவளை இன்ப மூட்டுவதிலேயே கண்ணும் கருத்துமாய் இருந்துவந்ததுதான் அந்தக் காரணம்! புதுப் பொம்மை ஒன்று வந்தவுடன் குழந்தை தன் கையில் வைத்திருந்த பழைய பொம்மையை அலட்சியமாய் மூலையில் கிடத்திவிட்டு அந்தப் புதுப் பொம்மையை ஆவலுடன் தூக்கிக் கொஞ்சிச் சீராட்டி விளையாடினால், புறக்கணிக்கப்பட்ட அந்தப் பழைய பொம்மைக்கு எப்படி இருக்கும்? அப்படித்தான் இருந்தது விச்வநாதனின் நிலைமையும் சுனந்தாவின் வருகைக்குப்பிறகு. (பொம்மைக்கு மனம், உணர்ச்சி எல்லாம் உண்டா என்று என்னைக் கேட்காதீர்கள்! அப்புறம் நானும் உங்களைத் திருப்பி கதைக்குக்கால் உண்டா என்று கேட்டுவிடுவேன்!!)

ஆனால் விச்வநாதன் சுபாவமாகவே ரொம்ப நிதான புருஷன். தன் மனைவியின் செய்கைக்காக அவன் அவளைக்கண்டபடி திட்டவுமில்லை. அவள்மேல் சீறிவிழவுமில்லை. எவ்வளவோ நல்ல தனமாகவே பேசி, சாரதாவின் தவற்றை அவளுக்கு வெளிப்படையாக எடுத்துக்கூறிப் புத்திசொன்னான். சாரதாவுக்கு அதுகூடப் பொறுக்கவில்லை, கோபம் பொத்துக்கொண்டு வந்தது. தன் கைவளையைக்கழற்றி கணவன் முன்னால் அகம்பாவத்துடன் வீசியெறிந்து தான் பிறந்தகத்துச் செல்வி என்பதையும் காட்டிக்கொண்டு துடுக்காகவும் பேசிவிட்டாள். சாந்தஸ்வரூபியான விச்வநாதன் மனைவியின் துடுக்கையும் இறுமாப்பையும் கண்டு உள்ளூற நகைத்துக்கொண்டே வாய்திறவாமல் அங்கிருந்து நகர்ந்தான்.

இரண்டு தினங்கள் கழிந்தன. வெளியே போயிருந்த சுனந்தா அன்று மாலை ஏழு மணி சுமாருக்குத் தன் சிநேகிதியின் காரில் வந்து இறங்கினாள். உள்ளே நுழையும்பொழுதே ''அக்கா, அக்கா! 'புனர்மிலான்' இதுதான் கடைசி ஆட்டமாம். ராத்திரிக்காக்ஷி ஆனாலும் பரவாயில்லை. கட்டாயம் போய்விட்டு வரவேண்டும். ரொம்ப ரொம்ப நன்றாக இருக்கிறதென்று என் சிநேகிதிகள் அவ்வளவு பேரும் ஒரேமுகமாய்ப் புகழ்கிறார்கள்.'' என்று கூவிக்கொண்டு வந்தாள். பிறகு ஊஞ்சலில் உட்கார்ந்து பேப்பர் வாசித்துக்கொடிருந்த விச்வநாதனைப்பார்த்து ''என்ன அத்திம்பேரே! புனர்மிலான் பார்க்க அழைத்துக்கொண்டு போகிறேளா!'' என்று கொஞ்சிக் கேட்டுக் கொண்டே ஒரு நடனமாதுபோல் லேசாய்க் குதித்தவண்ணம் விச்வநாதனை அணுகி ஊஞ்சல் சங்கிலியைப் பிடித்துக்கொண்டு நின்றாள்.

''ஆகட்டும் சுனந்தா, போகலாம், ஐ ஆம் கேம் (I am game)'' என்று தன் மைத்துனியைப்பார்த்து உத்சாகத்துடன் பதிலளித்தான் விச்வநாதன்.

சாரதா தன் செவிகளையே நம்பவில்லை. தன் கணவன் பரிகாஸமாகத்தான் அப்படிக் கூறுகிறான் என்று சந்தேகித்தாள். அவளுடைய

சந்தேகம் அதிக நேரம் நிலைத்திருக்கா வண்ணம் விச்வநாதன் மேலும் தொடர்ந்து "சாரதா, சீக்கிரம் சமையல் வேலையை முடித்துவிடு. சாப்பிட்டுவிட்டுக் கிளம்பத்தான் போது சரியாக இருக்கும்" என்று தன் மனைவியைப் பார்த்துக் கூறினான்.

பிறகு விச்வநாதன் பேப்பரை மடித்து வைத்துவிட்டு ஊஞ்சல் சங்கிலியைத் தழுவிக் கொண்டுநின்ற சுனந்தாவை ஏற இறங்க ஒரு முறை கூர்ந்து கவனித்துவிட்டு "அடே! இந்த லோலக் எப்பொழுது வாங்கிக்கொண்டாய் சுனந்தா? புதிதா? உன் முகத்திற்கு இந்த நீண்ட லோலக் ரொம்ப எடுப்பாகக் காணுகிறது. பொருத்தமாய் அலங்காரம் செய்து கொள்வதில் கைதேர்ந்தவளாக இருக்கிறாயே நீ? உன்னைக் கைப்பிடிக்கிறவன் பாடு நல்ல யோகம்தான். அவனைக்கண்டு இதரபுருஷர்கள் எல்லாம் பொறாமைகொள்ள நியாயம் இருக்கும்!" என்று தன்மைத்துனியைப் புகழ்ந்தான் விச்வநாதன்.

"போங்கோ, அத்திம்பேர்! என்னைப் பரிகாஸம்செய்கிறேளா? என்றைக்குமில்லாதபடி இன்று உங்களுக்கு இவ்வளவு குஷி ஏற்பட்டதின் காரணம் என்ன?" என்று தோள் பட்டையை ஒரு குலுக்குக் குலுக்கிக்கொண்டு வினவினாள் சுனந்தா.

தான் மனதில் நினைத்துக்கொண்டிருந்ததையே தன் தங்கை வெளிப்படையாகக் கேட்டுவிட்டதைப்பற்றிச் சாரதா திருப்தி அடைந்தாள். ஆனால் தன் கணவன் சுனந்தாவைப் புகழ்ந்தபொழுது அவளைப் பரிகாசம் செய்யும் நோக்கத்துடன் அப்படிச் செய்யவில்லை என்பதை சாரதா நன்கு தெரிந்து கொண்டாள். ஏனெனில் அந்தச் சமயத்தில் விச்வநாதன் சுனந்தாவை ஆவலும் ஆர்வமும் துள்ளப் பார்த்த பார்வையை அவள் கவனிக்கவில்லையா என்ன?

அன்று இரவு ஸினிமாவுக்குப் புறப்படும் பொழுது சுனந்தா என்ன புடவை உடுத்திக் கொள்ளலாம் என்று யோசித்தவண்ணம் தன் புடவைப் பெட்டியைக் கிளறிக்கொண்டிருந்தாள். அப்பொழுது அங்குவந்த விச்வநாதன் "சுனந்தா, இந்த மேகவர்ணப் புடவையையும் அந்த க்ரீம் கலர் பிளவுஸையும் எடுத்துக்கொள். ரொம்ப நன்றாக 'மாச்' ஆகும்" என்று அவளுக்கு உடுப்பைத் தேர்ந்து எடுத்துக்கொடுத்தான்.

தியேட்டருக்குப் போனதும் ஸோபா டிக்கட்டுகள் மூன்று வாங்கிக்கொண்டு ஒருபுறம் மனைவியையும் மற்றொருபுறம் மைத்துனியையும் உட்கார வைத்துக்கொண்டு தான் இருவருக்கும் நடுவில் அமர்ந்தான். சுனந்தாவுக்கு ஹிந்தி அவ்வளவாகப் புரியாது. ஆகையால் படம் ஓடிக்கொண்டிருக்கும்பொழுது விச்வநாதன் ஒன்றுவிடாமல் சம்பாஷணைகள் அனைத்தையும் அவளுக்குத் தமிழில் தர்ஜமா செய்து கொண்டே வந்தான். எப்பொழுதாவது தன் மனைவியின் பக்கம் திரும்பி இரண்டோர் வார்த்தைகள் பேசுவான், அவ்வளவுதான். அவனுடைய கவனமும் கண்களும் பூர்த்தியாய் சுனந்தாவின் ஸௌந்தர ரூபத்திலும் நாகரிக அலங்காரத்திலும் லயித்துக் கிடக்கும் பொழுது சாரதாவை அவனால் எப்படிச் சரிவரக் கவனிக்கமுடியும்?

சாரதாவுக்கு ஆத்திரமும் அவமானமும் பற்றிக்கொண்டு வந்தது. மனதைச் சொல்ல முடியா வேதனை அறுத்தது. நிலைகொள்ளாமல் தவித்தாள், சற்றேறக்குறைய முக்கால் மணி சாவகாசம் இந்தமாதிரி சஞ்சலப்பட்டுத் திண்டாடினாள். அதற்குமேல் அவளால் பொறுக்க முடியவில்லை. பாதி ஆட்டத்தில் எழுந்து நின்று "போதும் படம் பார்த்தது! எனக்குத் தலையை அசாத்தியமாக வலிக்கிறது. ஆத்திற்குப்போவோம்" என்றாள்,

"ஐயையோ! இதென்ன அக்கா? படம் வெகு சுவாரசியமாகவும் விறு விறுப்பாகவும் இருக்கும் சமயத்தில் எழுந்துவிட்டாயே? சற்றேபொறு. இன்னும் அரைமணி நேரம்தான். பிறகு படம் முடிந்துவிடும். உனக்குத் தலையை வலித்தால் அப்படியே ஸோபாவில் சாய்ந்தபடி கண்ணை மூடிக்கொள். நான் பாதி ஆட்டத்தில் வரமாட்டேன்" என்று கூறிச் சுனந்தா தனக்கு சுபாவமாக உள்ள பிடிவாதத்தை மேற்கொண்டாள்.

வேறு வழி இல்லாமல் சாரதா பல்லைக் கடித்துக்கொண்டு உட்கார்ந்துவிட்டாள். அவள் முகத்தில் அப்பொழுது தாண்டவமாடிய சிடுசிடுப்பையும் வெறுப்பையும் கடைக்கண்ணால் அறிந்துகொண்ட விச்வநாதன் மனதிற்குள்ளேயே சிரித்துத் திருப்தி அடைந்தான்.

படம் முடிந்து எல்லோரும் அகத்திற்குத் திரும்பிவந்தார்கள். இரவு வெகு நேரம் வரைக்கும் தூங்கப்போகாமல் அத்திம்பேரும் மைத்துனியும் மிகுந்த உற்சாகத்துடன் இந்தப் படத்தைப்பற்றி அலசி அலசி விமர்சனம் செய்தார்கள். சாரதா அவர்களுடைய சம்பாஷணையில் கலந்துகொள்ளவே இல்லை. அவள் கலந்து கொள்ளவில்லையேயென்று யாரும் கவலைப் பட்டதாகவும் தெரியவில்லை.

மறுதினம் ஞாயிற்றுக்கிழமை. விச்வநாதனுக்கு விடுமுறை நாள். அன்று பூராவும் அவன் சுனந்தாவையே சுற்றிச் சுற்றிவந்து தீட்டியிருந்த வர்ணப்படங்களையும், தையல் வேலைகளையும் ஒவ்வொன்றாய் எடுத்துப் பார்வையிட்டுச் சிலாகித்துக்கொண்டிருந்தான். மற்றும் விநோதமாக அவளுடன் பேசி விளையாடிப் பொழுதுபோக்கினான்.

சமையல் அறையில் வேலைசெய்துகொண்டிருந்த சாரதாவுக்கு வேலை ஓடினால்தானே? அவள் நினைவெல்லாம் கூடத்தில் கும்மாளம்

அடித்துக்கொண்டிருந்த தன் தங்கையின் மேலும் கணவன் மேலும் தாவிக்கொண்டிருந்தது. அவர்கள் இருவருடைய சிரிப்பும் பேச்சும் அவள் செவிகளில் நாராசம்போல் விழுந்தன.

"இவருக்கு ஏன் இப்படிப் புத்தி பேதலித்துவிட்டது? வயசுவந்த பெண்ணுடன் இந்த மாதிரியா வெட்கமில்லாமல் பேசி விளையாடுகிறது! இரண்டு நாட்களுக்கு முன்பு சுனந்தாவின் நடத்தையும் அவள் பதவிசு இல்லாமல் இருப்பதும் தனக்குக் கட்டோடு பிடிக்கவில்லையென்றும், அவளைக் கூடியசீக்கிரம் ஊருக்கு அனுப்பிவிடும்படியாகவும் என்னிடம் கூறினாரே! எல்லாம் வெறும் வேஷம் தானே! இவ்வளவு நாட்களாகக் குனிந்த தலைநிமிராமல் இருந்த இவருக்கு எங்கிருந்து இவ்வளவு துணிச்சல் வந்தது என்றுதான் எனக்குப்புரியவில்லை! சுனந்தாவுக்குத் தான் என்ன புத்தி கிடையாதா! கொட்டாப்பிளிபோல் பதினைந்து வயசு ஆச்சு! இப்படியா கூச்சமில்லாமல் பரபுருஷனோடு சிரித்து விளையாடுகிறது! இதெல்லாம் என்ன விபரீதத்திற்கு ஆஸ்பதமோதெரியவில்லை! அவளிடம் ஏதாவது புத்திசொல்லப் போனால் பெரிசாய் அழ ஆரம்பித்துவிடுவாள். அவரிடமே சொல்லுவோமென்றால், என்னத்தை எப்படிச் சொல்வது? நான் அவர் மேல் சந்தேகப்படுகிறேன் என்பதை அவர் உடனே தெரிந்துகொண்டுவிட்டால்? எனக்கு ஒரு வழியும்புலப்படவில்லை" என்று பலவாறு எண்ணமிட்டுத் தவியாய்த் தவித்தாள் சாரதா.

விச்வநாதன் பாட்டில் வெகுகுஷியாய்த் தன் மைத்துனியோடு அளவளாவிப் பேசிக்கொண்டும் விளையாடிக்கொண்டும் பொழுதுபோக்கி, தன் மனைவியின் கோபத்தையும் கவலையையும் நாளுக்கு நாள் அதிப்படுத்திக்கொண்டே வந்தான்.

இப்படியாகச் சிலநாட்கள் தேய்ந்தன. ஒரு நாள் வழக்கம்போல் ஆபீஸிலிருந்து மாலை வீடு திரும்பிய விச்வநாதன் வாசற்படி ஏறி வரும் பொழுதே" சுனந்தா, இன்று ஏழுமணிக்கு அடையார் தியேட்டரில் ருக்மிணி அருண்டேல் மற்றும் அவரது கோஷ்டியாரின் பரதநாட்டியக் கச்சேரி நடக்கப்போகிறது. சீக்கிரம் கிளம்பினால் தான் நாட்டியம் துவக்கும் முன்பு போய்ச் சேரலாம்", என்று கூவிக்கொண்டே உள்ளே நுழைந்தான்.

வீடு நிச்சப்தத்தில் ஆழ்ந்திருந்தது. ஆச்சர்யப்பட்டுகொண்டே தனது அறைக்குள் எட்டிப்பார்த்தான். அங்குச் சாரதாமாத்திரம் உட்கார்ந்துகொண்டு ஏதோ புத்தகத்தை படித்துக்கொண்டிருப்பதைக்கண்டு, சுனந்தா எங்கே சாரதா? வெளியே போயிருக்கிறாளா?" என்று பரபரப்புடன கேட்டான்.

சாரதா தீராத வெறுப்புடன் புருவத்தை நெரித்துப் பற்களைக் கடித்துக்கொண்டாள். "சுனந்தா! சுனந்தா! அறுபதுநாழியும் சுனந்தா ஜபம்தான்! இங்கே சுனந்தாவுமில்லை, ஹனுமந்தாவுமில்லை! அவளைப் பன்னிரண்டு மணி ரயிலில் ஊருக்கு அனுப்பிவிட்டேன்! தஞ்சாவூருக்கு அவளுடையசினேகிதி ஒருத்திபோகிறதாகவும் துணையிருப்பதால் தானும் அவளுடனேயே கிளம்ப நினைத்திருப்பதாகவும் திடீரென்று பதினோரு மணிக்குமேல் சொன்னாள். 'மகராஜியாய் நல்லவேளையில் போய்ச்சேரு' என்று அனுப்பிவிட்டேன்" என்று ஆத்திரம் த்வனிக்கும் குரலில் புகன்றாள் சாரதா.

விச்வநாதன் இடி இடியென்று சிரித்தான். சில வினாடிகளுக்குப் பிறகு சிரிப்பு ஓய்ந்ததும் "அப்படா! பிழைத்தேன் போ! நான் விரும்பியதும் அதுதான்! என்னுடைய யுக்தியும் நடிப்பும் இவ்வளவு சீக்கிரம் பலன் அளிக்குமென்று நான் எதிர்பார்க்கவே இல்லை! தங்கையைத் தான் ஊருக்குக் கிளப்பியாகிவிட்டதே! இனி மேலாவது என்னைச்சற்று கவனித்துக்கொள்ளலாமோல்லியோ?" என்று கேட்டுக்கொண்டு சாரதாவை அன்புடன் நெருங்கினான் விச்வநாதன்.

சாரதா விஷயம் விளங்காமல் திரு திருவென்று விழித்துத் திகைத்தாள். கண் இமைக்காமல் தன் நாயகனை உற்றுநோக்கியபடி "அதென்ன அப்படி அசட்டுத்தனமாக நடந்துகொண்டீர்கள்? கடந்த ஒரு வாரமாக என் மனம் பட்டபாட்டை பகவான் தான் அறிவார்" என்று கூறும்பொழுதே அவள் தொண்டை விசனத்தினால் தழுதழுத்தது; கண்களில் நீர் மல்கியது.

விச்வநாதன் சாரதாவை ஒருகையால் பரிவுடன் அணைத்துக்கொண்டு, மற்றொரு கையினால் அவள் கண்ணீரைத்துடைத்தான். "வருத்தப்படாதே சாரதா! நான் அசட்டுத்தனமாக நடந்து கொண்டிராவிட்டால் நீ உன் தங்கையை இப்போதைக்கு ஊருக்கு அனுப்பி இருப்பாயா, சொல்.? சுனந்தாவை இங்கிருந்து சீக்கிரம் விரட்டுவதற்காக நான் வேண்டுமென்றே சோடித்து நடித்த நாடகம் தான் எல்லாம். எனக்கு உன்மேல் ஆசையே போய் விட்டதென்றும் சுனந்தாவின்மேல் மோகம் கொண்டு விட்டதாகவும் நினைத்தாய் அல்லவா? உனக்கு அவ்வித ஸந்தேகம் ஏற்படட்டும் என்று எண்ணியே நான் சுனந்தாவுடன் வெகு சகஜமாய்ப் பழக ஆரம்பித்தேன். அன்று நான் சுனந்தாவை ஊருக்கு அனுப்பிவிடும்படி கூறிய பொழுது உனக்கு என்மேல் எவ்வளவு கோபம் வந்தது? இன்று அவள் இங்கிருந்து ஒழிந்தால் போதுமென்று எண்ணி நீயே அவளைத் துரத்தி விட்டாயே! உன் மேல் தப்பு இல்லை சாரதா. பொதுவாய் ஸ்திரீ சுபாவமே அப்படித்தான் என்று வைத்துக்கொள்." என்று விஷயத்தை விளக்கித் தன் மனைவியின் முகத்தை நிமிர்த்தி ஆசை முத்தங்கள் அளித்தான்.

இப்பொழுது வெட்கத்துடன் தலை குனிந்த சாரதாவின் இதயத்தில் ஏற்பட்ட நிம்மதி ஒரு பெரு மூச்சு மூலம் வெளிக்கிளம்பிற்று.

# பூவின் பேராவல்

வி. ஜி, ஸ்ரீநிவாஸன்

[இடம்: ஒரு பூஞ்சோலை. பல நிறங்கொண்ட நறு மணப் பூக்கள்பல பூத்துப் புன்னகை காண்பிக்கின்றன. மரஞ் செடி கொடிகளின் பசுமை வண்ணம் பன்னிற மலர்கட்குத் தக்க பின்னணியாக விளங்குகின்றது. மெல்லிய காற்றுப் பட்டும் படாதது போல் வீசுகிறது. காற்றுப் பட்டுத் தலைதூக்கி அலைகின்ற மலர்கள் ஜீவகளை ததும்பக் களிநடம் புரிகின்ற தன்மை "வா" "வா" என்று கூவி அழைப்பது போலத் தோன்றுகிறது. மந்த மாருதம் மலர் மணத்தை வாரி வீசுகிறது. மாலைக் கதிரவனின் மாணிக்கச் செழுஞ் சுடர்க் கதிர்கள் மரங்களின் உச்சியைத் தொட்டு விளையாடுகின்றன. மலர்களைச் சுற்றிச்சுற்றி வட்டமிடும் வண்டினங்களின் இனிய ஒலி, அகண்ட விசுவகீதமொன்றுக்குச் சுருதி கூட்டுவது போலத் தானிருக்கிறது.

**நேரம்:** மாலை; சற்று நேரத்தில் இருள் கவிந்து விடும்.

**பாத்திரங்கள்:** கவிஞன்: கனவு காண்பதில் அவனுக்கிணை அவன்தான்! அவனுடைய கற்பனைப்புள் சிறகடித்துச் செல்லாத இடமே கிடையாது. அவன் தனது கற்பனையைத் தனது தனி மாண்பு பெற்ற கவிக்குழல் கொண்டு இன் தமிழில் இசைப்பதிலும் வல்லவன். தனது அநுபவத்தை அழகு பெற, அணி பெற்ற செய்யுளாகச் சமைத்துக் கொடுப்பவன்.

*மலர்:* சின்னஞ் சிறியது. அப்பொழுது தான் அலர்ந்தது. தேன் துளிக்கும் வாசமென் மலர்!

**அவரவர் நிலை:** கவிஞன்: பூங்காவில் மேலுங் கீழுமாக உலாவிக்கொண்டிருக்கிறான். ஏதோ சிந்தனை...........? மெல்லிய காற்று, மலர் மணம், நிற வேறுபாடு, பூங்காவின் பசுமை, ஞாயிற்றின் செங்கதிர் முதலியன தக்க சூழ்நிலையாக அமைந்து கவிஞனின் கற்பனைக்குத் தூபம்போட்டு விசிறின. அவனது கற்பனைக் கண்ணிற்கு மலர்களெல்லாம் ஆடிப்பாடி அக மகிழ்வனபோலத் தென்பட்டன! "வண்ண வண்ணச் சேலை கட்டி மகிழ்ந்திருப்போமே" என்று பாடின சில மலர்கள்! "கம்பன் பாமணக்கும் தமிழினைப் போல் பரிமளிப்போமே" என்றியம்பின சில! ஆம்! கவி தன் தாய் மொழி மீது கொண்ட அடங்காக் காதலே இப்படி மலர் வழி எதிரொலித்திருக்க வேண்டும்! அவனும் மலர் மணத்தில் தன் தாய்மொழியின் மணத்தையே நுகர்ந்தான். இல்லாவிட்டால் அவன் மனது "மன்னிய பைந்தமிழ் மணங்கூர் மலரே" என்று இசைத்திருக்குமா?

*மலர்:* அதனுடைய உளத்தை ஏதோ ஒன்று வாட்டியது. தான் மகத்தான தியாகம் செய்யப் பேராவல் கொண்டது. யாரிடமாவது தனது மனத்தைத் திறந்து காட்டி வேண்டுகோள் விடுக்க விரும்பியது! அது என்ன தாபம்?]

கவிஞன், பின்னே பிணைந்த கரங்களுடன், யோசனையின் பாரத்தால் தலைகுனிந்தவாறே, அந்தப் பக்கம் வந்தான். அவனை விளித்து அந்தத் தாபங்கொண்ட

*சிறு மலர்:* பூங்கா வழியே போகும் புனிதா!

*கவி:* (சட்டெனத் திரும்பித் தலை நிமிர்ந்து) என்ன அது? யார் என்னைப் 'புனிதா' என்று கூப்பிட்டது? (சுற்றுமுற்றும் பார்க்கிறான்)

*மலர்:* நான்தான் சிறுமலர்! நவின்றது நானே! இதோ, இங்கேதானிருக்கிறேன்.

*கவி:* ஆகா! (மலரைத் தொட்டு) வாசமென் மலரே! மெத்த மகிழ்ச்சி; உன்னைக் கண்டதும், ஒரு குழந்தையின் மலர்ந்த பார்வையும், சிரித்த முகமும், குழிந்த கன்னங்களும் நினைவிற்கு வருகின்றன...........என்னை அழைத்த காரணம் அறிவிப்பாயோ?

*மலர்:* நீயோ உணர்வில் வல்லவன்! பிறர் மனத்தை ஊடுருவிப் பார்ப்பவன். கற்று, ஆய்ந்து, அறிந்தவன்! சொற்களைத் தட்டிப் பார்த்துச் சரியான இடத்தில் பொருள் கொடுக்கும் வண்ணம் இசைப்பவன். கள், தீ, புயல், வானவொளி முதலியவற்றைக் கூட்டிக் குழைத்து அழகான சொல்லோவியம், உயிரோவியம் வரைபவன். அதனால் தான்...........

*கவி:* மலரே! உன்னைப் போலவே உனது மொழியும் இனிமை பயக்கின்றது! "காலையரும்பிப் பகலெல்லாம் போதாகி மாலை மலர்"ந்திருக்கின்றாய்! ஆகா! ஒரு நாழி வாழ்ந்தாலும் எப்பேர்ப்பட்ட உத்தம வாழ்க்கை? தியாக வாழ்க்கை!...........உன் மலர்ச்சியால் மனத்திற்கு உவகை ஊட்டுகின்றாய்! உன் மணத்தால் காற்றுக்கு வாசனை ஏற்றுகின்றாய்! உனது தேனையோ, உனை விரும்பிப் பண்ணிசைத்து வரும் பாணருக்கு விருந்தாக அளித்து விடுகிறாய்! ஆகா, என்ன...........

மலர்: கவியே! சற்றுநில். என்னை என்ன பிரமாதமாகப் புகழ ஆரம்பித்து விட்டாயே?

கவி: நீ என்னை வானளாவப் புகழ்ந்தா யல்லவா? நான் உன்னைப் புகழ்வது இயல்பு தானே!

மலர்: நண்பா! என்னை மன்னித்துவிடு. உன்னிடம் என்றன் உள்ளத்தை எடுத்துக் காட்டி உண்மையைச் சொல்லி விடுகிறேன்.

கவி: காத்திருக்கிறேன் கேட்க! சொல்லேன்!

மலர்: எனக்கு மட்டுக் கடங்காப் பேராவல் உண்டு.

கவி: அது என்ன பேராவலோ? விவர மாகச் சொல்லேன்.

மலர்: என் வாழ்வோ சுருங்கியது. சிறிது நேரத்தில் வாடி வதங்கி மண்ணில் விழுந்து விடுவேன். இல்லை, ஒரு பேய்க் காற்று வீசினு லும் போச்சு! என் கதி அதோ கதி தான்! அதற்குள் பெரியவொரு தியாகம் செய்ய விரும்புகின்றேன். இது விஷயத்தில் நீதான் எனக்கு உதவி புரிய வேண்டும்.

கவி: மனப் பூர்வமாக உதவுகிறேன். சொல்.

மலர்: என்னைப் படைத்திருக்கிருளல்லவா, பூதநாயகி, அன்னை பராசக்தி! அவளுக்கு அருச்சிக்கப் பட்டு, அவளது இணையடி நீழலில் தங்கியிருக்க எனக்கு விருப்பமில்லை............

கவி: பின் வேறு ஏதாவது............

மலர்: காதல் பெண்டிர் தங்கள் காதலர் களுக்கென அபிமானம், அன்பு, ஆதரவு கனியத் தொடுக்கிருர்களல்லவா மாலை! அதிலே இடம் பெற மனமே யில்லை.

கவி: அப்படியானுல்............

மலர்: மங்கல மங்கையர் கூந்தல் மேவி மங்கலச் சின்னமாக அமர்ந்திருக்க மனம் இசைய வில்லை............

கவி: பிறகு உன் மனம் ஒப்புக்கொள்ளக் கூடிய இடந்தான் எதுவோ? தெரிந்துகொள்ள ஆவலாய் உள்ளேன், அறிவித்திடுவாய்.

மலர்: ஆம். ஓரிடம் உண்டு! என்னை மன மொப்பி அர்ப்பணம் செய்துகொள்ள முடியும்! ..............தனது "பெண்டு, பிள்ளை, வீடு, கன்று, மாடு, தனம் கனம், சுற்றம்" எல்லா வற்றையும் துறந்து, தன் வாழ்க்கையையே பணயம்வைத்து, தன் தாய்த் திருநாட்டின் நலங் கருதி உழைக்கிருனல்லவா தேசபக்தன்! அந் தப் புனிதப் பெரியோன் தன் பொன்னடி போ க்கும் பெருவழிதன்னிலே என்னைப் பறித்து இட்டுச் செல்வாய்? அதுவே என் பேரவா! அப்படிச்செய்யவே உன்னை வேண்டிக் கொள் கிறேன்.........உன்னையே நம்பினேன்! என் னைக் கைவிடேல்............

கவி: ......................(நெஞ்சிலே கையை வைத்து அழுத்திக்கொள்கிருன். வானத்தை நோக்கிப் பார்த்துப் பெருமூச்சு விடுகிருன், பதில் பேசமுடியவில்லை! உணர்ச்சி மிகுதியில் வார்த்தை உடைபட்டு விட்டது. கண் களில் நீர் பனிக்கிறது, கண்களைத் துடைத் துக்கொள்ளக்கூட இயலாமல் நின்று விடு கிருன்.

இதோ! இருள் கவிந்து விடும்!

---

"மாகன் லால் சதுர்வேதி" என்பவர் ஹிந்தி யில் யாத்த "புஷ்ப கீ அபிலாஷா" என்ற ஆறு வரிகள் கொண்ட சிறு கவிதையின் பாவத்தை அடிப்படையாகக்கொண்டு கற்பனை செய் யப் பட்டது.


ஆப்டோன் ப்ளாக்குக்களும்
அழகான கலர் ப்ளாக்குக்களும்
செய்யுமிடம்!

★



★

எம். ஸி.
அப்பாசாமி செட்டி & கோ.,
14, ஜோன்ஸ் தெரு, மண்ணடி,
மதராஸ்.

# காதம்பரீ சுயம்வரம்

**கே. சுந்தரம்மாள்**

"ஹலோ! குட் ஈவினிங் ஜானகி! நாங்கள் உன்னைப் பார்க்க வருவதாக இருந்தோம், நீயே வந்து விட்டாய்" என்று அவள் கையைப் பிடித்துத் தங்களுக்கு மத்தியில் உட்கார வைத்துக்கொண்டார்கள், பணகல் பார்க்கில், புல் தரையில் உட்கார்ந்திருந்த காதம்பரீ முதலிய இண்டர் வகுப்பு மாணவிகள்.

"உன் கல்யாண விஷயம் என்னவாயிற்று? வரன் உனக்கு பிடித்தவனா? இதைப்பற்றி விசாரிக்கவே உன் வீட்டிற்கு வரலாமென்று நினைத்தோம்" என்றாள் சுசீலா.

"வரன் எனக்குப் பிடித்தால் அவனுக்கு என்னைப் பிடிக்கவேண்டாமா? நான் கறுப்பு என்று சொல்லிவிட்டானும். மிகவும் மோசம் தான். எனக்குக் கணவனாக ஒருவன் பிறந்து தானிருப்பான்" என்றாள் ஜானகி.

"ஆமாம். ஆண்பிள்ளை கறுப்பாக இருந்தால், 'ஆனை கறுத்தால் ஆயிரம் பொன்' என்று சொல்லிவிடுகிறார்கள். நாம் தூஷித்தால் தறுதலை, அதிகப் பிரசங்கி என்ற பட்டம் கிடைக்கிறது. ஆண்பிள்ளை மாத்திரம் நம்மைத் தூஷிக்கச் சட்டம்போலும்" என்று ஆத்திரத்துடன் சொன்னாள் வாணீ.

"லவ் மாரேஜ்" என்றால் இந்தத்தொல்லைகள் இல்லை. அதனால்தான் மேல் நாட்டார் அவ்வழக்கத்தை அனுசரிக்கிறார்கள். நான் அப்படித்தான் செய்யப்போகிறேன். ஜானகி! உனக்கு லவ் ஒன்றும் ஏற்படவில்லையா? என்றாள் சுசீலா.

"உனக்குப் பக்கத்துவீட்டிலேயே லவ் ஏற்பட்டுவிட்டான். அந்தத் தைரியம் பேசுகிறாய். லவ்,கிவ் எல்லாம் ஒரு சிலருக்குத்தான் நன்மையாக இருக்கிறது. நமது அம்முகுட்டி லவ்மாரேஜ் செய்துகொண்டு மூன்று வருஷமாகிறது. விவாக ரத்தாகி ஒன்றரை வருஷமாகிறது. உத்யோகம் பார்த்துக்கொண்டு தனி வாழ்க்கை நடத்துகிறாள்" என்றாள் ஜானகி.

"சரி நீ சொல்லுவதையும் ஒத்துக்கொள்ள வேண்டியதுதான். இருந்தாலும் ஆண்களுக்குச் சமதையான சுதந்திரம் நமக்கும் வேண்டும். நம் இஷ்டப்படியே வரனைப் பொறுக்க வேண்டும். என்ன காதம்பரீ! உன்வாயில் கொழுக்கட்டையா? உன் அபிப்பிராயமென்ன? சொல் பார்ப்போம்" என்றாள் வாணீ. .

"என்னைப்பற்றினமட்டில், பிடிக்கவில்லை' என்ற சொல் என் வாயிலிருந்துதான் வர வேண்டுமே தவிர, வருகிறவன் அப்படிச் சொல்லமுடியாது. நான் லவ், என்ற விஷயத்திற்கு இடமளிக்கப் போவதில்லை. வருஷக் கணக்கில் சுயம்வரம்போல், வரனைத் தேர்ந்தெடுப்பேன்" என்றாள் கந்தம்பரீ.

"அந்த நாளைய ராஜாக்கள் செய்ததைப் போல் சுயம்வரம் ஏற்படுத்த ஓர் வழி. பரீக்ஷை எழுத ஏற்படுத்துவதுபோல், ஓர் ஹாலை ஏற்படுத்தி B. A. மாணவர்கள் ஒருநாள், B. S. C., B. A. B. L., ஆனர்ஸ், மெடிகல் காலேஜ், இஞ்சினீரிங்" என்று ஒவ்வொரு பார்ட்டாக அழைக்கவேண்டும். அவர்களது குணாதிசயங்களை அந்தந்த ஹாஸ்டலின் வார்டன் வந்து உனக்கு எடுத்துச் சொல்லவேண்டும். நீ உனக்கு இஷ்டமானவனைக் கைகுலுக்கித் தெரியப்படுத்தவேண்டும். மற்றவர்கள் இஞ்சிதின்ற குரங்கைப்போல் செல்லவேண்டும்" என்றாள் வாணீ. யாவரும் கொல்லென்று சிரித்தார்கள்.

"போடீ! உன்மூளை அபார வேலை செய்கிறது. நான் சொல்லுவதின் அர்த்தம் அதுவல்ல. நம்வீட்டில் ஜாதகம் வாங்கும் பொழுதே அவனுடைய குடும்ப விவரம், படிப்பு, சொத்து முதலியவைகளைப்பற்றி விசாரித்துவிடுவார்கள். கூடப்படிக்கும் மாணவர்களையோ, அதிக சிநேகிதம் உள்ளவர்களையோ விசாரித்தால் குணம் தெரிந்துவிடும். பிறகு நேரில் பார்த்துப் பொறுக்கவேண்டியதே" என்றாள் காதம்பரீ.

"குணம், அழகு எல்லாம் நீ நினைத்தபடி கிடைத்துவிடுமா?" என்றாள் வாணீ.

"பொறுத்தார் பூமியாள்வார். இப்படிப் பார்த்துக்கொண்டே போனால் நிச்சயம் வெற்றிபெறலாம்" என்றாள் காதம்பரீ.

"உன் மனோராஜ்யம் எந்தவிதத்தில் முடியப் போகிறதோ? கிழவியாகும்வரை தேடுவதாக ஏற்படாதிருக்கவேண்டும்" என்றாள் வாணீ.

"அதிருக்கட்டும், உன் மாமா பிள்ளைக்குத் தான் உன்னைக் கொடுக்கப்போவதாக உன் அம்மா சொன்னாள்" என்றாள் ஜானகி.

"ஆரடீ! போன கிறிஸ்துமஸ்ஸின்பொழுது வந்திருந்தானே ஒரு கதர் ஆசாமி, கண்ணாடி போட்டுக்கொண்டு, அவன்தானே" என்றாள் வாணீ.

"ஆமாம், அதே ஆசாமிதான். இவர்கள் சொல்லிக்கொண்டிருக்க வேண்டியதுதான், நான் ஒன்றும் அவனைக் கல்யாணம் செய்துகொள்ளப்போவதில்லை" என்றாள் காதம்பரீ.

"ஏன்? நிறம் கொஞ்சம் மட்டேதவிர, மற்றப்படி ஆள் அழகான தோற்றமாக இருக்கிருனே, உனக்கு ஆக்ஷேபகரம் என்ன? என்ருள் வாணி.

"அவனுக்குத் தகப்பன் இல்லே. அம்மாவின் ஒரே செல்லப்பிள்ளை. பி. எஸ். ஸி. படித்துவிட்டு உத்தியோகம் பார்க்காமல், கிராமத் தொண்டு மண்ணுங்கட்டி 'ராட்டினத்தைச் சுற்றிக்கொண்டு கிராமத்தில் உட்கார்ந்திருக்கிருன். நிறைய ஆஸ்தியிருக்கிறது. கவலேயில்லே. கதர்தான் கட்டுவான். எதிராளியையும் கட்டவேண்டுமென்பான். உனக்கு எப்படிப் பொழுது போகிறதென்றுகேட்டால், 'ரேடியோ இருக்கிறது. ராட்டினமிருக்கிறது. வாசகசாலே, கிளப் எல்லாம் ஏற்படுத்தியிருக்கிறேன். இன்னும் இரண்டு நாழி பொழுது இருந்தால்கூட தேவலே' என்பான். இவனேப் பார்த்துவிட்டு நாலேந்து பென்ஷன்தார்கள் கூட கிராமத்திற்கே வந்திருக்கிருர்கள். இப்பொழுது அந்தக்கிராமம் மிகவும்நாகரிகமாகத் தோற்றமளிக்கிறது. காங்கிரஸ்தேசம், என்று உயிரைவிடுவான். என் பாலிஸி தனி வழி. அவனுடன் என் வாழ்க்கை எப்படிச் சுகப்படும்? அந்தக் காங்கிரஸ் வாலாவை யார் கட்டியழுவார்கள்" என்ருள் காதம்பரி.

"இவ்வளவுதானே. இவை நல்ல விஷயங்களே. படித்தால் உத்யோகம் பார்க்கவேண்டுமென்பது சட்டமா? வயிற்றுக்கொடுமைக்காக, உத்யோகம் பார்த்துத்தான் ஆகவேண்டும் என்பவர்கள்தான் இந்த விஷயங்களேக் கவனிக்கமுடியாது. இப்படி எல்லாவித ஸௌகரியங்களும் இருப்பவர்கள்தான் தேசத்திற்காகப் பாடுபடுவது சரியான விஷயம். இருவரும் படித்திருந்தால், மிக ஒற்றுமையாக வாழ்க்கைச் சக்கரத்தைச் சுழலவிடலாம். பணமிருந்தால் பட்டணவாஸ ஸௌகரியத்தைப் பட்டிக்காட்டிலும் உண்டாக்கிக்கொள்ளலாமே." என்ருள் வாணி.

"சரியான ஜோடி. இந்த கிறிஸ்துமஸ்ஸிற்கும் இவ்விடம் வருவான். அவன் உன்னேக் கல்யாணம் செய்துகொள்ள ஏற்பாடு செய்கிறேன்" என்ருள் காதம்பரி.

"என் கல்யாணத்திற்கு என் பெற்ருேர்கள் இருக்கிருர்கள். நீ ஏற்பாடு செய்யவேண்டிய அவசியம் நேரிடாது. உன் விஷயத்தைக் கவனித்துக்கொள். நான் பொது நோக்காகச் சொன்னேன்.

"ஏன் வீண் தர்க்கம். எல்லாம் விதிப்படி முடியும்" என்ருள் ஜானகி. கடகடவெனச் சிரித்துவிட்டு, "விதி, இந்த நாற்பத்துநாலாம் ஆண்டில் கூட விதி என்று சொல்லுகிருயே? என்ன மூடநம்பிக்கை" என்ருள் காதம்பரி. எந்தனே நூற்ருண்டுகள் ஆனாலும் விதி என்பது மாறவேமாருது இந்த உண்மை உனக்கு ஒருநாள் புலனுகாமல் போகாது", என்ருள் ஜானகி.

"கைக்கடிகாரத்தைப் பார்த்துக்கொண்டே மணி ஏழரையாகிவிட்டது. மில்டரி நடமாடும் இந்நாளில் நாம் இருட்டினபின் வெளியே வதிவது தப்பு. வீட்டில் வசைப்புராணம் காத்திருக்கும், கிளம்புங்கள்.

ஃ ஃ ஃ ஃ

"ஏண்டா ராமு நேற்றுப் பெண்ணேப்பார்க்க வந்தவர்கள் என்ன சொன்ருர்கள்? உன் பெண் சம்மதித்தாளா? என்று பிள்ளையைப் பார்த்துக் கேட்டாள் தாயார்.

"அவர்களுக்கு ஸர்வஸம்மதம். மணமும் நாம் நினைத்திருக்கும் தொகைக்குள் முடிந்துவிடலாம். உன் பேத்திக்குப் பிடிக்கவில்லேயாம்."

"பிள்ளைக்கென்ன! மாநிறமாக இருக்கிருன். மற்றப்படி ராஜாவாட்டமா இருக்கான், உத்யோகம் பண்ணருன். நன்ருயிருக்கு அப்பா! இப்படிக் கழித்துக்கொண்டே வந்தால், இப்பவே வயது பதினெட்டு ஆகிறது. இன்னும்போனுல், முகம்முத்தி உடம்பும் சளித்தால், எவன் கட்டுவான்? ஏதோ நாலுக்கு இரண்டு பழுதில்லாமல் பார்ப்பார்கள், ஆனே மேல் வருகிறவன் அந்துகாலன், குதிரைமேல் வருகிறவன் சொந்துகாலன் என்ருல் கவிழ்ந்துவிடும். இப்படிக் கழித்துக்கட்டி இஷ்டப்படி நடக்க, உன்னிடம் பணமாவது நிறைய இருக்கிறதா? இவள் ஒரு பெண்தானு? குடிக்கக்கஞ்சியும், குந்த நிழலும் சொல்பம் இருக்கிறது, வருகிற சம்பளம் மேல் செலவிற்கும். துணிமணி வாங்கவுமே காணவில்லே. இவள் தான் சீமந்தகுமாரி. இருக்கிறதை விற்ருே, கடன் வாங்கியோ செய்தால் உன்னுல் சமாளிக்கமுடியுமா? மற்றக்குழந்தைகள் என்ன செய்வது? என்னமோ அப்பா, ஒன்றும் நன்ருய் இல்லே," என்ருள் தாயார்,

"என்னம்மா செய்வது? காலம் அப்படியிருக்கிறது, சாமிபிள்ளைகாதம்பரியைத்தான் கல்யாணம் செய்துகொள்ளுவேன் என்று வருகிற பெண்களேயெல்லாம் தட்டி வருகிருனும். அந்த இடமானுல் நமக்குச் செலவே கிடையாது. நாலும் பொருந்தியிருக்கிறது. பெண் இட்டதே சட்டமாக நடக்கலாம். கல்யாணி பரம சாது. இவன்சொற்படிதாள் அவன் நடப்பாள். என்ன செய்வது? அவனேக் காங்கிரஸ்வாலா, எனக்கு வேண்டாம் என்கிருள். உடன் பிறந்தான் பிள்ளை யொன்றுகூட எண்ணுமல் பெண் பக்கம்தாங்கிப் பேசுகிருள் உன் நாட்டுப் பெண்.

"தத்தளித்த குடும்பத்தை நிலேநிறுத்தினுய்?" என்ற விசுவாசம் கல்யாணிக்கு. பதினுயிரம் எதிர் ஜாமீனேடு வருகிற பெண்களே யெல்லாம் காதம்பரிக்குக் கல்யாணம் ஆனபிறகுதான் பதில் சொல்லுவேன் என்கிருளாம். நான்

சொல்லுகிறேனென்று வருத்தப்படாதே. பெண்கள் இஷ்டப்படி விடுவதாலும், இந்த அதிகப்படிப்பினுலுமே கல்யாணத்தில் இவ்வளவு கஷ்டம் ஏற்படுகிறது. அந்த நாள்களில் எவ்வளவு சுலபமாய்க் கல்யாணம் நடந்தது?'' என்ருள்.

''அம்மாவும் பிள்ளையுமாக என்ன புராணம் படிக்கிறீர்கள்? இந்தாருங்கோ அம்மா! இந்த விஷயத்திற்கெல்லாம் நீங்கள் வரக்கூடாது. உங்கநாள் வேறே. ஏதோ உங்கள் விஷயத்தில் நான் ஒருவிதக் குறைவும் செய்யாமல் பார்த்துக்கொள்ளுங்கள், அவ்வளவுதான். என் பெண் அழகிற்கு எவனுவது அவளுக்கு இஷ்டமானவன் வந்து கொத்திக்கொண்டு போய்விடுவான். அது விஷயமாக எவ்வளவு பணம் செலவாளுலும் பரவாயில்லை? இந்தப்பெண்ணை லக்ஷாதிகாரிக்குக் கொடுப்பேன். மற்றவளைப் பிக்ஷாதிகாரிக்குக் கொடுப்பேன், என் இஷ்டம். நீங்கள் கேட்பது அனுவசியம்'' என்ருள் நாட்டுப்பெண் ராஜம்.

''ஆகட்டுண்டியம்மா, உன் உத்தரவு. இப்படிப் பெண்ணிற்கு முன்னுல் அழகு அழகு என்று புகழ்ந்துகொண்டிருந்தால், அவள் உச்சி குளிராமல், வந்தவனையெல்லாம் தூறு சொல்லாமல் என்ன செய்வாள்? சரி சரி, அவன் கையில் ஒட்டைக்கொடுக்கவே இந்த ஏற்பாடு. முண்டம்போல் உட்கார்ந்திருக்க முடியுமா? ஏதோ சொன்னேன், உன்பாடு. என் கண்மூடுமட்டும் அவன் கஷ்டப்படாமல் இருந்தால் போரும்'' என்ருன்.

''பணம், பணம்'' என்று பெண்ணைப் பாழுங்கிணற்றில் தள்ளுவதா? சீனு என் உடன்பிறந்தான் பிள்ளைதான். நல்ல இடம்தான். என்ன செய்யலாம்? வாழுறபெண் இஷ்டமில்லையென்ருல் அது என்ன கல்யாணம்? சின்ன குழந்தையா அதட்டி மெரட்ட. நல்லவேளை இந்தச் சமயம் அவள் பள்ளிக்கூடம்போயிருக்காள். இனிமேல் காதம்பரி காதில் விழும்படி இந்தப் பேச்சுக்களெல்லாம் கூடாது. நீங்கள் இந்த விஷயங்களில் தலையிடாமல், பிள்ளையின் மனதைப் பேதலிக்கசெய்யாமலிருந்தால் அதுவே உபகாரம்'' என்ருள்.

''அம்மா! ஏன் வீண் வார்த்தைகளை வாங்கிக் கொள்ளுகிருய்? எல்லாம் விதிப்படி முடியும்'' என்ருன் ராமு.

''ஐயோடி, உங்கள் அம்மாவை என்ன சொல்லிவிட்டார்களாம்'' என்று கன்னத்தைத் தோளில் இடித்துக்கொண்டு உள்ளே சென்ருள் ராஜம்மா.

ஃ ஃ ஃ

சாயங்காலம் பங்களாவின் பின்புறமுள்ள தோட்டத்தில் தழைந்து குடைபோலிருக்கும் மாமரத்தினடியில், ஒரு கல்லாசனத்தின்மீது உட்கார்ந்து ஒரு புஸ்தகத்தைப் படித்துக் கொண்டிருந்தான் சீனிவாசன்.

''அம்மாஞ்சி! ஏகாந்த வாசமோ?'' என்று கேட்டுக்கொண்டே வந்தாள் காதம்பரி.

''ஏகாந்தமென்ன? இலேசாகத் தலைவலி. உடம்பு ஒரு மாதிரியாக இருந்தது. வெளியில் செல்ல மனமில்லை. இந்த இடம் மனோரம்யமாகத் தோன்றினதால் வந்தேன். உனக்குப் பல அலுவல்கள் இருக்கும். தொந்தரவு செய்யக்கூடாது என்றிருந்தேன். நீயே வந்துவிட்டாய் என் பாக்யமே. என்னைத் தேடிவந்தது என்ன விஷயம்?. என்ருன்.

''விஷயமா? சொல்லுகிறேன்'' என்று இரு கைகளாலும், மாமரத்தின் கிளைகளைப்பற்றி நின்றுகொண்டு, ''நீங்கள் ஏன் தனிவாசம் செய்யவேண்டும்? ஒரு துணைவியை ஏற்றுக் கொள்ளலாமல்லவா?''

''அதே கேள்வியை நான் உன்னைக் கேட்பதாக இருந்தால்?''

''நான்தான் சுயம்வரம் வைத்திருக்கிறேன். ஒவ்வொருவராக வந்துகொண்டிருக்கிருர்கள். நிர்ணயிக்க இன்னும் சந்தர்ப்பம் ஏற்படவில்லை''

''நானும் அப்படி என்று வைத்துக்கொள்.''

''அது விஷயம்தான் சொல்லவந்தேன். என்னோடு படிக்கும் என் சிநேகிதி ஒருவளிருக்கிருள். சற்று மாநிறம். லக்ஷணமாக இருப்பாள். கதர்தான் உடுத்துவாள். காங்கிரஸ் தேசபக்தி கிராமத் தொண்டு—இந்தப் பைத்யமுண்டு. இவை உங்களுக்கு மிக்கஉதவியளிக்கும். நான் சொல்லியனுப்பினுல் வருவாள், நேரில் பார்த்துப் பேசலாம்''

''ஓஹோ! தமிழ்க் காவியங்களில் வருவது போல் தலைவிக்காக நீ தூதுவந்தாய் போலும்! சந்தோஷம். ஒரு சிறு கேள்வி. உனக்கு ஒருவன் பிடித்தவனுயிருக்கலாம். அவனுக்கு உன்னைப் பிடிக்கவில்லை என்ருல் அதைப்பற்றிப் பேசிப் பயனுண்டா?''

''என் விஷயம் வேறு. என்னைப்பிடிக்கவில்லை என்று இது வரை ஒருவரும் சொல்ல வில்லை. இனியும் சொல்லமாட்டார்கள் என்பது நிச்சயம். அவளைப்பாராமலே, எப்படித் தீர்ப்புச் சொல்லலாம்?'' என்ருள்.

''நான் அவளைப் பார்த்திருக்கிறேன். அழகில்லை'' என்று சொல்லவில்லை. என் மனம் வேருேர் இடத்தில் பறி போய்விட்டது. அதை மீட்டு ஒருவருக்குக் கொடுக்க முடியாது. கொடுத்தாலும் பிரயோஜனப்படாது.''

''அப்பாக்யசாலினி யார்?'' என்ருள் கிண்டலாக.

மஞ்சள் வெயில் கன்னத்தில்பட, சிவந்து குழிந்த கன்னமும் புன் சிரிப்புடன் அவள்

இளையைப்பற்றி நிற்கும் தோற்றமும், அவன் மனதைக் குதூகலமடையச் செய்தன. இவள் தான் என்று அணைத்துக்கொண்டு விடலாமா என்ற எண்ணம் தோன்றியது. மறுநிமிஷம் என்னவாயினும், அவள் மனதைத் தெரிந்து கொண்டே இந்த எண்ணம் கொள்வது மூடச் செய்கை. நமது மனம் அவளிடம் அடிமை கொண்டது விதியின் செயலானால், அவ்விதியே கூட்டி வைக்கும். மனதை அடக்கவேண்டும்'' என்று நினைத்தவண்ணம் அவளையே வெறிக்கப் பார்த்தான்.

''ஏன் மௌனம்? சொல்ல இஷ்டமில்லை போலும்?'' என்றாள்.

''உனது பாக்யவான் யார் என்று தெரியும் பொழுது, எனது பாக்யசாலினியார் என்பது தெரியும்'' என்றான் நீண்ட மூச்சுடன்.

''நான் ஒருவிஷயம் உங்களைக்கேட்கலாமா?',

''தாராளமாகக் கேள். நான் பெண்களின் சம உரிமையையே விரும்புகிறவன். மனதில் பயமில்லாமல் பேசலாம்''

''உங்கள் மனதில் என்னை வரித்திருக்கலாம் என்று நினைக்கிறேன்''

''உம், அப்படியிருந்தால் ?''

''அவ்வெண்ணத்தை அடியுடன் மறந்துவிட வேண்டும். உங்கள் கொள்கைக்கும், என் கொள்கைக்கும் பொருந்தாது. வீண் ஆசையால் வாழ்நாளை வீண்நாள் ஆக்க வேண்டாம்''

''சரி விட்டு விட்டேன், என் விஷயம் இருக்கட்டும். உன் கற்பனைப் புருஷன் எப்படி? அதைச் சொன்னால் நானும் தேடுவேன். அத்தைக்கு உதவி செய்வது என் கடமை. சொத்திருந்தும் பலனில்லாமல் தவித்த எங்கள் குடும்பத்தை உன் தந்தை நிலைநிறுத்தினர். நீ இஷ்டப்பட்டால், உன் பெற்றோர்க்கு ஒரு தம்பிடி செலவின்றிக் கல்யாணம் செய்து கொள்ள நினைத்தேன். என் அம்மாவின் எண்ணமும் அதுவே. காதல் தெய்விகம். அதை விலை கொடுத்து வாங்க முடியாது. உன் சந்தோஷமே எனக்கு லக்ஷ்யம். உன் விஷயத்திற்குப் பணம் தடைசெய்யாமல் நான் பார்த்துக் கொள்கிறேன்'' என்றான்.

''என் கற்பனைப் புருஷன், அழகில் எனக்குச் சமதையாக இருக்கவேண்டும். கருமி குணம் கூடாது. எனக்குச் சமஉரிமை அளிக்கவேண்டும். என் விஷயத்தில் தலையிடக்கூடாது. அவர் விஷயத்திலும் நான் தலையிடமாட்டேன். நான் உத்யோகம் பார்ப்பேன் என்றாலும் தடுக்கக்கூடாது. இந்தக் காந்தி, காங்கிரஸ்-இந்தப் பேச்சே என் காதில் விழக்கூடாது. இப்படிக் கிடைக்காவிட்டால் கல்யாணமே வேண்டாம்'' என்றாள், கம்பீரமாக.

''இவ்வளவுதானே. ஆனால் ஒரு விஷயம். இவ்வளவையும் அறியவேண்டுமானால் அவனுடன் ஒருமாதமாகிலும் பழகவேண்டும். அது விஷயத்திற்குக் காலேஜ் மாணவர்களைத்தான் எதிர்பார்க்கலாம். பீச்சில், இந்தச் சோதனையை நடத்திப் பார்க்கலாம்'' என்றான் கிண்டலாக.

''அவ்விதம், 'லவ்' என்ற விஷயத்திற்கு என் மனம் இடம்தரவில்லை. அப்பா பார்க்கும் வரன்களிலேயே பொறுக்கிவிடுவேன். பார்த்துக்கொண்டே இருங்கள். வெற்றியே பெறுவேன்'' என்றாள்.

''சரி, உன் இஷ்டம் நிறைவேற விதி வசதி அளிக்கட்டும்'' என்று எழுந்து நடக்கவாரம்பித்தான். அவளும் பின் தொடர்ந்தாள்.

ஃ ஃ ஃ

காதம்பரி பி. ஏ. யும் தேறிவிட்டாள். ஆனால் அவள் சுயம்வரம் முடிந்தபாடில்லை. அவள் தகப்பனார் ஸ்வல்ப சம்பளமுள்ளவரானபடியினாலும், அவள் எதிலும் முதலாவதாகத் தேறி வந்தபடியினாலும், உபகாரச் சம்பளத்துடன் படிக்க வசதி கிடைத்தது. கல்யாணம் ஆகவில்லையே என்ற கவலை பெற்றோரை வாட்டிற்று. 'சிலபேர் கவலை உருக்கும். சிலபேர் கவலை உப்பும்' என்பதுபோல் காதம்பரியின் கவலை, கொடிபோலிருந்த அவள் தேகம், பலூன் மாதிரி பருக்கச் செய்தது. இந்த நிலைமையில், ஒருநாள் சாயங்காலம் வாணியைப் பார்க்க மயிலாப்பூருக்குச் சென்றிருந்த காதம்பரி குதித்து ஓடிவந்து தகப்பனரிடம்,

''அப்பா! என் சுயம்வரம் முடிய நாள் வந்துவிட்டது. முனிசிப் வீட்டில் அவர் மருமான் வந்திருக்கிறான். நல்ல அழகு. பூனாவில் நூற்று ஐம்பது ரூபா சம்பளத்தில் வேலைபார்க்கிறானாம். நான் நினைத்த குணமெல்லாமிருக்கிறது என்று வாணி சொன்னாள். நீங்கள்போய் ஏற்பாடு செய்யுங்கள்'' என்றாள்.

ஜாதகப்படலம் முடிந்து பெண்பார்க்கும் படலத்தில், அவனிடமிருந்துவந்த தகவல், ''பெண் அழகாகத்தான் இருக்கிறாள். நன்றாகப் பாடுகிறாள். ஆனால் முகத்தில் இளமைக் களையில்லை. குறுக்கே படர்ந்திருக்கிறாள். வேண்டாம்'' என்பதே.

அவளைப்பற்றித் தூஷணை சொன்னது இதுவே முதல் தடவை. இந்த விஷயம் அவள் மனதை மிகவாட்டியது. ''நாம் கழித்தது போக, நம்மை ஒருவன் கழிக்கலாயிற்றே'' என்று ஏங்கினாள். இன்னொரு வரன், வயது இருபதிற்குமேல் ஆகிவிட்டது. இரண்டு வயது வித்யாசத்தில் கல்யாணம் வேண்டாம் என்று சொல்லிவிட்டான். இதனால் இருபத்தாறு முப்பது என்று பார்த்தால், காதம்பரிக்குப் பிடிக்கவில்லை.

தனது பருமன் தான் தடைசெய்கிறது என்ற நினைப்பினால், பிடிவாதமாகச் சாப்பாட்டைக் குறைத்தாள். அதன் பலன் வயிற்று வலியும் ஜ்வரமும் வந்தன. ஊரில் டைபாயிடு பரவின காலமானதால் இவளையும் அது பற்றிக்கொண்டது. படுத்த படுக்கையானாள். மூன்று மாதம் எழுந்திருக்கவில்லை. அந்தச் சமயம் அவளைப் பார்க்க, சீனிவாசனும் கல்யாணியும் வந்தார்கள். சீனிவாசனே எப்பொழுதும் அவள் பக்கத்தில் உட்கார்ந்து வேண்டியதைச் செய்வான். புஸ்தகம், பத்திரிகை படித்துக் காண்பிப்பான். சமயங்களில் படுக்கைமுதல் தட்டிப் போடுவான். அந்தச் சமயங்களில், "ஆஹா என்ன அன்பு! இவரைத்தான் கல்யாணம் செய்துகொண்டால் என்ன? என்று நினைப்பாள். மறுகணம், அவரிடம் சொன்ன உறுதி? நமது கொள்கையை விட்டுக்கொடுப்பதா?" என்ற எண்ணம் வந்துவிடும்.

தலைக்கு ஜலம்விட்டாய்விட்டது. ஆனால் உடம்பு எலும்புக்கூடு. தலையோ கிராப்வைத்த மாதிரி ஆய்விட்டது. அதிலும் வெள்ளை மண்டை தெரிந்து விகாரப்படுத்திற்று. ஒருநாள் கண்ணாடியில் தன்னைப் பார்த்துக்கொண்டாள் "ஐயோ! காதம்பரியா நீ! சுருண்டு வளைந்த கேசம்? கண்ணாடி போன்ற கன்னம்? யாவும் எங்கே? என் அழகும்" என்று பெருமூச்செறிந்தாள். "என் மமதையே இக்கதிக்குக் காரணம். என்னுடன் படித்தவர்கள் ஒரு குழந்தைக்குத் தாயாகிவிட்டார்கள். என்னை இனி யார் சீந்துவார்?" என்ற எண்ணம் தோன்றத் துக்கம் சகிக்கமுடியவில்லை, பிறகு, "டானிக் சாப்பிட்டால், தானே பழைய அழகு வந்துவிடுகிறது" என்று சமாதானம் செய்துகொண்டாள்.

உடம்பு பலப்பட நல்ல காற்றோட்டம் கிராம வாசம் தேவை. டாக்டர் குடும்ப விஷயம் தெரிந்தவரானபடியினால் சீனிவாசனது கிராமத்திற்கே போகும்படி சொன்னார். ராஜம்மாவையும் கூட வந்திருக்கும்படி தாயும் மகனும் சொன்னார்கள். தள்ளாத கிழவியையும், சம்சாரத்தையும் விட்டுத் தன்னால் வர முடியாது என்றும் உங்களைவிட நான் என்ன சாதிக்கப் போகிறேனென்றும் சொல்லிவிட்டாள்.

புறப்படும்பொழுது இருவரும் தம்பதிகளாக வரவேண்டுமென்று ஆசீர்வாதம் செய்தாள் பாட்டி. முகத்தைச் சுளித்தாள் காதம்பரீ.

கிராமத்தில் காதம்பரீக்கு ராஜோபசாரம் நடந்துவந்தது. நரகவாசம் என்று நினைத்த கிராமவாசம் ஸ்வர்க்கபோகமாத் தோன்றலாயிற்று காதம்பரிக்கு. அவளது ஸௌகர்யத்தில் கண்ணும் கருத்துமாக இருந்தான் சீனிவாசன். காலை எழுந்ததும் உலாவ அழைத்துச் செல்வான். காப்பி சாப்பிட்டானதும் இருவரும் பத்திரிகை படிப்பார்கள். ரேடியோ கேட்பார்கள். பிறகு குளித்துச் சாப்பிட்டதும் காதம்பரி சற்றுநேரம் தூங்குவாள். அந்தச் சமயம் சீனிவாசன் தனது சொந்த அலுவல்களைக் கவனிப்பான். ஒரு மணிக்கு எழுந்திருந்து, தையல் வேலைசெய்துகொண்டே ரேடியோ கேட்பாள் காதம்பரி. ராட்டினம் சுற்றிக்கொண்டே ரேடியோ கேட்பான் சீனிவாசன். மத்யானம் டிபன் காபி சாப்பிட்டதும், காதம்பரி நன்றாக உடுத்திக்கொள்ளுவாள். கிராப் தலையைச் சவரிவைத்து, பிச்சோதலையாகச் செய்துவிடுவாள் கல்யாணி. கோடைவிடுமுறையானபடியினால், சில மாணவர்கள் அவ்வூரில் பெற்றோரிடம் வந்திருந்தார்கள். முன் ஹாலை டிராயிங் ரூமாக அமைத்திருந்ததனால், மூன்று மணிக்குமேல் மாணவர்கள் அவ்விடம் வருவார்கள். ஒவ்வொருவரும் ஒவ்வொரு கவியைத்தாங்கிப் பேசுவார்கள். காதம்பரி சளைக்காமல் தர்க்கம் செய்வாள். சாயங்காலம் மறுபடியும், எல்லோரும் சேர்ந்தோ இவர்கள் இருவர்மட்டுமோ உலாவச் சென்று ஜலம் வற்றின ஆற்றுமணலில் உட்கார்ந்து பேசுவார்கள்.

உலக விவகாரம், யுத்தம், பத்திரிகை இவைகளைப் பற்றிப் பேசுவார்களே தவிர 'காதல்' என்ற விஷயத்திற்கே அவ்விடம் இடமிருக்காது. காதம்பரி வந்த நான்குநாளைக்கெல்லாம் யுத்தகாலத்தைக்கூடக் கவனியாது, ஒரு சிறிய கார் வாங்கினான். அதை ஓட்டவும் அவளுக்குக் கற்றுக்கொடுத்தான். அவள் கார் ஓட்டுவாள். அவன் பக்கத்தில் உட்காருவான், ஐந்து மைலுக்கப்பாலுள்ள நகரத்திற்கு அடிக்கடி சென்று வருவார்கள். சினிமாவிற்கும் அழைத்துச் செல்லுவான். அந்த இடத்தில் அவள் இஷ்டத்திற்கு விரோதமான விஷயமே நடக்காது. இவள் ஏவினதைச்செய்ய ஓர் சிறுமி ஏற்படுத்தியிருந்தார்கள், சமயங்களில் மாமிக்கு உதவியாக வேலைசெய்யப்போவாள். அதற்காக உடனே சமையலுக்கு ஆள் வைத்துவிட்டான் சீனிவாசன். ரேடியோவில்கூட அவள் இஷ்டப்படிதான் யாவரும் கேட்பார்கள்.

காதம்பரிக்குக் கல் ஹ்ருதயமல்லவே, அவளும் பெண் உள்ளம் படைத்தவள்தானே. இவ்வளவு ஸௌகரியங்கள் உள்ள இடத்தில் தன்மீது அன்பை அள்ளி இறைக்கும் ஒருவனிடத்தில், வாடித்துவண்ட — ஏமாற்றமடைந்த — ஹ்ருதயத்தில், அன்பு ஜனிக்காமலிருக்குமா? காதலை ஏற்கமாட்டேன் என்ற உள்ளமானாலும், காலம் இடம் யௌவனம் இவைஅவற்றின் வேலையைச்செய்யாதுவிடுமா? காதம்பரிக்கு நாளாவட்டத்தில் சீனிவாசன் மேல் காதல் ஏற்பட்டது. சமயங்களில் ஏற்படும் அவனுடைய ஸ்பர்சம் அவள் தேகத்தில் ஆனந்த உணர்ச்சியை உண்டாக்கும். 'அவன் தன்மீது அன்புள்ளவன், தன்னை ஏற்றுக்கொள்வான்' என்ற விஷயம் அவள் மனமறியும். இருந்தாலும் பெண்மையின்

இயற்கையானது அவனாகத் தன்னிடம் கேட்கட்டும் என்று தடுத்தது. தன் மனதை வெளிக்காட்டாமல் நடந்துவந்தாள்.

'அன்பு' என்பது ஒருவரிடத்து ஏற்படுமானால் அவர் செய்யும் எந்தக்காரியத்தையும் தானும் செய்யவேண்டும் என்பது இயற்கையின் தத்வமல்லவா? காதம்பரியும், ராட்டினம் சுற்றல், சேரிக்குப்போதல் முதலியவைகளில் சீனிவாசனைப் பின்பற்றினாள். ஒருநாள் கடைக்குச் சென்றிருந்தபொழுது இவள் மனமறிந்தாலும் என்ன சொல்லுகிறாள் பார்ப்போமென்ற எண்ணத்துடன், ஓர் கதர் புடவையைக் காட்டி" இது மிக நன்றாக இருக்கிறது. உன் நிறத்திற்கு ஏற்ற கலர். ஆனால் கதர். வாங்கிக்கொள்ளுகிறாயா?" என்றான். உண்மையில் அதன் நிறம் அவள் மனதைக் கவர்ந்தது. அவன் விருப்பத்தையும் அங்கீகரிக்கும் எண்ணத்தில் அதை எடுத்துக் கொண்டாள். பிறகு கதர் ஸில்க்காகவே வீட்டை நிரப்பி விட்டான் சீனிவாசன்.

மூன்றுமாதம் இந்திரபோகமாய்க் கழிந்தது காதம்பரிக்கு. அன்று சீனிவாசனுக்குக் காட்ட ஒருவர் பெண்ணை அழைத்துவருவதாகத் தகவல் வந்தது. காதம்பரி ஹ்ருதயத்தில் இச்சொல் முள்ளெனத் தைத்தது.

சாயங்காலம் நாலு மணி. ஐம்பது வயதுள்ள ஒரு கனவானும், பதினாறு வயதுள்ள ஒரு யுவதியும் காரில்வந்து இறங்கினார்கள். பெண் நல்ல வெளுப்பு. கடைந்தெடுத்த தந்தப்பாறை போன்ற அங்க அமைப்பு. அதிகம் சொல்லுவானேன். அழகே உருவெடுத்தாற்போலிருந்தாள். காதில் தோடு லோலக், கையில் வைரவளை, ரிஸ்ட்வாட்ச், வயிர முகப்பு ஒட்டியாணம், வைர நெக்லேஸ், மூக்கில் ஓர் வைரப் பொட்டு, இவைகளுடைய ஒளி கண்ணைப் பறித்தது. ஜரிகை வேலை செய்த பார்டருடன்கூடிய கருப்புப் புடவையும் ஜாக்கெட்டும், அவள் அழகை இன்னும் மிகுதிப்படுத்தின. யோகியானாலும் அவளைப் பார்த்த மாத்திரத்தில் சற்று மயக்கங் கொள்ளத்தான் செய்யும் மனம்.

சீனிவாசன் நன்றாக வீணை வாசிப்பானாதலால், அவன் வீணையில் வெகு அற்புதமாகப் பாடி வாசித்தாள் அப்பெண்மணி. சம உரிமையில் பற்றுக்கொண்ட சீனிவாசன் அப்பெண்ணுடன் சாதாரணமாய்ப் பேசினான். அவளும் நாணத்துடன் பதிலளித்தாள். சற்று நேரத்திற்கெல்லாம் அவர்கள் சென்றுவிட்டார்கள். சீனிவாசன் அவர்களை வழியனுப்பச் சென்று விட்டான்.

"காதம்பரி பெண் எப்படி இருக்கிறாள்?" என்றாள் கல்யாணி. "முதல் மார்க்குக்கொடுக்கலாம்" என்றது வாய். மனம் சொல்லமுடியாத வேதனைசெய்தது. மேலே பேச்சை வளர்த்த இஷ்டமில்லாமல் அவ்விடம் விட்டு எப்படிச்செல்வது? என்று தவித்தாள்.




TRADE MARK

"நான் பிறந்தது முதல் எனக்கு என்னுடைய தாயார் காலை மாலை இரண்டு வேளை தவறாமல் **கிரைப்—விட்—டி** கொடுத்து வருகிறார்கள். அதனால்தான் நான் எப்பொழுதும் சிரித்து விளையாடிக் கொண்டிருக்கிறேன்"

தாய்மார்களே! உங்களுடைய குழந்தைகளின் வயிற்றுக் கோளாறுகளை நீக்கவும் தடுக்கவும் **கிரைப்-விட்-டி** ஓர் சிறந்த தேவாமிர்தம்.

தயாரிப்பவர்

**S. R. Remedies,**

**Trichinopoly.**

அவளுக்கு உபகாரம் செய்வதுபோல், "எண்டி கல்யாணி! பெண் ரதியாட்டமாய் இருக்கா. குயிலா பாடரா. சிவனேன்னு கட்டிப்போடு, இதையும் தட்டிக்கழிக்காதே" என்று சொல்லிக்கொண்டே வந்தாள் அடுத் தாத்துப்பாட்டி.

இதுதான் சமயமென அவ்விடத்தைவிட்டு நழுவினாள் காதம்பரி. இன்னது என்று பாராது ஒரு புஸ்தகத்தை எடுத்துக்கொண்டு மொட்டைமாடிக்குச்சென்று, அங்கே கிடந்த ஈசிச்சேரில் சாய்ந்தாள். புஸ்தகத்தைப் பிரித்தாள். அதிலிருந்து ஒரு படம் மேலேவிழுந்தது, எடுத்துப்பார்த்தாள். முன்னால் பட்டணத்தில் தான் மாமரக்கிளையை பிடித்து நின்ற தோற்றத்தைகையினால்வரைந்திருந்தது. "சீனிவாசன்" என்ற கையெழுத்தும் செய்திருந்தது, அதைப் பார்த்ததும் அன்றைய அவள் மனத்தையும் இன்றைய மனத்தையும் ஒப்பிட்டுப் பார்க்கையில் மலையும் மடுவும் எனத்தோன்றி நிற்று. புஸ்தகத்தைமார்பின்மீதுவைத்துவிட்டு இரண்டுகைகளாலும் சாய்மானத்தைப் பிடித்துக்கொண்டு சிந்தனை ரதத்தை ஓடவிட்டாள்.

"இன்று வந்தபெண்ணைச் சீனிவாசன்வேண்டாம் என்று சொல்ல முடியுமா? அவள்முன் தன் அழகு எம்மாத்திரம்? நாம் அவரிடம் வீணை பழகுகிறோம். அவளோ அதி அற்புதமாக வாசிக்கிறாள், அவள் வந்தால் நாம் அனுபவிக்கும் யாவும் அவள் வசமாகும். சீனிவாசனுடன் சாதாரணமாகப்பேசக்கூட முடியாது. தான்வேறுமனுஷி" என்றுநினைக்கும்பொழுது, முன்பின் தெரியாத அப்பெண்மணியின்மேல் ஆத்திரம் மூண்டது. "நாம் ஏமாந்து விட்டோம், மமதையால் கெட்டோம்" என்று எண்ணாத எண்ணமெல்லாம் எண்ணிச் சகிக்கக் கூடாத துக்கத்தை அடைந்தாள். வாய்விட்டு அழவேண்டும்போல தோன்றிற்று "என்ன காதம்பரி! இன்று புதிதாக இந்த இடத்திற்கு விஜயம் செய்தாய்? உன்னை எங்கெல்லாமோ தேடிவிட்டுக் கடைசி ஆசையாக இவ்விடம் வந்தேன்" என்று சொல்லிக்கொண்டே அவள் பக்கம் வந்தான் சீனிவாசன்.

திடுக்கிட்டு எழுந்து நின்றுகொண்டாள். பிறகு, "மாமியுடன் யாரோ பேசவந்தார்கள். தாங்கள் அவர்களை வழியனுப்பச்சென்று விட்டீர்கள். அதனால் இவ்விடம் வந்தேன். புஸ்தகத்தைப் பிரித்தேன். அதில் இந்தப் படம் இருந்தது. அதைப் பார்த்ததும் பழைய நினைவுகள் தோன்றின. உங்களுக்குச் சித்திரம் வரையத்தெரியுமென்பது இதுவரை தெரியாது. வீணை 'வாசிக்கிறீர்கள். 'தெரியாது' என்ற விஷயம் உங்கள் அகராதியில் கிடையாதுபோலும்" என்று தனது நிலைமையைச் சமாளித்துக்கொண்டு குனிந்தபடியே பதில் சொன்னாள்.

"பின் ' கிராமத்தில் வெட்டிப்பொழுதாக் கழிக்கிறேன். முன்னமேயே, இன்னும் இரண்டு நாழி பொழுது இருந்தால்கூட தேவலை" என்று உன்னிடம் சொல்லவில்லை? இந்த மூன்று மாதத்தில் உனக்குக்கூட அப்படித்தானே தோன்றினது. அதிருக்கட்டும். இன்று வந்த பெண் எப்படி?" என்றான்.

"நல்ல அழகி, ஸகலவிதத்திலும் உங்களுக்குப் பொருந்தியவளே." என்று சொல்லும் பொழுதே குரல் கம்மிற்று.

"உன்னைவிடவா அவள் அழகு?" என்றான்.

"என்ன" என்று நிமிர்ந்தாள். இருவர் கண்களும் சந்தித்தன. சட்டெனக் குனிந்து கொண்டு, "ஒரு காலத்தில் அப்படி நினைத்திருக்கலாம். தற்சமயம் அவள்கால் தூசிக்குக்கூட நான் சமானமாக மாட்டேன்." என்றாள்.

"மிகவும் சந்தோஷம். நீயே பார்த்துச் சர்டிபிகேட் கொடுக்கும்பொழுது வேறு என்ன வேண்டும். ஒரு விதத்தில் என் பாக்யசாலினி அகப்பட்டாள். ஆனால் உனது பாக்யவான் கிடைத்த பின்னல்லவோ நான் அவளை ஏற்க முடியும்? அது என் சபதமல்லவா? "என்றான்.

"எனது பாக்யவான் இந்த ஜன்மத்தில் ஏற்படப்போவதில்லை. அதற்காகக் காப்பதானால் தாங்கள் பீஷ்மர்தான். அது எப்படியாவது போகட்டும். நான் நாளைக்கு ஊருக்குப்போகவேண்டும்" என்றாள்.

"ஏன் அவசரம் இப்படித் திடீரென்று"?

"நான் மெடிகல் காலேஜில் சேர ஏற்பாடு செய்யவேண்டும்"

"இந்த யோசனை திடீரென்று உதயமாகக் காரணம்? நான் ஒரு ஏற்பாடு செய்ய நினைத்தேன். தினம் வருகிறார்களே மாணவர்கள் அதில் உனக்கு யாரையாவது பிடித்தால்......" என்று சொல்லி முடிக்குமுன்,

"போதும் உங்கள் ஏற்பாடு. எனக்குக் கல்யாணமும் வேண்டாம் கல்லெடுப்பும் வேண்டாம். அழகு என்ற மமதையால் மோசம் போனேன், தாயாரும் அதற்கு அனுகூலம் செய்தாள். என்னை நானே ஏமாற்றிக்கொண்டேன். ஆனால் ஆண்பிள்ளைகள் நயவஞ்சகம் படைத்தவர்கள், சுயநலக்காரர்கள். வேண்டவேவேண்டாம் அவர்கள் சகவாசம். போதும் உங்கள் கிண்டல்பேச்சு. என்னை ஊருக்கு அனுப்பிவிடுங்கள்" என்று துக்கம் நெஞ்சையடைக்கக் கூறினாள். கண்களில் நீர் நிரம்பிற்று. அவள் மனதில் அடங்கிக்கிடந்த ஆத்திரத்தைச் சொல்லித் தீர்த்துவிட்டாள்.

"காதம்பரி! நீயா இப்படிப்பேசுகிறாய்? நான் என்ன நயவஞ்சகம் செய்தேன். விஷயத்தைச் சொலலாமல் இப்படி என்ன வெல்லாமோ சொல்லி நீயும் துன்பப்பட்டு, என்னையும் வருத்துகிறாயே" என்றான்.

"நான் என்ன சொல்லவேண்டும்? இவ்வளவு நாள், தாங்கள் நடந்து வந்ததும், இன்று நடந்த விஷயமும் எப்படியிருக்கிறது? அழகு மிஞ்சுமா, அன்பு மிஞ்சுமா?" என்றாள்.

"காதம்பரி! அன்புதான் மிஞ்சும். சற்று என்னைப்பார்த்துச் சொல்லு. ஆனால் நீ என்னைக் காதலிக்கிறாயா? அப்பாக்யம் எனக்குண்டா?" என்றான்.

சட்டெனத்திரும்பி அவனைப் பார்த்தவாறு "அதில் இன்னும் சந்தேகமா?" என்றாள் கண்களில் அன்பு ஜொலிக்க.

"உண்மையா காதம்பரி" என்று உணர்ச்சி ததும்பக் கூறி அவள் கையைப்பிடித்தான்.

"அம்மாஞ்சி நான் பாக்யவதியே" என்று அவன் தோளில் சாய்ந்து கண்களை மூடிக் கொண்டாள் உணர்ச்சி மிகுதியினால்.

சற்றுப் பொறுத்து, "மெடிகல் காலேஜில் சேரவேண்டாமா?" என்றான் அவள் மோவாயைப் பிடித்து நிமிர்த்தியவாறு.

"சேர்ந்தாய்விட்டதே. இனி தொழில் நடத்தவேண்டுவதுதான் பாக்கி" என்று புன்சிரிப்புடன் கூறவிட்டு, "அம்மாஞ்சி, உங்கள்அன்பை எவ்விதம் சொல்வது? கரும்புதின்னக் கூலி கேட்ட என்னைக் கூலி கொடுத்துத் தின்னச் செய்துருசியறியும்படிசெய்தது உங்கள் அன்பு. உண்மையைச் சொல்லுகிறேன். ஜானகி சொன்னதுபோல் விதி வேறுதான். நீங்கள் சொல்லியபடி, குணம் அறியப் பழக்கம்தான் வேண்டும் என்ற உண்மையை இந்த மூன்று மாதத்தில் அறிந்துகொண்டேன். 'காதல் நாம் உண்டாக்கிக்கொள்வது' என்று நினைத்தேன். 'அது தெய்வீகம்' என்பதையும் உங்களால் அறிந்தேன். காதலின் சக்தி எதையும் செய்யும். நீங்கள் என்னை நடத்திய விதம், விஷமாக நினைத்திருந்த கிராமவாசம், காங்கிரஸ் திட்டம், கதர் இவைகள், உங்கள் மேல் ஏற்பட்ட காதலினால் அமிருதமாகத் தோன்றலாயின. முக்யமாக, இன்று அந்தப் பெண்ணைப்பார்த்ததும், "வாழ்வின் எதிரி" என்ற பொறாமை என்னை மிகவும் வாட்டிற்று. அவள்மேல் ஆத்திரம் மூண்டது. அழகின் ஜோதியைக்கண்டபின், என்மீது உங்கள் கவனம் செல்லுமா? என்ற எண்ணம் என்னைச் சித்ரவதை செய்வதுபோலிருக்கிறது. தாங்கள் அன்பிற்கு முதல் ஸ்தானம் கொடுப்பீர்களென்பதை அறியாமல் தவித்தேன். இந்த க்ஷணம் நான் அடையும் இன்பம்" என்று முகத்துடன் முகம் சேர்த்துக்கொண்டாள்.

ஆகாயத்தில் சந்திரன் உதயமானான், அபூர்வ தம்பதிகளைத் தரிசிக்க. "அவளை இறுகத் தழுவிய வண்ணம் "காதம்பரி. உன்னை இன்று நேசித்தேன். உனது பத்தாவது வயதிலேயே என்மனதில் புகுந்தாய். அம்மா கடமைக்காகக் கல்யாணம் செய்யவேண்டுமென்றாள். நான் காதலுக்கு அடிமையானேன். உன் அழகு என்னை மயக்கவில்லை. அன்றும், நீ ஜ்வரத்தில் கிடந்தபொழுதும், என்றும் ஒன்றாகவே தோற்றமளித்தாய். அன்பின்முன் எதுநிற்கும்? விதிப்படி நடக்கட்டுமென்றிருந்தேன். அவ்விதி என்னைச் சதிசெய்யவில்லை, தெவிட்டாத அமுதத்தை அளித்தது. உன் சந்தோஷத்தையே நான் விரும்பினேன். நீ கிடைக்காவிடில் பிரும்மசாரி யென்ற முடிவிற்கு வந்தேன். உன்னை இஷ்ட விரோதமாக அடையமாத்திரம் நினைக்கவில்லை." என்றான்.

"எல்லாம் சரிதான். இன்று வந்தவர்களுக்கு என்ன சொன்னீர்கள்?"

"அந்த விஷயம் சொல்லுகிறேன் வா!" என்று சாய்மான நாற்காலியில் சாய்ந்துகொண்டு, தன் மடிமீது அவளை உட்காரவைத்துக்கொண்டான். பிறகு நீ நான் இழுத்தவிடமெல்லாம் இழுபடும்பொழுதே உன்மனம் அறியாமலிருக்க முடியுமா? உன்கண்கள், உன்மனதைப் பறைசாற்றிக் கொண்டுதானிருந்தன. ஆனாலும், நீ சாமர்த்தியமாக நடப்பதாக நினைத்து என்வாயால் வரவேண்டுமென்று எதிர்பார்த்தாய். நான் உன் வாயினாலேயே வரவேண்டுமென்று எதிர்பார்த்தேன். ஆனிமாஸமும் இருபது தேதியாகிவிட்டது. சமயம் நேர்ந்தது. ஒரு வழி செய்தேன். இன்று என்னை வரும்படி சொன்னார்கள். வேண்டுமென்றே, அம்மா பார்க்கவேண்டும் இவ்விடம் அழைத்து வாருங்கள் என்றேன். வரமாட்டார்கள் என்று நினைத்தேன். வந்துவிட்டார்கள். வழியனுப்பும் பொழுது உனக்கும் எனக்கும் நிச்சயம் ஆகப்போகிறதென்று சொன்னேன். பிறகு, மாடிவீட்டுச் சுந்தரம் "நல்ல ஜோடி" என்று நினைத்து அவனைப்பற்றிச் சொன்னேன். ஆனால், அவர்கள் பட்டணத்திலேயே காதலர்களாம், சுந்தரம் இவ்விடமிருப்பதைக் கடிதமூலம் தெரிந்துகொண்டு வருவதற்குச் சம்மதித்தாளாம். என்னைப்பார்க்க வரவில்லையாம் அப்பெண். கடைசியில், சுந்தரமும் அவளும், நான் செய்த உதவிக்கு வந்தனம் கூறினார்கள். இது விபரம், அவள் தகப்பனார் ஆற்றுப்பக்கம் போயிருந்த பொழுது சுந்தரம், நான், அவள், மூவரும், காரில் பேசினோம். பிறகு அவரிடம் சொல்லி, நிச்சயதாம்பூலம் செய்துகொண்டு சென்றுவிட்டார். அதனால்தான் நான் வரத் தாமதம், நானும் இப்பொழுது அவர்களுக்கு வந்தனம் கூறவேண்டியதுதானே. சரி. காதம்பரி உன் சுயம்வரம் கடைசியில் கடைபோல் இப்படிப் போட்டியில் முடிந்தது' என்று சிரித்தான்.

"ஏன் இதுவும் நானகத் தேடிக்கொண்டது தானே. காதம்பரி சுயம்வரம்தான். நாளை அப்பாவிற்குக் காதம்பரி சுயம்வரத்தில் அம்மாஞ்சியைத் தேர்ந்தெடுத்தாள்" என்று தந்தி கொடுக்கப் போகிறேன் என்று பெண்மை பின் கர்வத்தில் தோல்வியை விட்டுக்கொடுக்காமல் பேசினாள்.

"காதம்பரி சுயம்வரத்திற்குச் சந்திரனே சாக்ஷி" யென்று அவளைத் தழுவி முத்தமிட்டான்.

**புதிய தொடர்கதை**

# இதென்ன உலகம்...!

இலா சந்திர ஜோஷி ஹிந்தியில் இயற்றியது

மொழி பெயர்ப்பு — கிருத்திவாஸ்

வெறுப்பு! வெறுப்பு!! எனது ஆத்மாவே வெறுப்பில் அமிழ்ந்து கிடக்கிறது. கொலைகாரியான நான்—ஒரு பெண்—இப்பிரபஞ்சத்தையே-இப்பிரும்மாண்டமான உலகத்தையே—வெறுப்பென்னும மைரைக்கொண்டு மெழுகிவிட்டேன். இச்சிருஷ்டியினிடமே ஒரு விதமான வெறுப்புணர்ச்சி புதைந்து கிடக்கிறது. பெண்ணுருவத்தைக் கண்டாலும் ஒரு வித வெறுப்பு. ஆண்களின் நிழலைக்கண்டாலும் ஒரு வித அச்சம். பகலின் கோலாகலமோ, இரவின் அமைதியோ, ஒன்றுமே எனக்குப் பிடிக்கவில்லை. வாழ்வென்னும் நீரருவியில் உண்டாகும் சுகம், துக்கம் என்னும் அலைகளின் லீலாவினோதங்களும் என்னுள்ளத்திற்கு இன்பம் தருவதில்லை. காலதேவனின் மழுக்காயும் கொப்பறையை நினைந்தாலே எனது சப்த நாடியும் ஒடுங்கி விடுகிறது. ஹே ஈசா! வெறுப்பே உருவெடுத்த இந்தப் பெண்ணின் கதி என்னவாகும்? கொடுமை, வெறி, ஹிம்சை முதலிய குணங்கள் நிறைந்த இந்தப் பெண்ணை, துயரக்களஞ்சியமான பயங்கரப்படுகுழியிலா தள்ளப்போகிறாய்? மறைபொருளான ஹே பகவானே! இவ்வளவு பெரிய நானிலத்தில் என்னைக் காக்கும் நிழலே கிடையாதா?

அபலையாம் அபலை! துர்ப்பாக்கியத்திற்கே இருப்பிடமான இந்த நாடு, பெண்களுக்குத் தன் அபலைத்தன்மையை நினைந்து கர்வம் கொள்ள உபதேசிக்கிறது. பண்டைக் காலத்திலிருந்தே நம் நாட்டுப்பெண்மணிகளும் இவ்வுபதேசத்தைக் கடைப்பிடித்து வந்திருக்கின்றனர். அதன் பலனாக அவர்களிடமுள்ள பெண்மையும் மறைந்துவிட்டது; ஆண்மையும் அழிந்துவிட்டது. பயந்தவர்களிடம் கடுந்தன்மை அதிகரித்துவிடும் என்பது உலகறிந்த விஷயம். புதிதாக விழித்திருக்கும் பெண்ணினத்தின் அடிமைத்தளையின் காரணமாக ஏற்பட்டுள்ள பயங்கொள்ளித்தனம், தனது பேயுருவத்தைக் காட்டவாரம்பித்துள்ளது.

மாபெரும் வீரர்களின் உள்ளத்தும், தேசத்தில் ஏற்பட்டிருக்கும் 'பெண்களின் விழிப்பு' தன் நாதத்தை ஊடுருவிப்பாயச் செய்திருக்கிறது. தேச நன்மையாளர்கள் அதன் மங்கள ஒலியில் மயங்கி, ஆனந்த பாஷ்பம் சொரிந்துகொண்டிருக்கின்றனர். மாத வெளியீடுகளைப் பாருங்கள்! புதுப்புதுப் பட்டம் பெற்ற பெண்மணிகளின் புகைச் சித்திரங்கள் காக்ஷியளிக்கின்றன. 'எந்தப்பெண் M. A. பரீக்ஷையில் முதன்மையாகத் தேறினாள்; எந்த மாது வார் பிராக்டிஸில் ஈடுபட்டிருக்கிறாள்? எந்தப் பெண்மணிக்கு ஆனரெரி மாஜிஸ்திரேட் பதவி கிட்டியுள்ளது? எந்த வீரமாது தேச சேவை செய்ய முன்வந்திருக்கிறாள்?' என்பன போன்ற விஷயங்கள் தேசத்தின் நிகழ்காலச் சுற்றுவட்டாரங்களில் எதிரொலித்துக்கொண்டிருக்கின்றன. கடமைக்கண்ணோட்டமுள்ள கொள்கைவழுவா இம்மாதர்களுக்குக் கடவுள் நன்மை பயப்பாராக! ஆனால் என் அருமைத் தோழி சகுந்தலா! உனது உள்ளத்தில் 'பெண்களின் உரிமை' 'பெண்களின் விழிப்பு' முதலியன எப்பொழுதுமே உண்டானதில்லையே! நீ யூனிவர்ஸிடிப் படிப்பில் மோகம் கொண்டதாகவும், அரசியல் அரங்கங்களில் பெயர் அடைய விருமபியதாகவும் நான் கேள்விப்பட்டதில்லை. ஒருவித வெளியுறவையோ, செயற்கை முறைகளையோ கையாடாமல், உள்ளத்துப் பதிந்து கிடக்கும் இயற்கையினிமையின் உதவியைக்கொண்டு, இயற்கையன்னையின் அன்பிற்கன்பான பூங்கொடிபோலப் படர்ந்தனையே! இப்பொழுது நீ எங்குச் சென்றுவிட்டாய்? உனது பாத தூளிகள், துயரமே உருவெடுத்த இப்பாவிப் பெண்ணுக்குக் கிட்டாவா? இருபதாவது நூற்றாண்டின் படாடோபங்களை வெறுத்து,—தற்காலத்திய கலாசாலைப் படிப்பில் உழன்றுகொண்டிருக்கும் இந்த நாகரிக சமூகத்தின் நடவடிக்கைகளினின்றும் சலித்து,—அமைதியே உருவெடுத்த, உனது நிர்மானுஷ்யமான தபோவனத்தின் சாந்த நிலையில் ஈடுபட விரும்புகிறேன். அதைப் பெறும் பாக்கியம் எனக்குக் கிட்டக் கூடாததா?

2

துயரக் கடலில் அழுந்திக் கிடக்கும் பாவி—என் கதையைப் பொறுமையுடன் கேட்கும் காருண்யமுள்ள வாசகர் எத்தனைபேர் கிடைப்பாரோ! அந்தோ! நான் பிறந்திருக்கும் நாட்டில் பாவத்தொழில் செய்பவர்களிடம் அனுதாபம் காட்டுவதே பெரும் பாபமாகக் கருதப்படுகிறது. அப்படியிருக்கும் இப்புண்ணிய பூமியில் பாபியாகிய என்னை ஏன் படைத்தாய்? கடவுளே! இத்தேசத்து மண்ணில் உற்பத்தியானதாகத் தெரியவில்லையே, எனது ஸ்வபாவம்! பண்டைக் கிரேக்க தேசத்தின் வாஸனையல்லவா எனது ஸ்வபாவத்தில் வீசுகிறது? எனது உள்ளத்தில் குமுறிக்கொண்டு அடங்கிக்கிடக்கும் தீ, இன்று திடீரென எரிமலைக் குழம்புபோல வெடித்து எழுகிறது.

அலகாபாத்தில் நான் பிறந்து வளர்ந்த மாளிகை, இன்பக் கேளிக்கைகளுக்கு மிகவும் பிரசித்திபெற்றது. அதற்கு ஏற்பட்டிருந்த

இந்தக் கெட்ட பெயர் எவ்வளவுதூரம் உண்மையென எனக்குத் தெரியாது. குழவிப் பருவத்தில் நாங்கள் நடத்திய ராஜபோக வாழ்வு நினைவுத் திரையில் மங்கிய படம்போல ஓடுகிறது. சண்டை சச்சரவு இன்றி ஆனந்தமயமாகக் கழிந்த, எங்களது வாழ்நாட்களை, இறந்த காலம் கடோர சித்தத்துடன் பிடுங்கிச் சென்றுவிட்டது. அதிகாலையிலெழுந்து மரங்களின்மேல் அமர்ந்து இனிய கீதம் பாடும் பக்ஷிகளைப்போல, எனது ஆத்மா களங்கமற்றதாகவும், மிகப் பரிசுத்தமாகவும், ஆனந்தம் ததும்பியதாகவும் இருந்தது. பால்யப் பருவத்திய சகோதர வாஞ்சை! கிடைத்தற்கரியது! விலை மதிப்பற்றது! தம்பி!—கொலையாளியான நான்—இவ்வார்த்தையை எந்தவாயால் உரைப்பது? எந்த வெட்கமற்ற பேனாவின் முனையினால் இம்மூன்று எழுத்துள்ள வார்த்தையை எழுதுவது? ஈசா! எனது இந்த வெட்கமின்மை ஒரு எல்லையையோ வரையறையையோ உடையதா? வேண்டுமென்றே தெரிந்து, சகோதரனைக் கொன்ற பாவி—நான்—வாயார அவனைப் புகழ்ந்து உலகை ஏமாற்றப் பார்க்கிறேன். சரி—எதுவாயினும் சரி, என் வெட்கமற்ற கதையைச் சொல்லித்தான் தீரவேண்டும். அதைச் சொல்லித் தீராதவரையில்—அது காற்றுமண்டலத்தின் ஒவ்வொரு அணுவிலும் எதிரொலிக்காத வரையில்—என் கொதிப்பேறி இருக்கும் ஆத்மாவிற்கு அமைதி கிடைப்பதேது?

அந்தப் பெரிய மாளிகையில், 'நினைவுத் திரையில் மங்கிய படம்போல ஓடியது, என் பால்யப் பருவம்', என்றுதானே சொல்லிக் கொண்டிருந்தேன். நாங்கள் சகோதர சகோதரிகள் மூவர். மூவரிலும் பெரியவள் நான். எனக்கு அப்பா பரிவுடன் 'லஜ்ஜாவதி' என்று பெயரிட்டிருந்தார். (தமது அருமந்தப் பெண் லஜ்ஜையற்று வாழ்வாள் என்று அவருக்குத் தெரிந்திருந்தால்தானே எனக்கு இப்பெயரைச் சூட்டாமலிருக்க?) எனக்கு அடுத்தவன் என் தம்பி ராஜேந்திர பிரஸாத். செல்லப் பெயர் 'ராஜு' என்பது. எனக்கு, என்னவோ தெரியவில்லை, அழகை மட்டும் ஏராளமாக அளித்திருந்தான், படைத்த பிரமன். என்னைக் காட்டிலும் அதிக அழகு வாய்ந்தவன் என் தம்பி ராஜு. அழகில் மட்டுமல்ல, புத்தி, குணம், முதலியவற்றிலும் தங்கமானவன். குழந்தைப் பருவத்திலிருந்தே நானும் அவனும் மிகவும் அன்னியோன்னியமாகப் பழகிவந்தோம். நான் அவனை உயிருக்குயிராகப் பாவித்துவந்தேன். தம்பி! உன்னைப்பற்றி எழுத ஆரம்பித்ததும் கண்களினின்றும் 'நீர் வெடித்தோட ஆரம்பிக்கிறது. உள்ளம் உருகத் தொடங்குகிறது. தம்பி! உன்னை வேறு பிறப்பிலாவது பெறும் பாக்கியம் கொலைகாரியான எனக்குக் கிட்டுமா? நீ எங்கிருந்தாலும் அமைதியுடனிருப்பாயாக. 'எந்தப் பிறப்பிலாவது உன்னைக் காணும் பாக்கியம் கட்டாயம் எனக்குக் கிட்டும்' என்ற நம்பிக்கை என்னுளத்தினின்றும் அழியவேமாட்டேன் என்கிறது. உன்னைப்போன்ற உயர்குணத்தையடைய எப்படியாவது முயன்றே தீருவேன், துயரமே உருவான உன் தமக்கையை ஒருபொழுதும் மறவாதே! குழவிப் பருவத்தில் சகோதர—சகோதரிகளாகிய நாம் மூவரும் சேர்ந்து அனுபவித்த இன்பத்தை—அன்பின் ஆனந்தத்தை—பிரேமையின் ஞாபகத்தை மறக்கவே மறக்காதே!

என் தங்கை லீலா, ராஜுவைக் காட்டிலும் 2-2½ வயது சிறியவள். எனக்கு வயது பத்து நிறைந்திருக்கும்பொழுது, ராஜுவிற்கு ஏழும், லீலாவிற்கு ஐந்தும் இருக்கலாம். எங்கள் மூவரது உலகமும் அலாதி. வீட்டுடன் அதிக நெருங்கிய தொடர்பு எங்களுக்குக் கிடையாது. குழந்தைகளின் பிரத்தியேகமான வேடிக்கை-விளையாட்டு, கேலி—கூத்து, அன்புச் சண்டை இவைகளில் நாங்கள் லயித்து விடுவோம். எங்களது இந்தப் பால்ய லீலைக்கு இடையூறாக, வந்து வாய்த்தாள், விசித்திரப் பெயர் படைத்த (மாதமா ஜேல்) ஸ்ரீமதி 'மார்யா பாவலோவனா' என்ற 'கவர்னஸ்'. இந்த ருஷ்யப் பெண்மணியை என் தந்தை பம்பாயிலிருந்து பிடித்து வந்திருந்தார். 'அவள், எப்பொழுது, எப்படி, எதற்காகப் பம்பாய் வந்தாள்? வாஸ்தவத்தில் ருஷ்யக்காரிதானா? அப்பாவின் கையில் அவள் சிக்கிய விதம் எப்படி?' முதலிய


## நரையை ஒழியுங்கள்!



நரை எவ்வளவு முதிர்ந்ததாக இருந்தாலும் கேசத்திற்கு முன்போல் நிரந்தரமாகக் கருமை அளிப்பதில் **விவலின் ஹேர் ஆயில்** நிகரற்றது. சென்ற 10 வருஷங்களாகப் பிராபல்யத்துடன் இருந்து வருகிறது. பெரிய பாட்டில் ரூ. 3/4. சிறிய பாட்டில் ரூ. 2/. முழு சிகிச்சைக்குத் தேவையான 3 பாட்டில்கள் வாங்கினால் தபால் செலவு இனாம்.

ஏஜண்டுகள்: **அப்பா & கோ.,**

கெமிஸ்ட்ஸ், எஸ்ப்ளனேட், மதராஸ்.

பிறவிக் குருட்டைத் தவிர

## கேடரைன்



மற்றெல்லாக் கண் உபாதைகளையும் மாயமாக நிவர்த்திக்க வல்லது. கண்ணாடி போடுவதைத் தவிர்த்துக் கொள்ளுங்கள். கேடரைன் உபயோகித்து மீண்டும் யதாப் பிரகாரம் கண் பார்வையைப் பெறுங்கள். கண் படலத்திற்கு (Cataract) உத்தரவாதத்துடன் கூடிய நிர்ப்பயமான சிகிச்சை.

ரூ. 2/-

ஏஜண்ட்ஸ்: **அப்பா & கோ.,** கெமிஸ்ட்ஸ்,

286, சைனா பஜார் ரோட், மதராஸ்.

விஷயங்கள் எனக்கு ஒன்றுமே தெரியாது. அச்சமயம் அவளுக்கு முப்பது வயதிருக்கும். முகத்தில் சுருக்கம்தெரியவாரம்பித்துவிட்டது. கன்னத்தெலும்பும் மேடு இட்டு விட்டது. அவள், ஆங்கிலம், பிரெஞ்சு, ஜர்மன் முதலிய பாஷைகளில் புலமை வாய்ந்தவள். அரைகுறை ஹிந்துஸ்தானி பேசவும் கற்றிருந்தாள். கிழடுதட்டிப் போயிருந்த அவளை நாங்கள் அடிக்கடி ஏதாவது பரிகாசம் செய்துகொண்டே இருப்போம். ஒருநாள் கோபமுற்று, என்னையும் ராஜுவையும் செம்மையாக அடித்துவிட்டாள், அவள். அன்றைய தினம் ஒரு மூலையில் உட்கார்ந்துகொண்டு, வெகுநேரம் தீர யோசித்து, 'பூதனு' என்ற பெயரை அவளுக்குச் சூட்டினோம். அவளைக் கண்டாலே, இராக்ஷஸி 'பூதனு' வின் ஞாபகம் வந்து சிரிக்க ஆரம்பிப்போம்.

நாங்கள் 'பாவலோவனு' என்று சொல்ல வராததால் 'பூதனு' என்றழைக்கிறோம் எனக் கருதி அவள் அடிக்கடி திருத்துவாள். ஆனால் நாங்கள் எப்பொழுதும் வேண்டுமென்றே 'பூதனு' என்றழைக்கிறோம் என்பது தெரிந்தால்தானே, அவளுக்கு.

'பாவலோவனு' எங்களுக்கு ஆங்கிலம் 'பேச்சு' வாயிலாகக் கற்பித்து வந்தாள். நாங்களும் வெகு சீக்கிரம் சுத்த ஆங்கிலம் நன்கு பேசக் கற்றுக்கொண்டுவிட்டோம். எங்களுக்கெனக் 'கதைகள்' நிறைந்த சில ஆங்கிலப் பத்திரிகைகள் வரவழைத்துத் தந்தாள் அவள். கதை படிப்பதில் ருசி தட்டிவிடுமாகில், சாப்பிடவோ தூங்கவோ நேரமிருக்குமா? 'ப்ாவலோவனு' 'டியூஷன்' முடிவதுதான் தாமதம்; பத்திரிகையும் கையுமாக ஏகாந்தமான ஸ்தானமொன்றை அடைந்து விடுவோம். இருவரும் எதிரும்புதிருமாக உட்கார்ந்து கதை படிக்க ஆரம்பித்துவிடுவோம். சிரிப்பூட்டக் கூடிய ருசிகரமான சம்பவம் ஏதாவது ஒன்று அகப்பட்டால், இருவரும் பரிமாறிக்கொண்டு சிரிப்போம். பிறகு படிப்பில் மூழ்கி மௌனம் சாதித்து விடுவோம்.

இவ்வளவு நாள் தாயை விட்டு அதிகம் பிரியாதிருந்த லீலா, எங்களிருவருடனும் நெருங்கிப் பழக ஆரம்பித்திருந்தாள். என் தந்தை 'கிராத்ஸ்வேட்' பள்ளியில் ஆறுவது வகுப்பில் என்னைச் சேர்த்துவிட்டார். ஆரம்பத்தில் பள்ளிக்கூடம் போவது என்றாலே பயமாயிருந்தது. பள்ளி சென்றாலும், ஒருவருடனும் ஒன்றும் பேசாமல் ஒரு மூலையில் நின்றுகொண்டு கண்ணைப் பிசைந்த வண்ணமிருப்பேன். பள்ளிக்கூடம் விட்டு வந்ததும் ராஜுவுடனும் லீலாவுடனும் விளையாடுவதில் ஈடுபட்டு ஆனந்தமெய்துவேன். பள்ளிபோகும் சிரமத்தை ராஜுவிடம் கூறி வருந்துவேன். பள்ளிக்கூடத்துப் பெண் குழந்தைகளும் சரி, உபாத்தியாயினிமார்களும் சரி, என்னை மிகவுப் நேசமாகப் பார்த்து வந்தனர். பெண்களுக்கு என்னுடன் கூடிக் குலாவிப் பேச வேண்டுமென்ற அவா. நான் இச் சிறு வயதில் இவ்வளவு அழகாக ஆங்கில மொழி பேசுகின்றேனே என்ற எண்ணமோ, அல்லது என் அழகிய உருவத்தில் லயித்து விட்டேனரோ, தெரியாது.

'அந்தோ! இப்பிரும்மாண்டமான உலகத்தின் ஆந்தரீகமான ஆத்மாவை அடைவதற்குக் கடவுளின் அறிவு என்னும் பள்ளியில் சேருவதற்கு—எந்த இரகசியமொழி அவசியமானதோ அது, ஆங்கிலம் பயிலுவதனாலோ ஸம்ஸ்கிருதம், லத்தின், கிரேக்கமொழிகளைக் கற்பதனாலோ, ஏற்பட்டுவிடக்கூடியதல்ல. ஆங்கிலம் பிரெஞ்சு மொழிகள் பயிலுவது என்பது மிக எளிய காரியம். கடவுளைப் பெறும் அந்த நுண்ணிய அறிவு, கல்வி வாஸனையே அற்ற கிராமத்துக் குடியானவ மகளிர்களிடத்தும் நிரம்பியிருக்கக் கூடும் என்ற விஷயத்தை இந்த உலகிற்கு எப்படித் தெளிய வைப்பது?

நல்லது. வீணாக வளர்த்திக்கொண்டுபோய் வாசகர்களைப் பொறுமை இழக்கச்செய்வானேன்! பள்ளிப்படிப்பில் மூன்று வருஷங்களைக் கழித்துவிட்டேன். இந்நாட்களில் நான்பெற்ற கல்வி திருப்திகரமானதாகவே இருந்தது. உலகத்துப் போக்கில் மெய்ம் மறந்திருந்த எனது உள்ளத்தின் ஒரு மூலையில் ஒரு இன்ப வேதனை எழுந்து, சில சமயங்களில் தொந்தரவு படுத்தும். பூங்காவில் உட்கார்ந்துகொண்டு மாலைக் கதிரவனின் தங்க ரேகைகளைப்பார்த்த வண்ணம் அமர்ந்திருப்பேன். அந்தப் பழைய இன்பவேதனை என் உள்ளத்துள் தன் ஜாலவித்தைகளைக் காட்ட ஆரம்பிக்கும். 'மன்மத பாணத்தினால் மயங்கிய அரசிளங்குமாரர்களும், அரம்பையர்களும் கூடி, காதல் வெள்ளத்தில், மிதமிஞ்சி லீலைகள் புரிவதுபோலவும், அவ்வெள்ளத்து அலைகள் என்னையும் பற்றியிழுக்க வருவதுபோலவும், ஹிருதயம், அழகு, முதலியன இருந்தும் நான் அந்த இன்ப லீலைகளினின்றும் ஏமாற்றப் பட்டவள் போலவும், தோன்றும். அச்சமயம் என் உள்ளத்தெழும் கிளர்ச்சிகளை—காலைத் துயில் எழும்பொழுது என்னுள்ளத்திலிருந்து வெளிக்கிளம்பும் அந்த இன்ப வேதனையின் பெருமூச்சை—வர்ணிப்பது எப்படி என்றுதான் தெரியவில்லை.

ராஜுவிடமுள்ள பற்றுதல் குறைய ஆரம்பித்துவிட்டதோ என்ற அச்சம் உண்டாகிறது. எங்களது பழைய விளையாட்டுப்பரிகாசம், கோபமூட்டுதல், முதலியன இன்னும் போகவில்லை. காகிதத்தைப் பொத்து அவன் காதில் மாட்டி 'கழுதை' என்று கைகொட்டுவேன், ஒரு சமயம். படிப்பில் முனைந்திருக்கும் சமயமாகப் பார்த்து எழுந்திருக்கச் சொல்லி நாற்காலியை நகர்த்திவிட்டு உட்காரச்சொல்லுவேன். அவன் 'தொப்' பென்று கீழே விழுந்து விடுவதைப் பார்த்துச் சிரிப்பேன், இன்னொரு சமயம். அவன் முணுமுணுத்துக்கொண்டே எழுந்திருப்பான்.

பிரெஞ்சு பாஷையில் 'ஆபாம் தெரிப்ள். (Entrant Terrible) என்று திட்டுவான். அச் சமயம் நாங்கள் 'பிரெஞ்சு' கற்க ஆரம் பித்திருந்தோம். நான் கையை மடக்கிக் கொண்டு முதுகில் ஒரு குத்துவிடுவேன். அவன் திருப்பிக் குத்து விடுவான். இக் குத்துச் சண்டையைக் கண்டு பயந்து லீலா அம்மா விடம் ஓடிப் புகார் சொல்லுவாள்.

இம்மாதிரி ஸந்தர்ப்பத்தில் ஒரு நாள், லீலாவின் தூதுகாரணமாக அம்மா மெது வாகக் குத்துச் சண்டையைக் கவனிக்க வந்து விட்டாள். அம்மாவைக் கண்டாலே எங் களுக்குச் சிம்ம ஸ்வப்பனம். சண்டையை நிறுத்திவிட்டு அசையாமல் நின்றோம், நாங் களிருவரும். அம்மாவும் கோபவிழி விழித்த வண்ணம் சில நிமிஷங்கள் நின்றபின் கூறி னாள்—"தேவலே, லஜ்ஜா, தேவலே! பேஷ் ராஜு நீயும் ரொம்ப கெட்டிக்காரனைகப் போய்விட்டாயே! இதுதான் நீங்கள் படிக்கிற படிப்போ! எங்கேயப்பா போய்விட்டாள் அந்த ஸ்ரீமதி 'பாவலோவனு'? அந்த முண் டைக்கு இருநூறு ரூபாய் மாதந்தோறும் கொட்டுகிறது இதற்குத் தானே? இந்தக் கோட்டான்கள் செய்யும் அட்டூழியத்தைக் கவனிக்க நாதியில்லே! எல்லாம் அவர் கொடுக்கிற இடம்தான். அடியாதமாடு படி யாது, என்பார்களே, சரியாகத்தானிருக்கிறது. அந்த வெள்ளைக்காரி முண்டை கொடுத்து வைத்தவள்தான். ஒரு வேலைவெட்டி கிடை யாது. ஊர் சுற்றுகிறது—அதுவும் மோட் டாரில், ஆட்டம்—பாட்டம்—டீபார்ட்டி என்று எங்கேயாவது போகிறது. பிரதி மாதமும் அடித்த அடியில் 200 ரூபாயை வாங்கிப் பாங்கியிலே போடுகிறது, நன்றாகத்தானி ருக்கிறது."

அந்த வெள்ளைக்காரியைக் கண்டால் அம்மா வுக்குச் சிறிதும் பிடிக்காது. அப்பாவிற்கும் அவளுக்கும் ஏதாவது அனுசிதமான சம்பந்தம் இருக்குமோ என்ற சந்தேகம்தான் இதற்கெல் லாம் காரணம். இது எவ்வளவு தூரம் உண்மையாக இருக்குமோ, எனக்குத் தெரி யாது. தந்தையிடம் எனக்கு ஒரு அலாதிப் பற்றுதல். அவரது நுண்ணறிவு, கனிந்த உள் ளம், இனிய ஸ்பாவம் இவை என்னை வசிகரித் திருந்தன. அம்மாவிடம் எனக்குப் பேசவே சங்கோசமாயிருக்கும். அப்பாவிடம் இரகசிய மான விஷயங்களையும் விட்டுக்கூற வெட்கப் பட மாட்டேன்.

அம்மாவின் அதட்டல் உருட்டல்கள் எங்க ளுக்குப் பழகிவிட்டன. அவைகளைப் பொருட் படுத்துவதேஇல்லை. அம்மா அதட்டி விட்டு நகர்ந்ததும் நாங்கள் உரக்கச் சிரித்தோம். லீலாவைக் கூப்பிட்டு 'அம்மாவிடம் போய் ஏனடி சொன்னாய்! அம்மா எங்களை அடித்து விட்டால்...........' என்றேன்.

'நீ அண்ணாவைக் குத்தினையே! எனக்குப் பயமாயிருந்தது. அதனால்தான்' என்றாள் அவள்.

'இனிமேல் உன் அண்ணாவை அடிக்கவில்லை. அம்மாவிடம் போய் இந்தமாதிரி யெல்லாம் ஒன்றும் சொல்லிவைக்காதே.'

'இனி சொல்லவில்லை' என்று ஒத்துக்கொண் டாள் அவள்.

4

எனது தந்தை இந்தியாவிலிருக்கும் பெரிய பெரிய தேசீயக் கம்பெனிகளிலும், மில்களி லும் 'ஷேர் ஹோல்டரா'க இருந்துவந்தார். ஐக்கிய மாகாணத்துக் கோடீச்வரர்களில் அவ ரும் ஒருவராகக் கருதப்பட்டுவந்தார். இங்குச் சில வருடங்களாக அரசியல் விஷயங்களில் ஈடுபட ஆரம்பித்திருந்தார். மாகாணத்தி லுள்ள பெரும் பெரும் தலைவர்கள் எல்லாம் அவரிடம் ஆலோசனையைப் பெற்றுப் போகும் பொருட்டு வந்துபோக ஆரம்பித்தனர். லோகமான்ய திலகர் கடைசி முறையாகச் சிறையிலிருந்து விடுபட்டு ஸ்வராஜ்யக் கோரிக் கையை வெளியிட்டாரே, அந்தச் சமய முதல் தான் அப்பா, தீவிரமாக அரசியலில் இறங்கி னார். உடனே 'விலாஸ பவனம்' என்ற அவ ரது மாளிகை 'ஸ்வராஜ்ய பவனம்' என்ற புதுப் பெயருடன் விளங்கலாயிற்று. தேசீய சங்கங்களுக்கு உதவி, பொதுக் கூட்டங்களில் பிரசங்கம், முதலிய காரியங்கள், அவரது பெயரை நாடு பூராவும் பரப்பின. அம்மாவை யும் தேசீய ஸேவையில் இறங்குமாறு வற் புறுத்தினர். சிறிது சிறிதாக என்தாயும்


# ஹோமியோபதி

என்னும் நவீன வைத்திய சாஸ் திரத்தைத் தமிழிலோ, ஆங்கிலத் திலோ தங்கள் வீட்டிலிந்தே படித்துத் தேர்ச்சி பெற்று, தாங்கள் டாக்டராகலாம். முழு விபரங் கள் அடங்கிய தமிழ் அல்லது ஆங்கிலப் பிரகடனத்திற்கு எழுதவும்.

★

## இந்தியன் ஹோமியோபதி இன்ஸ்டிடியூட்

டவுன் எக்ஸ்டென்ஷன் கும்பகோணம்.

தென் இந்தியாவின் தலை சிறந்த ஹோமியோபதி ஸ்தாபனம்.

தேசிய வேலையில், குடும்பக் கவலையையே மறந்து, மூழ்கிவிட்டாள். அதன் காரணமாக, முன்னிருந்த தாதி நீக்கப்பட்டாள். எங்களை நன்கு கவனித்துக்கொள்ளும் பொருட்டு, மாதமாஜேஜல் மார்யா பாவலோவனு என்ற 'கவர்னஸ்' நியமிக்கப்பட்டாள்.

ஜாலியன்வாலாத் தோட்டத்தின் ரத்தத்தைக் கொதிக்கவைக்கும் சம்பவம், தேசத்தில் ஆத்மத்தியாகத்தின் உணர்ச்சியைத் தூண்டிவிட்டிருந்தது. இந்தச் சம்பவம், இந்திரபுரியின் இன்ப நினைவுகளில் மூழ்கியிருந்த எனது இளம் இதயத்தில் அவ்வளவாகத் தைக்கவில்லை. ஆனால் ராஜுவை அக்கினிப் பிழம்பாக மாறச் செய்துவிட்டது. பதினைன்கு வயது நிறைந்திருந்த—ஆங்கிலோ—இந்தியன் பள்ளியொன்றில், கல்வி பயின்றுவந்த—ராஜு பள்ளிப் படிப்பை உதறித் தள்ளிவிட்டு, ஒத்துழையாமை இயக்கம் ஆரம்பிப்பதற்கு முன்பே, ஒத்துழையாதவனாக மாறிவிட்டான். சிறுவயதிலேயே அரசியலின் மிகச் சிக்கலான கிரந்தங்களைக்கூட படிக்க ஆரம்பித்துவிட்டான்.

இவ்வளவு நாட்களாகக் கதைகளை மட்டும் படித்துவந்த ராஜு, கம்பீரமான விஷயங்களையும். ஆழ்ந்து பொறுமையுடன் படிக்கலானான். இச்சிறு வயதிலேயே, 'வேதாந்தம்', 'தரிசன சாஸ்திரம்', 'சரித்திரம்', 'பிஸிக்ஸ்,' 'கெமிஸ்ட்ரி', 'பயாலஜீ' இன்னும் வைத்திய சம்பந்தமான இதர நூல்களையும் சோர்வின்றிப் படித்துத்தெரிந்துகொள்ளலானான். இம்மாதிரி சிறுவயதில் கம்பீரமான விஷயங்களைப் படித்துத் தெரிந்துகொள்ளவேண்டும் என்ற அவா ஏற்படுவது மிகவும் சிலாகிக்க வேண்டிய விஷயம்தான்.

அவனது கூரிய புத்தி, ஞாபக சக்தி, அறிய வேண்டுமென்னும் அவா, இவைகளை என்னவென்றுரைப்பது? 'அவனது ஒவ்வொரு நிமிஷமும் வீண்போவதில்லை' என்பதை அவனையறிந்தவர்களெல்லோருமே கூறுவார்கள். திடீரென அவனை இலக்கிய விசாரம் குடிகொண்டது. உலகத்து இலக்கியங்களில் மிகப் பழைமையான செல் அரித்த க்ரந்தங்கள் முதற்கொண்டு, இன்றுவரை வெளிவந்துள்ள புதுப்புதுப் புத்தகங்களைக்கூட, ஒன்றுவிடாமல் அவன் படித்துவிட்டான். தேசியம் வலுத்திருந்த எங்களது குடும்பத்தில். தேசிய பாஷையான ஹிந்திப் புத்தகம் ஒன்றுகூட கிடையாது. பிரெஞ்சு—ஆங்கிலத்தின் கண்கவர் பத்திரிகைகளும் புத்தகங்களும் அலமாரி, அலமாரியாக நிரம்பியிருந்தன. ராஜு வெகு சீக்கிரத்தில் ஹிந்துஸ்தானி பாஷையை நன்கு பயின்று நாலைந்து பத்திரிகைகள்கூட வரவழைக்க ஆரம்பித்துவிட்டான். திடீரென ஒருநாள், 'உலக நாகரிகம்' என்ற தலைப்பில், எதுகை மோனை ஒன்றும் சரியாக அமையாத கவிதை ஒன்றை எழுதிக்கொண்டு என்னிடம் வந்தான், அவன். அவனது இப்புதிய மனப்போக்கைக் காண, எனக்கு ஒரே சிரிப்பாய் வந்தது. நான் அவனைக் கேலி செய்தேன்.

உடனே, அப்பாவிடம் கொண்டுபோய் அதைக் காட்டினான். அப்பா, மிகச் சந்தோஷத்துடன், அதைப் படித்துப் பார்த்துவிட்டு, 'இந்தா வெகுமதி இதற்காக ஆயிரம் ரூபாய்' என்று ஊக்கமளித்து, 'செக்' எழுதிக்கொடுத்துவிட்டார். தம்பியின் இப்பெருமையில் நானும் பெருமை அடைந்தேன். ஆயினும், பெண்களுக்கு இயற்கையான துவேஷம் என் மனத்துள் குடிகொண்டது, என்பதை நான் மறைக்க விரும்பவில்லை.

'உலக நாகரிகம்' என்ற தனது கவிதையின் உள்ளர்த்தத்தை விளக்கிக் கூறுகிறேன்' என்று கூறி என்னைத் தன் அறைக்கு அழைத்துச் சென்றான் ராஜு. 'எஸ்ஸீரியா, பெபிலோனியா, எகிப்து, ருமானியா முதலியவற்றின் பண்டைய நாகரிகத்தைப்பற்றி அவன் வெகு நுணுக்கமாக ஆராய்ந்திருந்தான், என்பது அவனது பேச்சினின்றும் தெரியவந்தது.

உலக நாகரிகம் என்ற பேய்ச்சக்தி என்ன என்ன வெறியாட்டம் ஆடியிருக்கிறது! உலகப் பிரசித்திபெற்ற 'ஈபேல் டவரை'க்காட்டிலும் பெரிய ஸ்தூபிகள்; மைல் கணக்காகச் சென்றிருக்கும் விஸ்தாரமான ராஜவீதிகள்; ஆட்டம்—பாட்டம், மிருக இச்சை, இவைகளைப் பூர்த்தி செய்துகொள்ளும் பொருட்டு அமைக்கப்பட்ட பெரும் பெரும் இன்ப மாளிகைகள்; வாழ்வின்பத்தையே அறியாத—பிறவிச் சுதந்திரத்தினின்றுமே ஏமாற்றப்பட்ட—எண்ணிலடங்காத ஆண் பெண் அடிமைகளை நடுக் கடைத்தெருவில் பேரம்செய்து விற்றல்—வாங்கல்; முதலிய அநேக இரகஸியமான, ருசிகரமான சரித்திர உண்மைகளைத்தெளிவாக விளக்கிக் கூறிவிட்டு மறுபடியும் கூறலானான். —"ஏழாயிரம் வருடங்களுக்கு முன்பே, இந்த எஸ்ஸீரியன் நாகரிகம் என்ற பேய் மனித வாழ்க்கையின் ஆனந்தத்தைப் பிடுங்கிக் கொண்டு விட்டது! எகிப்தியன் நாகரிகம், பயங்கரப் பாலைவனங்களின் ஜனசஞ்சாரமற்ற பகுதிகளில், பயங்கர உருவம் படைத்த 'பிராமிட்' சிலைகளை அமைத்து 'நரபலி' இட்டதே! அதே நாகரிகம்தானே, 'பாரோ' வம்சத்தார்களது குருட்டு நம்பிக்கையைப் பூர்த்தி செய்வதற்காக மனித உள்ளத்தையே சாறுகப் பிழிந்து எறிந்தது! ருமானியாவில் 'காலீஜியம்' போன்ற இன்ப விடுதிகள், தனவந்தர்களைத் திருப்திசெய்யும் காரியத்தில் இறங்கி அனேக ஏழைகளையும் அடிமைகளையும் வதைக்கவில்லையா! 'கைஸர்' போன்ற அதிகாரவர்க்கத்தினர் தம் ராஜ்யத்தை விஸ்தரிக்கும் நோக்கத்தில் யுத்த தேவதையை ஆவாகனம் செய்து கணக்கிற்கடங்காத மானிடர்களைப் பலிகொடுக்கவில்லையா? அது முதற்கொண்டே மானிட ஜாதி புண்பட்டு, எழுந்திருக்கமுடியாமல் கிடக்கிறது! நாகரிகத்தின் வாயிலிருந்து தற்காலம் எழும் விஷச்சிரிப்பும் முன்காலத்திலெழுந்த கர்ஜனையின் எதிரொலிதான். நமது தர்ம கிரந்தங்கள், 'கடவுள் கருணைக் கடல்' என்று முறையிடுகின்றனவே!



சென்னை-600 008

ஆனால் அக்கடவுள் மானிட ஜாதிக்கு நாகரிகப் பேய் இழைக்கும் இந்த அட்டூழியங்களைக் கவனிப்பதாகத் தெரிவில்லையே! கடவுள் செய்யும் இக்காரியத்தைக் 'காருண்யம்' என்றால் 'காருண்யமின்மை' என்ற சொல்லிற்கு அர்த்தமென்ன? 'எல்லாம் கர்ம பலன்' என்ற ஒரு கொள்கையிருக்கிறதே, அது சாரமற்றது. படிப்பு வாஸனையேயற்ற, அப்பாவி மானிடர்களுக்கு—அதுவும் பாவம், புண்ணியம் ஒன்றுமே அறியாத எளிய ஸ்வபாவம் வாய்ந்த மானிடர்களுக்குக்—'கர்ம தண்டனை' என்று அளித்து ஏமாற்றுவது ஒரு பொழுதும் நியாயமாக ஆகாது. 'கர்ம தண்டனை' என்று கூறி அவர்களை ஏமாற்றுவது பெரும் அநீதியாக ஆகும்".

இதைக் கூறிக்கொண்டிருந்த ராஜு. உலகையடக்கியாளும் கண்ணிற்குப் புலப்படாத சக்தியின்பால் கோபத்தைக் காட்டிக்கொண்டு மேலும் கூறலானான்—"இவைகளையெல்லாம் யோசிக்குங்கால் 'பித்தன்' போலாகிவிடுகிறேன். மனித வாழ்க்கையென்பது என்ன! மனிதனின் சிக்கறுக்கமுடியாத இயல்பின் நியமமென்ன! ஒருவன் பத்து வருஷம் வாழ்கிறான். இன்னொருவன் நூறு வருஷம் வாழ்கிறான். இதில் புதைந்துகிடக்கும் இரகஸியம் யாது? அரசியல் பேச்சு, சமூகச்சீர்திருத்தம் இலக்கிய ரஸனை, தேச சேவை, உலக சமாதானம், உலக வெற்றி இவைகளில் ஈடுபட்டால் மனிதன் முன்னேற்றமடைந்துவிடுவானா என்பது போன்ற விஷயங்களில் என்னுள்ளம் தடுமாறுகிறது, அக்கா. உலகத்துச் சிறந்த அறிவாளிகளின் இலக்கியங்களைப் படித்தேன். ஆனால் உலகத்தில் வியாபித்திருக்கும் இந்த அநீதிக்கு முன், அவரது வார்த்தைகள் நிற்க மாட்டேன் என்கின்றன. உலகத்துப் பழைய புதிய தலைவர்கள், சிருஷ்டி தத்துவம் அனைத்தும் தம் கைக்குள் அடங்கியிருப்பதாகக் கனவு காண்கின்றனர். இந்தப் புவியில் பேய்புரியும் அட்டகாசத்தை அறிந்துகொள்ள முயற்சிசெய்யாமல் மானிடஜாதிக்கு ஏதோ நன்மை செய்வதாக எண்ணி, இறுமாப்புக் கொள்ளும் தலைவர்கள் மானிடஜாதிக்குத் தீங்குதான் இழைக்கின்றனர் என்று எனக்குத் தோன்றுகிறது.

அவா, அச்சம், ஆச்சரியம், அளவற்ற மகிழ்ச்சி, இவை உள்ளத்துள் நிரம்ப, அவன் பேச்சை ரஸித்தேன். 'விசித்திர குணம்வாய்ந்த எனது சகோதரன், இரவு - பகல் போன்று சுழன்று கொண்டிருக்கும் சுகம், துக்கம் என்ற சக்கரத்தில் சிக்கிச் சுழன்றுகொண்டிருப்பதற்காகப் பிறந்தவனல்ல. அவனது சிந்தனைப் பிரவாகம், அறிமுகமற்ற ஒரு உலகத்தின்பால் பாய்ந்து கொண்டிருக்கிறது' என்பதைக் கண்டு என் மனத்துள் ஒரு கலக்கம் ஏற்பட்டது. வாழ்வென்னும் இச்சிறுசக்கரத்துள் அவனை உழலவைக்கவெண்ணினேன். ஆனால் அக்கட்டினின்றும் விடுபட்டுச் சுயேச்சையை அவன் விரும்பினான். அது என் மனத்தை என்னவோ செய்து கொண்டிருந்தது. (தொடரும்)




**உங்கள் கூந்தலைக் காப்பாற்ற மூலமந்திரம்**

உங்கள் கூந்தலைக் காப்பாற்றுவது உங்கள் கையிலேதான் இருக்கிறது......மிகவும் எளிதான முறை, ஆயினும் உங்கள் கூந்தலை இயற்கையாக வளர உதவியளித்து, அதன் அழகைக் காக்கும் தன்மை வாய்ந்தது. ஒரு பாட்டில்

## காமினியா ஆயில்

(ரிஜிஸ்டர்டு)

இந்த வித்தையைச் செய்யும். ஒருமுறை உபயோகித்தால் மறக்கமுடியாது. அதன் நிகரற்ற மணம் அதைத் தேடிச்செல்லத் தூண்டும்

வி. பி. சார்ஜ் பிரத்தியேகம். ஒரு அணா தபால் தலை அனுப்பினால் சாம்பிள் அனுப்பப்படும்.

## ஆட்டோ டில்பகார்

(ரிஜிஸ்டர்டு)

மணங்களுக்குள் தலைசிறந்த அரசன். இதன் வசீகர மணம் நிகரற்றது. மதுசார சம்பந்தமற்றது.

**எங்கும் கிடைக்கும்**

வி. பி. சார்ஜ் பிரத்தியேகம். 2 அணா தபால் தலை அனுப்பினால் சாம்பிள் அனுப்பப்படும்.

சோல் ஏஜண்டுகள் :

**ஆங்கிளோ - இந்தியன்**
**டிரக் & கெமிகல் கம்பெனி,**
**பம்பாய்—2**

*ஓர் கற்பனைத் திட்டம்*

# "தாம்பத்திய தண்ட விதாயகம்"

எம். எஸ். கமலா

'ஸ்திரீ ஸ்வதந்த்ர ரக்ஷணி சபா' என்று படிக்கும்போதே திடுக்கிடுகிறீர்களா? ஆம், ஸ்திரீகளுக்கு சுதந்திரம் வேண்டும் என்று சில சீர்திருத்த வாதிகள் சொல்கிறார்கள். சிற்சில ஸ்திரீகள் சங்கங்களில் பேச்சுகள் கிளம்புகின்றன. பகிரங்கமாய்ப் படித்த பெண்கள் மேஜையை அடித்துப்பேசுகிறார்கள். இதை எல்லாம் அடுக்குள் நாட்டுப் பெண்களாகிய நாம் படித்து மகிழ்கிறோமே ஒழியக் கிரியாம்சையில் காண்பிப்பதில்லை.

'ஸ்திரீகளாகிய நமக்கு ஒன்றும் தெரியாது, சாதுக்கள், அடுக்குள் பூச்சிகள், இன்னும் அதிகமாய் சொல்லப்போனால் கர்ப்பக் கிருகங்களின் மூலைகளில் இருட்டில் தொங்கும் 'வௌவால்' கூட்டங்களுக்கிணையாய் நினைத்துக் கொண்டு நம்மீது மிகவும் அனியாயம் செய்கிறார்கள். இம்மாதிரி நமக்கு த்ரோகம் செய்யும் புருஷர்களின் எண்ணிக்கை அதிகமாய் விட்டது. படித்த ஸ்திரீகளிடம் பல்லிளிப்பது, படிக்காத நம்மைப்போன்ற கிருகிணிகளைக் கவனிப்பதே இல்லை, இவர்களுக்குப் பசித்த போது பக்குவமான ருசியுள்ள ஆகாரம், அவர்கள் இச்சிக்கும்போது...............பிறகு ஒரு சம்சாரத்தைப் பல கஷ்டநஷ்டங்களுக்கிடையில் வாயை மூடிக்கொண்டு கௌரவம் என்னும் போர்வையைப் போர்த்துக் கட்டியிருக்கவேண்டியது, பிறகு நம்மைப்பற்றி அவர்கள் கவனிப்பதே இல்லை. நமது புராதனமான ஸ்வதந்திரத்தைப் பிடுங்கிக்கொண்டு வருகிறார்கள். ஒரு புருஷனாவது தனது ஸ்திரீயின் கட்டளைப்படி நடப்பதே இல்லை. ஸ்திரீகளின் ஸ்வதந்திரத்தை நிலைநிறுத்துவதற்காக "ஸ்திரீ ஸ்வதந்திர ரக்ஷணி சபா" என்ற சங்கம் ஸ்தாபிக்கப்பட்டிருக்கிறது.

இந்தச் சபாவைப்பற்றி இப்போது அதிகமாய் அறிந்துகொள்ளமுடியாது. பின்னால் பல அறிக்கைகள் மூலம் இதைப்பற்றிய விவரங்கள் தெரிவிக்கப்படும். ஆனால் இப்போது முக்கியமாய் நமதுஸ்வதந்திரத்தைக் காப்பாற்றுவதற்காக ஓர் உபாயம் கண்டுபிடிக்கப்பட்டிருக்கிறது என்பதை மட்டும் சொல்லிவிடுகிறேன். இதற்காக நாம் இந்திய அரசாங்கத்தாரின் "தாம்பத்திய தண்ட விதாயகம்" என்னும் சட்டத்தின் நகலொன்றையும் அனுப்பி இருக்கிறோம்.

எல்லோருடைய எல்லா வஸ்துக்களுடைய சுதந்திரத்தைக் காப்பாற்றுவதற்காகவும், புதிது புதிதாய்ச் சட்டங்கள் இயற்றப்படும் போது நம்முடைய பழங்கால ஸ்வதந்திரத்தைக் காப்பாற்றிக்கொள்வதற்காகச் சட்டங்கள் இயற்றமுடியாதா என்ன? கூடிய சீக்கிரம் இந்தச்சட்டம் அரசாங்கத்தாரால் அங்கீகரிக்கப்படும் என்ற நம்பிக்கை இருப்பதாலும் இதைப் புருஷர்கள் அறிந்துகொள்ளவேண்டியது அவசியமாகையாலும் இதைத் தமிழ்த் 'தரிசனத்துக்கு' அனும்புகிறேன். பெரிய மனிதர்கள், பணக்காரர்கள் என்று நாம் நினைக்கும் ஜமீந்தாரர்களில் பலர் ஆங்கில பாஷையில் இயற்றப்பட்ட சட்டங்களை அதிகமாகப் புரிந்துகொள்ளமாட்டார்கள்.

இந்தச் சட்டம் முதலில் ஆங்கில பாஷையில் இயற்றப்பட்டது. பிறகு மொழி பெயர்க்கப்பட்டு அது ஆபாசமாய் முடிந்தது. பல இடங்களில் மொழிபெயர்ப்பு மூலத்திலிருந்து வேறுபட்டுக் காண்பதால் மொழிபெயர்ப்பைப் புராதனக்கொள்கைகளுடனும் அனுப்புகிறேன். நீங்கள் தயவுசெய்து பேதத்தையொழித்துப் பிரசுரிப்பீர்களென்று நம்புகிறேன்.

ஸ்ரீமதி அமிர்த சுபாஷிணி தேவி,
காரியதரிசி,
"ஸ்திரீ ஸ்வதந்திர ரக்ஷணி சபா"

குறிப்பு:— இதைப் பார்க்கும்போதே ஜனங்கள் இதில் புதியதாய்ச் செய்த சட்டங்களொன்றுமில்லை என்பதை நன்கறிவார்கள்.

2

இதைத் தமிழ்த் தரிசனத்துக்கு அனுப்பும் போது படித்த 'ஸானாலினி' "நமது புராதனமான ஸ்வதந்திரத்தை" என்கிறாயே! புராதன காலத்தில் என்ன நாம் பகிரங்கமாய் வாழ்ந்தது?' என்கிறாள் இந்த நவீன யுகத்தில் பிறந்த ஸானாலினி.

அவள சொல்வது சுத்தத் தப்பு. புராதன காலத்தில் எந்த ஸ்வதந்திரமில்லாமலிருந்தது? ராமருக்கு வனவாசம் விதித்ததால் ஸீதையும் அவரை விடாமல் பின்பற்றினாள். அதனால் தான் அவள் அவ்வளவு அரக்கர்களையும் அரண்யங்களையும் பார்க்கநேர்ந்தது. திரௌபதி ஐந்து கணவர்களை மணக்கவில்லையா? கார்க்கி கன்னிப்பெண்ணாய் வாழவில்லையா? 'ஸம்யுக்தை' தன் தந்தையின் சத்துருவான 'பிருத்வியை' வரிக்கவில்லையா? எவ்வளவோ அடுக்கிக் கொண்டு போகலாம். விஷயத்துக்கு வருவோம்.

### அத்தியாயம் 1

### முகவுரை

வக்கிர புத்தியும் மூர்க்கத்தனமுமுள்ள கணவன்மார்களையும், ஸ்திரீகளின் ஸர்வாதிகாரத்தை ஆட்சேபிக்கும் இதரர்களையும் அடக்கிச் சரிக்கட்டுவது அத்தியாவசியமென்று கருதப்

படுவதால் கீழ்க்கண்டபடி சட்டம் இயற்றப் படுகிறது.

பிரிவு 1

இச்சட்டத்திற்கு "தாம்பத்திய தண்ட விதாயக"ச் சட்டமென்று பெயர். கல்யாண மான எல்லாப் புருஷர்களையும் இந்தச் சட்டம் கட்டுப்படுத்தும்.

அத்தியாயம் 2

விளக்கங்கள். பிரிவு 2

கணவன் என்ருல் ஒரு ஸ்திரீயின் சர்வ உரிமைகளுக்கும் உட்பட்ட (அசையும் அசைக் கப்படக்கூடிய) ஒரு ஜங்கம சொத்து.

உதாரணம்

1. ஒரு ட்ரங்கு, அலமாரி. இவைகள் கண வனல்ல. அது அசைக்கப்படக்கூடியதாயினும் தானுக அசைய முடியாதாகையால் அது ஜங் கமமாயினும் கணவனல்ல. 'ஜங்கமம்' என் பது பிறரால்தான் அசையும்.

2. கால் நடைகள் கணவர்களல்ல.

அவை நாமாக அசைகின்றனவாயினும், எல்லா சமயங்களிலும், எந்த ஸ்திரீயினுடைய சர்வ உரிமைகளுக்கும். உட்பட்டிருப்பதில்லை. ஒவ்வொரு சமயம் கட்டுப்பாட்டை மீறும் ஸ்வபாவமுடையவையாக மாறிவிடும் குணம் அவற்றிடம் காணப்படுகிறது.

கட்டுப்பாட்டை மீறுவதென்ருல் கட்டிய கயிறு அலலது ச்ங்கிலி சற்றுமெல்லியதாயிருந் தால் அறுத்துக்கொண்டு ஓடுவதல்லாமல் சென்றவிடம் சொல்லத் தெரியாது. நாம் அலேந்து திரிந்து கஷ்டப்படவேண்டியிருக் கிறது.

3 கலியாணமான, சொந்தமாக எவ்வித அதிகாரமுமற்ற நிலைமையிலிருக்கும் மனிதர் கள்தான் கணவர்கள் எனப்படுவார்கள்.

பிரிவு 3

மனைவி என்ருல் தன் கணவன்மேல் சொத் துரிமையுடைய ஒரு ஸ்திரீ.

விளக்கம்

சொத்துரிமை என்பதில் அடக்கவும் கண் டிக்கவும் அடிக்கவும் உதைக்கவும் உரிமை உண்டென்பதும் அடங்கும். (அடி, உதை என் னும் பின்சொன்ன இரண்டும் அன்பாய்......... சமயங்களில் அளிப்பவை)

பிரிவு 4

கலியாணமானவன் என்ருல், ஆண்பிள்ளை கள் பல ஜன்மங்களில் செய்த பாவங்களுக் காகப் பிராய்ச்சித்தம் செய்துகொள்ள தாமாக (ஸ்வயமாக) ஏற்றுக்கொள்ளும் தபோநிலை என்று பொருள் படும்.

அத்தியாயம் 3

தண்டனைகள்

இந்தச் சட்டத்தின்படி குற்றம் செய்வோர் கீழ்க்காணும் தண்டனைகளுக்குள்ளாவார்கள்.

1. சிறைவாசம், படுக்கையறையின் நான்கு சுவர்களுக்குள்ளாவது, அல்லது வீட்டின் நான்கு சுவர்களுக்குள்ளாவது இந்தச் சிறந்த தண்டனை நிறைவேற்றப்படலாம்.

குறிப்பு:—இது நவீனமாய் நாங்கள் கண்டு பிடித்ததல்ல. நாம் பிறப்பதற்கு முன்பே வெகு வெகு தலைமுறைகளுக்கு முன்பே அமுலி லிருக்கிறது. நாம் கடவுளாய் வணங்கும் கிருஷ்ணரும், வீரனைப்புகழும் அர்ஜுனனும் கூட இத்தண்டனையைச் சர்வ சகஜமாய் ஏற்க நேர்ந்தது.

சிறைவாசம் இரண்டு வகைப்படும்.

1. கடுங்காவல். அதாவது வசவு திட்டுக் களுடன் கூடியது.

2. வெறுங்காவல். அதாவது அவர்கள் ஒவ் வொரு செய்கையையும் கண் காணித்து மௌனம் சாதிப்பது.

இரண்டாவது தீபாந்தரவாசம். அதாவது படுக்கை யறையைவிட்டு வெளியேற்றப்பட்டு, வேறு அறையில் தூங்கும்படி நிர்ப்பந்திக்கப் படுதல்.

மூன்ருவது-விவாக சம்பந்ததினுல் ஏற்பட்ட பராதீன நிலை.

நான்காவது பணம் காசு பறி முதல்.

பிரிவு 5

கடும் தண்டனை. தலைமைத் தண்டனை என்று இச் சட்டப்படி மனைவி தன் பிறந்தகத்திற்கோ அல்லது வேறு பந்து அல்லது சினேகிதர் விட்டுக்கோ ஓடிப் போய் உட்கார்ந்துகொண்டு, திரும்பி வருவதைப் பற்றி யோசிக்காமலே இருத்தல்.

பிரிவு 6

இச்செய்கையைப் பற்றி யாராகிலும் சொல் லிக்காட்டினுல் அவர்களைச் சத்ருஸ்தானத்தில் பார்ப்பதல்லாமல் பிரிவு 7ல் விவரித்திருக்கும் தண்டனைகள் கணவர்களைப்போல் வர்களும் ஏற்க நேர்ந்துவிடும்.

பிரிவு 7

சிறு குற்றங்களுக்குப் பின்வரும் தண்டனை களும் நிர்ணயிக்கப்பட்டுள்ளன:—

1. மனைவி இறுமாப்பும் அலட்சியமும் கலந்த மௌன விரதம் அனுஷ்டித்தல்.

2. முகாஸ்திரங்கள். அதாவது நெற்றி சுளித்தல். புருவத்தை நெறித்தல். கண்களை உருட்டியபடி அநேகவித கோபப்பார்வைகள்.

3. பேரி, ம்ருதங்க வாத்தியத்துடன் வாரு ணைஸ்திரம் அதாவது, கண்ணீர் விம்மல், விசும்புதல். அழுதல் (குரல்விட்டோ அடக் கியோ சமயானுசாரம்)

4. வெடிகுண்டு, சம்மட்டியடி, அதாவது அக்கம்பக்கம் கேட்கும்படி அதட்டுதல் வைதல்.

அத்யாயம் 4

பொதுவிலக்குக்கள். பிரிவு 8

மனைவி செய்வதெதுவும் குற்றமாகாது.

முதலில் அவள் குற்றமானது எதுவும் செய்ய மாட்டாள். தன் குடும்ப மான சம்ரக்ஷணார்த்தம் அவளால் ஆனமட்டும் கஷ்டங்களைப் பொறுத்துக்கொள்வாள்.

பிரிவு 9

மனைவியின் உத்தரவுபடி ஒரு கணவன் செய்யும் எதுவும் குற்றமாகாது.

பிரிவு 10

இந்தச் சட்டத்தின் கீழ் யாருக்கும் வேறு எந்தவிதமான காரணத்தின் மீதும் விதிவிலக்கு அளிக்கப்படமாட்டாது.

அத்தியாயம் 5

உதவியளித்தல்—பிரிவு 11

இந்தச் சட்டத்தின்படி பின்வரும் காரியங்கள் செய்பவர்கள் குற்றம் செய்ய உதவியளித்தவர்களாவார்கள். (உதவி அளித்தவர்களாகக் கொள்ளப்படுவார்கள்)

1. குற்றம் செய்யத் தூண்டுதல், உற்சாகப்படுத்தல், தைரியமளித்தல், உபதேசம் செய்தல், முதலியன.

2. அந்தக் குற்றம் செய்வதற்கு உடந்தையாக இருத்தல், அல்லது குற்றம் செய்யப்படுகையில் உடனிருத்தல்.

விளக்கம்

விவாகமாகாத ஆண், அல்லது ஸ்திரீ, உடந்தையாயிருந்த குற்றம் செய்யலாம்.

உதாரணம்

1. லக்ஷ்மியின் கணவன் கிருஷ்ணனும், பிரம்மசாரியான ராமனும் சேர்ந்து குடிக்கிறார்கள் என்றால், குடிப்பது தாம்பத்ய விதாயப்படி ஒரு குற்றம் எனவே ராமன் கிருஷ்ணனுக்கு உடந்தையான குற்றம் செய்கிறான்.

2. மீனாக்ஷி கிருஷ்ணனின் தாயார், கிருஷ்ணன் லக்ஷ்மியின் கணவன். மீனாக்ஷி கிருஷ்ணனை லக்ஷ்மியின் இஷ்டத்திற்கு விரோதமாய்ப் பணம் செலவு செய்யச்சொல்கிறாள். (பெண்ணுக்கு, மாப்பிள்ளைக்கு, பேரன் பேத்தி, எல்லாம் பெண் வம்சம்)

இப்படிப் பணம் செலவுசெய்வது தாம்பத்திய விதாயப்படி ஒரு குற்றம் ஆகையால் மீனாக்ஷி, கிருஷ்ணனுக்கு உடந்தையான குற்றம் செய்கிறாள்.

பிரிவு 12

கலியாணமான ஒருவன், கல்யாணமான மற்றொருவனை இந்தச் சட்டத்தின்படி குற்றம் செய்யத் தூண்டினால், குற்றவாளி, உடந்தையாயிருந்தவன் ஆகிய இருவருக்கும் ஒரேவிதமான தண்டனை விதிக்கப்படலாம். ஆனால் உடந்தையாயிருந்தவனைத் தண்டிக்க அதிகார்முள்ள ஒரு கோர்ட்டினால் அந்தத் தண்டனை விதிக்கப்படவேண்டும்.

குறிப்பு: 'அதிகாரமுள்ள ஒரு கோர்ட்' என்றால் படுக்கையறையில் அவன் மனைவி அளிப்பாள்.

விளக்கம்

"அதிகாரமுள்ள கோர்ட்" என்று பொதுப்படச்சொன்னால், கணவன்மேல் சொத்துரிமை வகிக்கும் மனைவி என்று அர்த்தம். (அ. 2. பி. 2 பார்க்கவும்)

பிரிவு 13

உடந்தையாயிருப்பவர்கள் ஸ்திரீகளானாலும், கலியாணமாகாத ஆணானாலும். அதட்டுதல், வைதல், திட்டுதல், கோபப்பார்வை, கண்ணீர், அழுகை முதலிய தண்டனைகள்தான் விதிக்கப்படுவார்கள்.

அத்தியாயம் 6

ஆதி பத்தியத்திற்கு (நாட்டாண்மை, செல்வாக்கு) எதிரான குற்றங்கள்.

பிரிவு 14

ஆதிபத்தியம் என்றால் இந்தச் சட்டத்தின்படி "மனைவியின் ஆதிபத்தியம்" என்றுதான் பொருள்படும்.

பிரிவு 15

மனைவிக்கு எதிராகப் போர் தொடுப்பவன், அல்லது போர் தொடுக்க முயலுபவன், அல்லது போர்தொடுக்க உடந்தையாயிருப்பவன் ஆகியவர்கள் தலைமைத்தண்டனை அதாவது மனைவி பிறந்தகம் அல்லது வேறு சிநேகிதர் வீட்டுக்குப்போதல் அல்லது தீபாந்தரத் தண்டனை, அல்லது படுக்கையறையைவிட்டு


# சேலம்

## கல்யாணப்பட்டு ஜவுளிரகங்கள் வாங்கச் சிறந்த இடம்

# ராம விலாஸ்

## 396, கடைவீதி சேலம்

★

Proprietors:

S. N. Ramaswamy Chetty & Bros.

N 42184 N44 3.10-41

வெளியேற்றப்படுதல், அல்லது கையிலிருக்கும் பணங்காசு முழுவதையும பறிமுதல் செய்யப்படும் தண்டனை ஆகிய தண்டனைக்குள்ளாவார்கள்

பிரிவு 16

மனைவியுடன் போர் தொடுக்கும்படி குழந்தைகளைத் தூண்டுபவன், அல்லது தான் போர் செய்யும்போது குழந்தைகளைத் தன் சார்பாய்ச் சேர்த்துக்கொள்பவன், அல்லது போர் செய்யக் குழந்தைகளைத் தயார் செய்பவள் ஆகியவர்கள் திபாந்திரம் அல்லது கண்ணீர் அழுகை முதலிய தண்டனைக்குள்ளாவார்கள்.

பிரிவு 17

தன் மனைவியைத்தவிர வேறு எந்த ஸ்திரீயிடமாவது ஆசைகொள்பவன் விபசாரக் குற்றம் செய்தவனாவான்.

விளக்கம்

தன் மனைவியல்லாத ஸ்திரீயிடம் அல்லது இளவயது மங்கையிடம் அனுதாபம் அல்லது ஆதரவு காட்டுபவன் அந்த ஸ்திரீயிடம் ஆசை கொண்டவனாவான்.

உதாரணம்

1. கிருஷ்ணன் லக்ஷ்மியின் கணவன். சொர்ணம் ஒரு இளமங்கை. சொர்ணத்தின் குழந்தை அழகாயிருக்கிறதென்று, கிருஷ்ணன் அதற்கு மிட்டாய், கற்கண்டு முதலியவை வாங்கிக்கொடுத்தால், இதற்குக் கிருஷ்ணன் சொர்ணத்திடம் ஆசை கொண்டிருக்கிறான் என்று வியாக்கியானம் செய்யப்படும்.

விளக்கம்

2. கணவர்கள் இந்தப் பிரிவின் கீழ்க் குற்றம் செய்திருப்பதாக மனைவிகள் கற்பனை அல்லது ஊகித்துக்கொள்ளலாம். கணவன் இந்தக் குற்றம் செய்யவில்லை என்பதற்காக விடுதலை செய்யப்படமாட்டான். மனைவிகள் கண்காணிப்பில் இருப்பான்.

3. அவன் கண்காணிப்பிற்குக் கட்டுப்படாமல் போனால் 'கைகேயியின் சாஹஸம்'என்னும் வாக்தத்தத்தைப் பெறும் மட்டும் (தாங்கள் விரும்புவதை நிறைவேற்றுவதாய்ப்பிரமாணம் செய்யும் மட்டும்) கோபாக்ருஹத்தில் கபாட பந்தன தண்டனையளிக்கப்படும்.

4 மனைவி குற்றம் சாட்டினாலே போதும், குற்றம் செய்யப்பட்டதென்பதற்குப் போதிய ஆதாரமாகும்.

5. இந்தப்பிரிவின்படி குற்றத்தைக்கற்பனையல்லது ஊகம் செய்து கொள்ளும் உரிமை பொதுவாக வயதுசென்ற மனைவிகளுக்கும், வயதான அல்லது குரூபியான கணவர்களுடைய ஸ்திரீகளுக்கும் மட்டும் உண்டு. இளம் மனைவிகளாயிருந்தால், அவர்கள் ஸ்வபாவத்திலேயே திடுஞ்சிகள் என்றாவது அல்லது செல்லமாக வளர்க்கப்பட்ட பிடிவாதக்காரிகள் என்றாவது ரூபித்தால்தான் இந்த உரிமையுண்டு.

பிரிவு 18.

விபசாரக்குற்றம் செய்பவர்களுக்கு இந்தச் சட்டத்தில் சொல்லப்பட்ட எல்லாத் தண்டனைகளும் இதில் சொல்லப்படாத இதர தண்டனைகளும் விதிக்கப்படலாம்.

அத்தியாயம் 7.

பிரிவு 19.

பட்டாளத்திற்கெதிரான குற்றங்கள்.

இந்தச் சட்டத்தின்படி பட்டாளமென்றால் பெண்கள், பிள்ளைகள், நாட்டுப் பெண்கள் என்று பொருள்.

பிரிவு 20.

பெண், அல்லது பிள்ளை, அல்லது நாட்டுப் பெண் முதலியவர்கள் கலகம் செய்ய உடந்தையாயிருப்பவன் பி. 7. வி. 3ல் சொல்லப்பட்ட தண்டனை யடைவான்.

அத்தியாயம் 8.

குடும்பச் சமாதானத்திற்குப் பங்கம் விளைவிக்கும் குற்றங்கள்.

பிரிவு 21.

கீழ்க்கண்ட உத்தேசப்படி இரண்டு அல்லது அதற்கு மேற்பட்ட கணவர்கள் கூடினால் அது சட்டவிரோதமான கூட்டமாகும். உத்தேசங்களாவன:—

1. குடிக்கவோ அல்லது சூதாடவோ, அல்லது தாம்பத்தியவிதாய விரோதமான எந்தக் குற்றமும் செய்தல்.

2. தங்கள் மனைவிகளுக்குரிய நியாயமான உரிமைகளை நிறைவேற்றிக்கொள்வதைப் பயமுறுத்தித் தடுக்கும் அதிகாரத்தைக் காட்டுதல்.

3. மனைவியின் ஆக்ஞையை நிறைவேற்றாமல் தடுப்பது.

பிரிவு 22

சட்டவிரோதமான கூட்டத்தின் அங்கத்தினனாயிருப்பவன். வசவுகளுடன் சிறைத் தண்டனை மாத்திரமன்றி, அலட்சிய மௌனம், அதட்டல் முதலிய தண்டனைகளும் விதிக்கப்படுவான்.

அத்தியாயம் 9

விஸ்கி, பிராந்தி, வைன் குடித்தல். பிரிவு 23

ஒரு புட்டியிலடைக்கப்பட்டு, ஒரு கண்ணாடி டம்ளரில் ஊற்றிக் குடிக்கப்படும் திரவ பதார்த்தங்கள் எல்லாம் மதுபான வகைகளில் சேர்ந்தவையாகும்.

பிரிவு 24

மேலே குறிக்கப்பட்ட விளக்கப்படி தன்னிடம் விஸ்கி, பிராந்தி அல்லது வைன் வைத்திருப்பவன் குடிப்பதாகக் கொள்ளப்படும்.

விளக்கம்

அவன் அதைத் தொடுவதே இல்லையென்றாலும்கூட அவன் குடிப்பதாகக் கருதப்படும். 'அதை வைத்திருப்பவன் தாம்பத்திய விதாய பரமசத்துரு.

பிரிவு 25

கலவரம் செய்தல்

மனைவியிடம் கடுமையான குரலில் அல்லது சுடுசரங்களில் பேசுபவன் குடும்பத்தில் கலவரம் விளைவித்த குற்றவாளியாவான். அவன் அழுகை கண்ணீர் இவ்விரண்டு தண்டனைக்குள்ளாவான். இது "ஸ்திரீ ஸ்வதந்தர ரக்ஷணி சபா" வால் அமுலில் வரும்.

(ஹிந்தி மூலத்தைத் தழுவி எழுதியது)

Edited & Published by N. R. Ramanujan B. A. & Printed by S. Rangaswami
at The Cauveri Colour Press, Besant Road, Kumbakonam.

# The Cauveri Colour Press

— *Leading Quality & Art Printers* —

**Consult us for all your requirements**

Marriage Invitations
Block Printing
Colour Lables
Letter Heads
Bills, Ledgers
& all other Jobs

Up to date Collection of types

— Book Printing a Speciality —

**Our Get-up & Execution second to none**

*For particulars, apply to:-*

Besant Road
KUMBAKONAM

MANAGER,
**Cauveri Colour Press.**

Regd. No. M. 4405 

17 JUN 1944

T. S. R.



டி. எஸ் ஆர்




மூளைக் குளிர்ச்சிக்கும்
கேச வளர்ச்சிக்கும்
நறுமணத்திற்கும்
நிகரற்ற தைலங்கள்

## கோகுல் தைலம்

## தேங்காயெண்ணை தைலம்

ரக ரகமான ஊதுபத்திகளும்
வாசனைத்திரவியங்களும் கிடைக்கும்

சென்னை ஸோல் ஏஜண்டு

**புஷ்பவனம் ஸ்டோர்ஸ்**

திருவல்லிக்கேணி—மதராஸ்




# T.S.R.& Co PERFUMERS KUMBAKONAM

PRINTED AT THE CAUVERI COLOUR PRESS, KUMBAKONAM.